இந்திரியாதிகளுட னாத்மாவிற் குண்டாகிய சேர்க்கையானது ஸ்வர்க்காதி தேசநியமமுள்ளதாலும் பிராணிகள்தோறும் சரீராதிகள் வெவ்வேறுபட் டிருப்பதாலும் அநித்யமா யிருப்பதாலும் புருஷன் றோறும் தனித்தனியே ஏற்பட் டிருப்பதாலும் ஜன்மாந்தரத் தொடர்ச்சி யுள்ளதா யிருப்பதாலும் அதற்குண்டாகிய காரணமு மவ்வித குணமுள்ளதென்று சொல்லவேண்டும்; காரணத்தைப்போற் காரிய முண்டாகு மாதலால்.

𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌹
𑌕𑌾𑌰𑌿 𑌤𑌦𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮
𑌨𑌾𑌮𑍍𑌨𑌾𑌸𑍍𑌯 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌦𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌤𑌃 ॥ ௧

மேலு மந்தக்காரணமானது பலங்கொடுக்க அப்பவா திரோதான சத்தியையும் ஆணவ மலமுதலானவற்றை யு மபேக்ஷிக்கிறபடியால் ஸ்வதந்திரமாகாமற் சககாரி யாயிருப்பதென்றும் செய்கையா லுண்டாகிறபடியாற் கிரியாரூபமான கன்மமென்று பேருள்ளதெனறும் சூக்ஷுமமாய்ப் பிரத்யக்ஷமா யிருக்கிறபடியா லதிருஷ்ட மென்று பேருள்ளதென்றும் சொல்லப்படுகிறது. (௧)

𑌜𑌨𑌕𑌂 𑌧𑌾𑌰𑌕𑌂 𑌭𑍋𑌗𑍍𑌯𑌂 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑌦𑌾
𑌶𑍍𑌰𑌯𑌮𑍍 । 𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑌾
𑌕𑌾𑌯𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌾𑌨𑍃𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌮𑍍 ॥ ௨

அந்தக் கன்மமானது நிமித்தமாய்ச் சரீராதிகளை யுண்டாக்குவதாயும் சரீரரூபமாய்த் தரிப்பதாயும் விஷயரூபமாய்ப் போக்யமாகவும மனோவாக்குக் காயங்களினு லுண்டானதாயும் மெய் பொய்களைக் காரணமாகக் கொண்டிருப்பதால் தர்மாதர்ம ரூபமென்றும் சொல்லப்படும். (௨)

𑌸𑍍𑌵𑌭𑌾𑌵 𑌵𑌿𑌪𑌾𑌕𑌸𑌂𑌹𑍃𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌤𑍁
𑌷𑍍𑌟𑌾 𑌵𑍍𑌯𑌪𑍇𑌯𑍍𑌯𑌜𑍍𑌯𑌤𑍇 । 𑌶𑌯𑌾𑌯𑌾𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁
𑌤𑍇𑌵𑌾𑌤𑍍𑌤𑍇 𑌨𑌾𑌶𑌂 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌚 ॥ ௩

அந்தக் கன்மமானது பிரளயத்திற் பரிணமத்தை யடைகின்றது, சிருஷ்டிகாலத்திற் போகத்திற் குப யோகமாகிறது, சங்காரகாலத்தில் மாயையிற் சம்ஸ்கார ரூபமாக விருக்கிறது, புசிக்காம லழிகின்றதில்லை. (௫)

[illegible]
[illegible]
[illegible] ௬

இவ்வாறு சொல்லப்பட்ட கன்மமானது மாயை முதற் காலமீறான அத்வாவி லுண்டாகிய சரீராதிகளை யுண்டாக்குகிறதாயும் பிரவாகாநாதியாகவு மிருக்கும். இது அநித்தமா யிருந்தபோதிலும் சேதகமாகவே யாகும், ஏனெனில்? கன்ம மிருக்கும்போது முத்தியில்லை யாதலால். (௬)

எட்டாவது, கன்மவிசார ப்ரகரணம்
முற்றிற்று.

ஸ்ரீ ஶ்லோகம்—௧௩௪.

சிவமயம்.

க—வது: மாயா ப்ரகரணம்.

[illegible]
[illegible]
[illegible] ॥ க

இனி, உத்தேச சூத்ரத்திற் சொல்லப்பட்ட மாயா பாசத்தின் லக்ஷணம், ப்ரமாணத்தாலும் யுக்தியாலும் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. (க)

[illegible]
[illegible] ।
[illegible] ॥ உ

அம்மாயையானது ஒன்றாகவும் மயக்குவதாற் சிவமாகவும் பிரபஞ்சத்திற் குபாதானமாகவும் பலவேறுபட்ட சத்தியுள்ளதாகவும் சககாரிகளான கன்மங்களினதிகாரவணாயி லாத்மாக்களை மறைப்பதாகவும் வியாபகமாகவும் நித்தியமாகவு மிருக்கும். (உ)

சில யுக்திகளாலும் மாயை யுண்டென்கிறார்.

[illegible]
[illegible] ।
[illegible] ॥ ௩

ஜகத்து உற்பத்தியுள்ளதென்னும் யாதொரு ஏதுவினாலே கர்த்தா அநுமிக்கப்படுகிறாரோ அவ்வேதுவினாலேயே அதற்குபாதானமாகிய மாயையுமுண்டென்று சொல்லவேண்டும்; தந்துமுதலான வுபாதான காரணமன்னியில் படமுதலான காரியம் பிறவாததலால். (௩)

ததைவ தஜ்ஜடஸ்யாஸ்ய கார்யஸ்யா
விஶ்வரூபிணாஸ் । ப்ராப்தஸ் ஸ்வரூபஸம்பா
தோஷ காரணா மியமோந்யா ॥ ௪

பின்னு மம்மாயையின் காரியங்களெல்லாம் ஜடங்களாகையா லதனையும் ஜடமென்றே சொல்லல்வேண்டும். அவ்வாறு சொல்லாவிடிற் காரியகாரண நியமபங்கமென்னும் பெருங்குற்றம் வரும். (௪)

யத்ப்ரவ்ருத்திம் கார்யம் க்ஷோபாத்யாப
த்ரவ்யேத் பந்த் । ஸர்வாவிமேஷு க்ஷந்த
ஸத்ஸு ஸர்வாஸு ஸமேவஷாம் ஸம்பந்தோ
ஜந்வேத ॥ ௫

இம்மாயை பிரளயத்திலழியுமென்றால் மீட்டும்பிரபஞ்ச மெதினிருந் துண்டாகும்; ஆதலால் நித்தியமே. இது, அவ்வியாபகமானால் சர்வதோமுகமாகக் காரியமெங்கு முண்டாகக் கூடாதாகையால், இதை வியாபகமாகவும் அவச்ய மொப்புக்கொள்ளல் வேண்டும். (௫)

[illegible] ௬

ஜடமாயு மநேகமாயு மிருப்பதெல்லா முற்பத்தியு ள்ளதாகக் கண்டிருக்கிறபடியால் இம்மாயைக் குற்பத் தி யில்லாதபடியால் இதை யொன்றென் றெப்புக்கொ ள்ளவேண்டும். அநேகமாகிற் பரமகாரண மாகமாட் டாது. (௬)

சங்கை.

[illegible] ௬௨

உபாதானகாரணமான அநேக தந்துக்களி லிருந் து ஒருபட முண்டாகக் காண்கிற படியால் இவ்வாறே சர்வகாரியமு மநேகோபாதானத்திருந் துண்டாகிறது. ஆதலால் மாயை அநேகமே யென்னில்? (௬௨)

உத்தரம்.

[illegible] ௭

அவ்வா றநேகமான தந்துமுதலானவும் ஒன் றாகிய பஞ்சுமுதலான வுபாதானத்திருந் துண்டாகின் றதாகையால், ஒன்றாகிய பரமகாரணமான மாயையிலி

ருந்து சர்வப்பிரபஞ்சமு முண்டாகிறதென்பதற்கு யாதொரு குற்றமுமில்லே. (எ)

யேஷாம் விஜ்ஞாநதச்சேதாத் ப்ரபஞ்ச:

ப்ரஜாயதே । தேஷாம் யுக்த்யேந தூமோ

ந ஜலாத்கிம் ந ஜாயதே ॥ அ

சிலர் சேதனனை ஆத்மாவிலிருந்தே அசேதனமாகிய பிரபஞ்ச முண்டாகிறதென்கிறார்கள். அவ்வாறு விருத்த காரணத்திலிருந்து விருத்தகாரிய முண்டாகில் ஜலத்திலிருந்து புகையுண்டானதென்று புகையைக்கொடு ஜலத்தை அவர்கள் அநுமிக்கலாம்; ஏனநுமிக்க வில்லே. (அ)

தார்க்கிகாத்யா அபி ஜகத்யேஷாம் காரணம் ப

ரமாணவ:। தேஷாம் ஷட்பதார்த்தாஜ்ஞா

தோ ஷோடசஜ்ஞாநதோ மோக்ஷதா ॥ ௯

இன்னுஞ்சில தார்க்கிகர்முதலானவர்கள் ப்ருதிவியாதி பூதம் வரையிற் பிரபஞ்சமென்றும் பரமாணுக்களை பரமகாரணமென்றுஞ் சொல்கிறார்கள்; அவர்கள் திரவ்யாதி ஷட்பதார்த்த ஞானம் அல்லது ஷோடசபதார்த்த ஞானத்தால் மோக்ஷமென்கிறார்களென்று முன்சொல்லிய வேதுவினுலேயே அவர்களின் ஞானசூக்ஷமம் தெரியப்படுகிறதல்லவா.

பரமாணுக்கள் அசேதனமாயநேகங்க ளாகையா ல் அநித்யமாகும்; பரமகாரண மாகமாட்டாது. மாயை யே காரணமென்பது கருத்து. (௯)

ஶரீராதே³: ஶரீராதி³ யதி³ தத்ப்ரஸித்³தி⁴த:
யுக்தா வாத்³யா நிர்வாஹ்யம் ஸம்ஹார ஸர்வ
ஜ்ஞா ஸ்ரஷ்டா வ்யவஸ்தித: ॥ ௧0

பிரத்யக்ஷமாகத் தாய்தந்தைகளின் சரீராதிகளைப் போற் புத்ராதிகளின் சரீராதிக ளுண்டாகக் காண்கை யால் தேகாதிக்குக் காரணம் மாத்ரு பித்ரு தேகாதியே, மாயையென்ப தொன்று வேண்டுவ தில்லையென்னில்? சர்வசங்காரமானபின் சிருஷ்டியாதி காலத்தில் தேகா திக்குக் காரணமாக வெந்தச் சரீராதி யிருந்தது. ஏககா லத்திற் சர்வசங்கார மில்லை தனித்தனியே சங்காரமாகி றதென்னில்? வேதாகமங்களிற் கூறிய சர்வசங்காரமாகி ய மகாப்பிரளயம் பொய்யாகும்போது சர்வஞ்ஞனை வீஸ்வரன் பொய்யனாகவேண்டி வரும்; ஆகையா லப்ப டிச் சொல்லப்படாது. (௧0)

அனேகதே³ஶவ்ருத்தேர்யோ யத்ர த்³ருஷ்ட: ப்ரதீதோ
யஸ்ய யத்ர யதா² ஸத்யஸ்ய ஸம்ப⁴வ: கே
ந ஜாயதே நோபி³ வாய்வந்தே ॥ ௧௧

அஃதெவ்வாறெனில்; ஓர் வஸ்துவினது ஒரு தரும ம் ஓரிடத்தி லறியப்படுமாயின் அதற் கந்தத் தரும மெவ்விடத்திலு முண்டாகு மென்பதற்குத் தடையி

ன்ன; அக்நி முதலானவற்றிற்கு ஓரிடத்திற் காணப்பட்ட புகையும் பிரகாசமுமெங்கு முண்டாயிருக்கிறதல்லவா. (௧௧)

அதுபோல்

கோடிஶோ ரணஂ ஹ்ரஷ்டா ஸஂஹதா
ந்ராஂ ஶரீரிணாஂ | ஸோ(அ)பி வ்யதீயதே
காலோ யத்ராஶேஷ ஜந்தவ: || ௧௨

சர்வப்பிராணி சரீராதிகட்கும் தனித்தனியே அவாந்தர மரணாதிகள் கண்டிருப்பதாற் சர்வ சங்காரமாகுங்காலமு மாகமாதிகளா லறியப்படும். (௧௨)

ததா யாவந்தி கார்யாணி ஸ்ருஷ்டௌ தா
நி ஸஂஹ்ருதௌ | விக்ருதாநி வ்யக்திரூபா
ணி வ்யாப்ய திஷ்டந்தி ஸஂஸ்திதௌ || ௧௩

இவ்வாறு கூறிய யுக்தியுபபத்திகளால் நிச்சயிக்கப்பட்ட மாயையென்னு முபாதான காரணத்தை யாதாரமாகக்கொண்ட சர்வகாரியங்களும் சங்காரத்திற் சத்திரூபங்களா யதிலடங்கி யிருக்கின்றன. சிருஷ்டிகாலத்தில் தநுகரணாதியானவை தத்தம் பிரயோசனஞ் சித்திக்கும் பொருட்டாக அம்மாயையிலிருந்து வியக்திரூபங்களாய் வியாபரிக்கின்றன. (௧௩)

சங்கை.

தந்த்வாதிகாரகாபாவம் படார்தீ [illegible]
படா[illegible] நர: | ஸ்வேச்சாகாரக ஸம்போவி
வ்ருத்தேதீதி [illegible] || ௧௪
[illegible]
[illegible] | ௧௪½

படம் வேண்டியவன் படமில்லாவிடில் தந்துமுதலிய கருவிகளைத் தேடுகிறான். படமுண்டானபின் தந்துவென்னும் பெயரேயில்லை. ஆகையாற் பிரபஞ்சம் அசத்தே! அசத்தான காரியத்தை யுண்டாக்குவதேகாரகமாகிய வஸ்துவிற்குப் பிரயோசனமாகும். (௧௪-௧௪½)

உத்தரம்.

உத்பாதயேத் ஸர்வஸ்மாத் ஸர்வம்
ஸர்வ ஈப்ஸிதம் | ௧௫

அவ்வாறில்லாதகாரிய மொன்றி லுண்டாகுமாறல் எல்லாக் காரணங்களிலும் எல்லாக் காரியங்களையும் எல்லாரு முண்டாக்கவேண்டி வரும். (௧௫)

[illegible]
[illegible] |
[illegible] || ௧௬

அவ்வக் காரணங்களி லிருந்து அவ்வக்காரியங்களுண்டாகக் காண்கையால் எல்லாவற்றையு முண்டாக்க மு

டியாதென்னில்? ஒரு காரணம் தன்காரியத்தை மாத்திர முண்டாக்கவும் மற்றதை யுண்டாக்காம லிருக்கவும் நியாமக மொன்றுங் காணப்படவில்லை. அந்தக் காரியத்தைமாத்திர முண்டாக்க வந்தக் காரணத்தி லோர்சத்தி யிருக்கிறதென்னிற் காரியங்கள் காரணத்திற் சத்திரூபமா யடங்கி யிருக்குமென்று நாம் சொல்லியதைச் சாதித்ததா யிருக்கிறது. (௧௬)

அந்யதா காரகவ்யாபாரோ வ்யர்த்த: ஸ்யாத
நபேக்ஷித:। ஸர்வத்ர ஸாதநாபேக்ஷா ஸர்வ
மேவ த்ரிவிஷ்டபம்॥ ௧௭

இல்லாத காரிய முண்டாகுமென்னில்? மலடியின் பிள்ளையை யுண்டாக்கக் கருவிகளால் முடியாததாற் காரியங்கட்குக் கருவிகள் வேண்டுமென்னுஞ் சொல்லும் அவைகளைக் கொண்டுவருகையும் செய்கையும் ஒன்று மில்லாமற்போய் ஜகத்தே யில்லாமற் போகவேண்டிவரும். (௧௭)

அதோ ஸ்த்யேவ ப்ராக்காரஸ்த் நஹ்யா
யஸம் ஸக்திர் நுகேஷு। தம்யா விஶேஷ
ணம் வாச்யம் நேதஸ்ய ஸ்ருஷ்டிகிதுந॥ ௧௮

அவ்வக் காரணங்களி லவ்வக் காரியங்களுண்டாகும்படி யோர்சத்தி யிருக்கிறது. காரியமே சத்திரூபமாக இருக்கவில்லை யென்னில்? இவ்வாறந்தச் சத்திகட்கு

விசேஷணஞ் சொல்லவேண்டும். அவ்வாறு சொல்வதி ல் ஒரு விசேஷத்தையுங் காணேம். (க௮)

தஸ்மாந் நியாமிகா ஜந்ய ஶக்தி: காரக வ
ஸ்துந: | ஸாந்வய வ்யதிரேகாப்யாம் லோக
ஸித்தா வாவஸீயதே || க௯

ஆகையாற் காரகமாகிய வஸ்துவினிடத்தில் அவ்வக் காரிய சத்தி நியாமிகையா யிருக்கிறது. அது உண்டானாற் காரியமுண்டு; இல்லாவிடி லில்லையென்னும் அந்வய வியதிரேகங்களா லாவது லோகப்பிரசித்தியா லாவது அறியத்தக்கது. (க௯)

தத்வ்ருத்தி ஜந்ம ஜந்மாஸ்ய தத்காரக ஸமா
ஶ்ரயாத் | தேந தத்வ மதாகாரம் படா
காராவரோதகம் || ௨௦

வேமாதி நாவநீயாய படவ்ருத்தி: ப்ர
காஶ்யதே | ௨௦½

அந்தக் காரணத்திற் சத்திரூபமாக விருந்த காரியம் கருவிகளின் சகாயத்தால் வியக்தமாகப் பிரகாசிப் பதே யுற்பத்தியென்னப்படும். எவ்வாறென்னில்? காரணமான நூலின்ரூபமானது படரூபத்தை மறைத்துக் கொண் டிருக்கிறது. துரீ வேமாதி கருவிகளா லதைப் போக்கிப் படரூபம் வியக்தமாகப் பிரகாசிக்கச் செய்யப்படுகிறது. அவ்வாறென் றறிக. (௨௦ - ௨௦½)

யதா² க⁴டாதி³ப்ரச்ச²ந்நஸ்ய படாதே³ஸ்து
ப்ரகாஶக꞉ । நாஶக꞉ க்ரியதே தத்³வ
ச்ச²க்தி꞉ கலாதே³꞉ ப்ராக்ஸ்தி²தஸ்ய ॥ ௨௧௨

கடமுதலானதால் மறைக்கப்பட்ட படமுதலானது மறைப்பு நீக்கினமாத்திரத்தி லெவ்வாறு பிரகாசிக்கிறதோ அவ்வாறே மாயையிற் சத்திரூபமாய் மறைந்திருந்த கலாதி தத்துவமானது அநந்தேஸ்வர வியாபாரத்தால் மறைப்புநீக்கி வியக்தமாகப் பிரகாசிக்கச் செய்யப்படுகிறது. இல்லாததொருபோது முண்டாகாது.

ஒன்பதாவது, மாயா ப்ரகரணம்

முற்றிற்று.

ஆக ஸ்லோகம் - ௧௫௫.

சிவமயம்.

௰—வது கலாதி ப்ரகரணம்.

மாயீஜந்யம் கலாகாலநியதிப்ராணாம ந்ய
ஶாதராஃ। குணா யே மஹாவித்யாக்ஷ ஶாஸ்த்ரா
ஹ்ருதாந்யந்தக்ஷ ஶாஸ்॥ ௧

மாயாதத்வத்திலிருந்து முதலிற் கலை நியதி காலம் புருடன் இந்நான்கும், கலையிலிருந்து வித்தை ராகம் அவ்யத்தம் இம்மூன்றும், அவ்யத்தத்திலிருந்து முக்குணங்கள் அவற்றிலிருந்து புத்தி அதிலிருந்து ஆங்காரம் தைஜஸாங்காரத்திருந்து ஞானேந்திரியங்களும் மனமும், வைகாரிகத்திருந்து கன்மேந்திரியங்களும், பூதாதியிலிருந்து தன்மாத்திரைகளும் அவைகளிலிருந்து பூதங்களும் இவ்வாறு கிரமமாகத் தோற்றுகின்றன. (௧)

வியத்தேஷாவிஸ்ருஷ்டயம் யஸ்வாக்ஷா
ஸ்ருஷ்டிஶாஞ்ஜநாஸ்। யதா யந்த்ரியசேதா
ஸாஸ்த்ர ஸூத்ரயந்நோச்யதே॥ ௨

அசுத்தாத்துவாவி லதிகாரியான அநந்தேசுவரர் ஆத்மாக்கட்குத் தேகாதி சித்திநிமித்தம் மாயாதத்வத்திலிருந்து நேரிடவும் கலாதிதத்வ வழியாகவும் எதை எந்தக் காரணத்திற்காக எவ்விதமாகக் கூட்டிவைக்கிறாரோ அது அவ்விதமாகவே நியோகது சொல்லப்படுகிறது. (௨)

கர்த்ருஶக்திரணோர்நித்யா விப்வீ ச
ஶிவஶக்திவத் । ததாவ்ருததயா ஸாபேக்ஷா
நாஜாதி நிரபேக்ஷதா ॥ ௩

ஆத்மாவினது கர்த்ருசத்தியானது சிவசத்தியைப்போலவே நித்யமாயும் வியாபகமாயு மிருக்கின்றது. ஆனால் மலத்தினாலே மறைக்கப்பட் டிருப்பதாற் செய்யவேண்டிய காரியங்களி லீஸ்வரானுக்கிரகமின்றி பிரவர்த்திக்கிற தில்லை, (௩)

ததநுக்ரஹஹேதோஶ்ச கலாவ்யம் தேத
ஜஸம் ஹர: । மாயாம் விக்ஷோப்ய கர்த்ர
தேஸ்வவ்ருத்தம் ஸ்ரம்ஹிதக ॥ ௪

ஆகையா லாத்மானுக்கிரக நிமித்தம் அநந்தேஸ்வரர் முதற் பிரவிருத்திஹேதுவாய்ப் பிரகாசரூபமான கலையென்னுந் தத்வத்தை மாயையைக்ஷோபித்துத் தோற்றுவிக்கிறார். (௪)

தேந ப்ரதீபகல்பேந தமஸ்ஸ்வ்ருதசேத
ஸோ ணோ: । ப்ரகாஶயத்யேகதேஶம் விதா
ய கர்மஸம்வேதநம் ॥ ௫

தீபத்தை யொத்த வந்தக் கலையாலே அநந்தேஸ்வரர் மலத்தால் மறைக்கப்பட்ட சைதன்யமுள்ளவாத்மாவிற்குக் கன்மமான விருளைநீக்கி யேகதேசம் பிரகாசிக்கச் செய்கிறார். (௫)

[illegible] ॥ ௬

கல என்னும் முதனிலைக்கு நீக்கலும் நியமித்தலும் அர்த்தமாகையால் அந்தக்கலையே இருளை நீக்கி நியதிருபமாய் போகநியமனத்தையுஞ் செய்யும், நியமிக்கும் போது நியதிதத்வமாகும், இதனால் நியதிதத்வமும் சொன்னதாயிற்று. (௬)

[illegible] ॥ ௭

இவ்வாறிந்தக் கலையு மாத்மாவும் பேதமற்றது போலொன்றாகச் சேர்ந்து போகக்கிரியைகளிற் கர்த்தாவாயுங் காரகமாயு மிருக்குமென்பர். (௭)

[illegible] ॥ ௮

இவ்வாறு வ்யக்தமான கிரியாசத்தியுள்ள வாத்மாவானவன் விஷய தரிசனத்திற் காகத்தானே கரணசத்தியில்லாதபடியால் ஞானத்திற் கீச்வராநுக்ரஹத்தை யபேக்ஷிக்கிறான். (௮)

தத³ம்ஶம் க்ஷோப⁴யித்வேஶ: கலாமேவ
ஜநிஷ்யதி | தஸ்யாம் வித்³யாம் ஸ்வயம் ஜஜ்ஞே க
ரணம் பரமாத்மந: || கூ

அவனியித்தம் அநந்தேஸ்வரர் தத்வமுண்டாக்க யோக்யமான கலையை க்ஷோபிக்கச் செய்து ஆத்மாவிற்கு முக்யகருவியான வித்தையென்னுந் தத்வத்தை சிருஷ்டித்தார். (கூ)

தேந ப்ரகாஶரூபேண ஜ்ஞாநஶக்தி
ப்ரகாஶிநா | ஸர்வகாரகநிஷ்பாத்³ய
வேத்தி விஷயம் புமாந் || கo

ஞானசத்தியைப் பிரகாசிக்கச் செய்யாநின்ற பிரகாசரூபமான அந்த வித்யாதத்வத்தாலே இந்திரியாதி சர்வ காரகங்களாலு மறியத்தகும் விஷயத்தை யாத்மா அறிகின்றான். (கo)

த்³ருஷ்டே வ்யக்தசைதந்யோ த்³ருஷ்டாவைப்ய
விபோ³தித: | நேச்சதி ஜந்துகம் ராக³ம்
தஸ்மாதே³வாஸ்ருஜத் ப்ரபு⁴: || கக

அவ் வித்யாதத்வத்தா லபிவியக்தமான சைதன்ய சத்தியுள்ள ஆத்மா வானவன் விஷயத்தை யறிந்தபோதிலும் அபிலாஷையின்றி போகத்திற் பிரவர்த்திக்க மாட்டானதலாற் பிரபுவாகிய வனந்தேஸ்வரர் அந்த அபிலாஷையை யுண்டாக்கும் ராகதத்வத்தை யந்தக் கலாதத்வத்தி லிருந்தே யுண்டாக்கினார். (கக)

ஸதோ ரஞ்ஜிதாஸ்யாத்ம ஸ்ரீஸம்
விஷயாஸக்து । க்ருதேந ஸ்வாதந்த்ரேந
விராகமயி ஸம்ஸ்ருதி ॥ கஎ

அவ்விராகத்தா லபிலாஷையைக்கொண்ட வாத்மாவானவன் அசுத்தமா யிருந்தபோதிலும் போக்யத்தை விரும்பிக்கொண்டு புசிக்கிறான். புசிக்கும்போது வைராக்ய மடைகிறதுமில்லை. (கஎ)

இதி ப்ரவ்ருத்த: கரணை: காய-
ரஞ்ஜிதைஸ் ஸஹஸா ஸமேத:। போகபூ-
மிஷு [illegible] போகாந் காலாதீ-
[illegible] ॥ கஅ

இவ்வாறாத்மாவானவன் தேகங்களோடுகூடிய பூததன்மாத்திரைகளை யாச்ரயமாகக் கொண்ட விந்திரியாதி கருவிகளுடன்கூடி போகத்திற் பிரவர்த்தித்தபோதிலும் போகபூமிகளிற் போகங்கள் காலத்தை யநுசரித்திருக்கின்றபடியால் காலமின்றி போகங்களைப் புசிக்கிறதில்லை. (கஅ)

[illegible] ப்ருத்வ்யாதி [illegible] கா-
லோபாயா ஸமுத்பவ: । காலஸ் ஸமஸ்த-
பதார்த்தாநாம் [illegible] ॥ ககூ

நொடி க்ஷணம் நாழிகை என்பது முதலான விவகார ஞானத்திற்கு நிமித்தமான காலமென்னு மோர் தத்வம் மாயையிலிருந் துண்டாய் நியதிதத்வத்தாலே அநாதிக்காலந் துவக்கிச் சங்காரகாலம் வரையில் நியமித் தடக்கப்பட்ட பசுவாகிய வாத்மாவைப் போகத்திற் பிரவர்த்திக்கச் செய்கையால் காலமென்னும் பெயர் பெற் றிருக்கிறது. (௧௪)

சங்கை.

ஸகலாத்மனோ போக்து: கர்மாணி
யாஜமாநம் | கேவலம் நியாமகம் கர்ம யந்த்ர
நியதிர் ஏஷா || ௧௫

போக்தாவான வாத்மாவிற்கு அவஸ்யமான போகமும் அதன் சாமக்கிரியையும் கன்மாதீனமாதலாற் கன்மமென்ப தவசியம் வேண்டியிருப்பதா லதுவே போக்யமனைத்தையுஞ் செய்யட்டுமே, அதற்காக நியதி யென்னு மதிகமாக வேறொரு தத்துவ மொப்புக்கொள் வானேனென்கிறார்கள். (௧௫)

உத்தரம்.

ஸாமாந்ய ஸர்வதத்வாநாம்
போக்யத்வே கர்மணாம் அபி | கர்மணாம் அதிஷ்டா
நியந்த்ரீ நியதிர் ஏஷா || ௧௬

அப்போது சகல தத்வங்களும் போகத்திற் குபயோகப்படுவது கன்மாதீனமே யாதலாற் கன்மமொன்

றே போதும், மற்றவை யொன்றும் வேண்டாம்; அவ்வாறாகிற் சரீரேந்திரியாதிக ளெல்லாம் வியர்த்தமாக வேண்டி வரும். (௧௬)

ஊயு ஜெஹாஜி ஸாபெக்ஷம் தகெ-
ஃகய-ஃ ஜ்ஸாயக்ஷு। தமெதா ஙியதிஸா
பெக்ஷ ஐஸ-கஃ-ஃ ஙியாஃக்ஷு॥ ௧௭

சரீராதிகளை யபேக்ஷித்தே யந்தக் கன்மமானது புருஷார்த்தத்தைச் சாதிக்கு மென்னில்? அப்போது நியதியையு மவச்ய மபேக்ஷிக்கும் நியதியே கன்மநியாமகமா யிருக்கவேண்டும். (௧௭)

பூஂஸத்வம் த தவாஹுகஃ பூஂ
ப்ர த்ய ஙிஸூ நஃ। ஆவஹுாகம் ப்ர
யாநாஜெ ஹுஃஸவஜெ நா-ஃ ஸஹ யஃ॥ ௧௮

புருடனென்னும் ஞானத்திற்கு நிமித்தமாகிய புருஷதத்துவமானது அம் மாயையிலிருந்தே யுண்டாயிற்று. அது பிரதானமுதலான தத்வங்களை யெல்லாம் வியாபித்துக்கொண்டு புவனமார்க்கத்தில் வாமதேவாதி ருத்ரர்களுக் கிடமாகவிருக்கும். (௧௮)

தத꞉ ப்ரயாநிகா தத்வம் கஷாதகா
ஃ ஜீஜநகஃ।ஸபூர்ஙி ஙியாநவர யத்ஃ
மளணவர காரணஃ॥ ௧௯

புருடதத்வ முண்டான பின்பு தன்மாத்திரையைந்து, மகத்து அகங்கார மிரண்டு, இவ்வேழிற்கு மாதாரமான

குணதத்வத்திற் குபாதான காரணமாகிய அவ்யக்த தத்வத்தை கலாதத்வத்திலிருந் துண்டாக்கினார். (௧௯)

[illegible] ॥ ௨௦

அவ் வவ்யக்தத்திலிருந்து புத்திக் குபாதானகாரணமாகிய சத்வம் ரஜஸ தமஸ என்று முக்குண ரூபமான குணதத்வத்தை யுண்டாக்கினார். அம் முக்குணங்களின் செய்கை பிரகாசம் பிரவிர்த்தி நியமம் என்பவை பிரசித்தங்களே. (௨௦)

[illegible] ॥ ௨௧

குணங்கள் மூன்றாயிருந்தபோதிலும் அவை பிரியாமலிருப்பதால் குணதத்வமொன்றே! ஆனாற் சாத்விக ராஜஸ தாமஸம் என்று குணங்களைத் தனித்தனியாகச் சொல்வது அவ்வக் குணங்களின் செய்கை மிகுதியாலென வறிக. (௨௧)

[illegible] ॥ ௨௨

மூக் குணங்களால் வியாபிக்கப்படாமலும் கலந்து ஒரு குணமாவ தில்லாமலும் யாதொரு ஜடபதார்த்த மு மிவ்வுலகத்தி லில்லை. (௨௨)

बुद्धितत्त्वं ततो [illegible] भाव-
प्रत्ययलक्षणम् । [illegible]
[illegible] ॥ ௨௩

அந்தக் குணதத்வத்திலிருந்து மேற்சொல்லும் பாவப் பிரத்யயங்களைக் குறியாகக்கொண்ட புத்தி தத்வத்தை யுண்டாக்கிறார். அந்தப் புத்தி தத்வமானது மேற்சொல்லும் விஷயங்களோடுகூடி ஆத்மாவிற்கு நேரிட போக்யமாகும். (௨௩)

भावा बुद्धिगुणा धर्मज्ञानवै-
राग्य[illegible] । सात्त्विका[illegible]
[illegible] ॥ ௨௪

பாவங்களாவன? புத்தியின் குணங்கள். அவை யாவன? தருமம் ஞானம் வைராக்யம் ஐச்வரியம் இந் நான்கும் சாத்விகங்கள். அதருமம் அஞ்ஞானம் அனைச்வரியம் இம்மூன்றும் தாமசங்கள். அவைராக்கியம் இவ்வொன்றும் ராஜசம் ஆக—அ. (௨௪)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௨௫

பிரத்யயங்களாவன? அந்தத் தருமாதிகளா லுண்டான சித்தி முதலானவை தனித்தனி வர்க்கமாக-௮-௯-௨௮-௫-ஆக-௫0 - விதமாக ப்ரசித்தமாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. (௨௫)

பாவாதிகட்கு லக்ஷணம் வருமாறு:—

ஸாம்ஸித்திகா வைநயிகா: ப்ராக்ருதா

ஸ்ச ஸவத்ரிணா: | ௨௫௧

இந்தப் பாவங்கள் சம்சாரியான வாத்மாவிற்குச் சாம்சித்திகங்கள் வைனயிகங்கள் பிராகிருதங்கள் என மூன்றுவிதமா யிருக்கும். (௨௫௬)

அவையாவன?—

விஶிஷ்டகர்ம ஸம்ஸ்கார ஸஞ்சித

தேஹஸ்ய | குணாஸ்ஸாம்ஸித்திகா ஜ்ஞாநா

தேஹாவாப்தேபி பூர்வவத் || ௨௬௧

சிறந்த கோயில் குள முதலானவை செய்வித்த கருமவாசனையால் நின்மலமான சித்தமுள்ளவர்கட்குத் தேகநீங்கின பின்பும் முன்போலவே பிரகாசிக்கும் குணம் சாம்சித்திக மென்னப்படும். (௨௬௨)

லோகஸ்ய குருஶாஸ்த்ராப்யாம் யா

ஸ்ரீவைநயிகா குணா: | வாஸநா

வைநயிகா ஜ்ஞாநாஶக்த்யாதிர் ஸந்ததியா || ௨௭௧

லோகத்தார் புத்தியாலும் குருமுகத்தாலும் சாஸ்திரத்தாலும் பிரகாசிக்குங்குணம் வைநயிக மெனப்

படும். அது, மனோ வாக்குக் காயங்களின் வியாபாரங்களால் வருவது. (உஎ)

𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑍋 𑌦𑍇𑌹𑌸𑌂𑌯𑍋𑌗𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃
𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌦𑌿𑌵𑌦𑍍𑌯𑌾𑌵𑌤𑍍 । உஅ

ஸ்வப்ன முதலானவற்றைப்போல் தேகமிருக்கும்போது மாத்திரம் தோற்றிக்கொண்டு அப்பால் தோற்றும விருக்குங்குணம் பிராகிருத மென்னப்படும். (உஅ)

அவைகளின்பயன் வருமாறு:—

𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌸𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌸𑍍𑌯𑌾 𑌵𑌿𑌪𑌾
𑌤𑌃 𑌯𑍋𑌨𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌰𑌯 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌭𑍇
𑌦𑌨𑌃 । 𑌏𑌤𑌦𑍍𑌵𑍈𑌪𑌰𑍀𑌤𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑍈𑌨𑌯 𑌪𑍍𑌰𑌾
𑌕𑍃𑌤𑍇𑌷𑍁 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 𑌸𑌂𑌵𑌿𑌪𑌾𑌕𑌃
𑌕𑍃𑌤𑍇𑌜𑍍𑌞𑍇 ॥ உகூ

வைநயிகப் பிராகிருத தருமாதி குணங்களால்வரும் பயன்களாவன? தருமத்தால் ஸ்வர்க்கமும் ஞானத்தால் முத்தியும் வைராக்யத்தாற் பிரகிருதி லயமும் ஐஸ்வரியத்தால் தடையில்லாமையும் அதருமத்தால் திரியக்கு முதலான யோநிப்பிராப்தியும் அஞ்ஞானத்தால் நரகமும் அவைராக்யத்தால் பந்தமும் அநைஸ்வரியத்தால் தடையு முண்டாகின்றன. (உகூ)

𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑍍𑌯𑌂𑌤𑌿𑌸𑍍𑌕𑍍𑌤𑌵𑌪𑍁𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌰𑍇

[illegible]
[illegible]
[illegible] ॥ ௩௦

சாம்சித்திக தருமாதி குணங்களால் வரும் பயன்களாவன? தருமத்தால் தேவதா வசீகரணமும் ஞானத்தால் அவ்விஷயஞானயோகமும் வைராக்யத்தால் போகத்தி லிச்சையில்லாமையும் ஐஸ்வரியத்தால் விக்நங்களின் நீக்கமும் அதருமத்தால் போகத்தி லிச்சையும் அஞ்ஞானத்தால் தாழ்வும் அவைராக்யத்தால் தேகப்பிராப்தியும் அநைஸ்வரியத்தால் விக்நமு முண்டாகின்றன.

பத்தாவது,

கலாதி (காரிய நிரூபண) ப்ரகரணம்

முற்றிற்று.

ஆகஸ்லோகம்—௧௮௫௦.

சிவமயம்.

கக—வது, பிரத்யயாதி ப்ரகரணம்.

ஸித்³த்⁴யாதி³ வர்கா³ணாம் ஸமாஸ
ஸாமாந்யலக்ஷணம் । ஸம்ப்ரதி விஸ்தரேணா
ஸாமாந்யம் ஸமாஸோக்தம் ப்ரோச்யதே ॥ ௧

இனி, சித்தி துஷ்டி அசக்தி விபர்யயம் என்னு நான்கு பிரத்யய வர்க்கங்களையும் முன் சுருக்கமாகத் தொகையாகக் கூறியபடியால் நன்றாகத் தெரியும்பொருட்டு விரிவாய் அவைகளின் பொதுவிலக்கணஞ் சிறிது சொல்லப்படுகிறது. (௧)

பும்வ்யக்தாவ்யக்தவிஷயா யா
ஸித்³தி⁴ஸ்து ஸா । துஷ்டிர்பு⁴க்தபோ⁴க்³யாயாம்
ஸ்வபோ⁴க்³யதாயாம் ஸ்தி²தா யா ஸதி ॥ ௨

புருடன் அவ்யக்தம் வியக்தம் இவைகளின் விஷயமாகத் தோற்றும் புத்தியானது, சித்தியென்றிவ்விடத்திற் சொல்லப்படும். தான் பயன்பெறுமிருக்கையிலும் பெற்றதாக ஆத்மாவிற்குத் தோற்றும்புத்தி துஷ்டியென்னப்படும். (௨)

அஶக்தி: காரணாபாயே ஸதோ³யா ப்ர
ஹவிஷ்ணுதா । விஜ்ஞேய ஸாந்யதாந்யத்ர
ஜ்ஞாநம் விபர்யய: ॥ ௩

அந்தக்கரண பஹிஷ்கரணங்க ளில்லாவிடில் விஷய மிருக்கையிலுங் கண்டறியாமை அசக்தியென்னப்படும். சிறிது பொதுவான தருமத்தைக்கொண்டு வேறொன்றை வேறொன்றாக அறிவது விபர்யய மென்னப்படும்.

ப்ரகாஶகதயா ஸித்³தி⁴ர்வ்யக்தாதே³ஸ்ஸத்த்வ
ஸம்ப⁴வா। ப்ரகாஶார்த²ப்ரவ்ருத்தத்வாத்³
ரஜோம்ஶப்ரப⁴வாபி ச ॥ ௪

அவற்றுள் சித்தியானது வியக்தமுதலானவற்றைப் பிரகாசிப்பிக்கையால் பிரகாசமான சத்வரூபமாகவும் பிரகாசார்த்தத்திற் பிரவர்த்திக்கிறபடியால் பிரவர்த்திரூபமான ரஜோம்சமாகவு மிருக்கும். (௪)

துஷ்டிர்மித்²யாஸ்வரூபத்வாத்தா
மஸீ ஸுக²ரூபதயா। ஸமவேதா தயா
ப்ரதீதேஸ்ஸாத்த்விகீத்யவஸீயதே॥ ௫

துஷ்டியென்பது பொய்யாகையால் தாமசமாகவும் சுகரூபமாகத் தோற்றுவதால் சாத்விகமாகவு மென்னப்படும். (௫)

அஶக்திர்ப்ரவ்ருத்த்யபா⁴வாத்தாமஸீ து³:க²
பா⁴வத:। ராஜஸ்யபி கு³ணாத்⁴யக்ஷை:
கார்யகாரணஸம்ஶ்ரயை: ॥ ௬

அசக்தியென்பது விஷயப் பிரவர்த்தி யில்லாமையால் தாமசமாகவும், துக்கமாவதால் ராஜஸமாகவும்

சொல்லப்படும். காரணத்தின் குணங் காரியத்தில் தோற்றுமாதலால் ரஜசின் குணமாகிய துக்கம் அசக்தியில் தோற்றுவதால் ராஜசமென்றுஞ் சொல்லவேண்டும். ௬

விபர்யயஸ்தமோயோநிர் த்விஷ்டாத
பதயா ஸஹ | ஸாமாந்ய மாத்ர காஶா
ஸாத் ஸத்வாதிதி விநிஶ்சித: || ௭

விபர்யயமென்பது பொய்யுருவமாகையால் தாமசமென்னப்படும். பின்னும் பொதுப்பட பிரகாசரூபமாகையாற் சாத்விகமென்று நிச்சயிக்கப்படும். (௭)

இதிபாவப்ரகாரோயம் ஸாவப்ரத்ய
ய லக்ஷண: | போத இத்யுச்யதே
போத வ்ருத்திஹேது ஸ்ததாவபோத: || ௮

இந்தப் பிரகாரஞ் சொல்லப்பட்ட பாவப் பிரத்யய ரூபமான புத்தியின் பிரகாசமானது சம்சாரியான வாத்மாவிற்கு அறிவுதோற்றுமிடமாகையாற் போதமென்று சொல்லப்படும். (௮)

காபிலமதத்தை யனுசரித்துச் சங்கை.

பந்திபோதாய நிர்திஷ்டே ஸித்தாந்த
ஶ்ருதிஸித்தமே | நாமோபி ஸத்ருஶே
நாத்மா கலாயோநி: கரோதி கிம் || ௯

சொல்லியவழியாய்ப் புத்தியே போகத்திற்கு நிமித்தமாகுமேயாகில் அப்போது வித்யாதத்வமும் போ

நிமித்தமாதலா லது மிகையாகவேண்டும். பின்னும் புத்தியின் தருமமாகிய அவைராக்யமென்னும் பாவமே அபிலாஷையைத் தரும்போது கலாதத்வத்தி லுதித்த ராகதத்வ மென்ன செய்யவேண்டும். (கூ)

இதற்குத்தரம்.

வ்யஞ்ஜகாஜ்ஞஸ ஸத்வேவ வ்யஞ்ஜகம் யதி
போதஸ்ய | இந்த்ரியைரேவ ஸத்வேவ
ஸித்திர் வ்யஞ்ஜகதா || க0

போத வியஞ்சகமாகிய புத்திதத்வத்தால் வித்யாதத்வம் வியர்த்தமென்று சொல்லில்? அப்போதுன் மதத்திலும் மனதோடுகூடிய இந்திரியங்களாலேயே போதமுண்டாகும்போது புத்தி வியர்த்தமாகவேண்டும். ஒரு காரியத்திற்கு வியஞ்சகங்களான பதார்த்தங்களில் ஒன்றுவொன்றை வேண்டாமென்னில்? எங்குமிப்படி வருமாதலால். (க0)

கேசித்து புத்தேர் கரண
ஸ்ய விவக்ஷயா | ஸோவித்யைவ உத்க்ருஷ்
டேஷ்டம் பக்ஷோபேக்ஷ காங்க்ஷிதஸ் ஸ்வதஃ || கக

சிலர் புத்தியை வியஞ்சகமென்னமல் கரணமென்று சொல்லி வித்தையும் போதகரணமென்று சொல்லப்பட் டிருக்கையால் புத்தியாகிய கரணத்தால் வித்தையாகிய கரணம் வியர்த்தமாகு மென்கிறார்கள். அந்

தத்பக்ஷத்திலும் இந்திரியங்களாகிய கரணங்களாற் போதமுண்டாகும்போது மனதாகிய கரண மென்னத்திற்கென்று மாக்ஷேப மிப்படியேவரும்.

ஆகையாற் ச்ரோத்ராதி பஞ்சேந்திரியங்க ளிருக்கையிலும் மனதும் வேண்டியிருப்பதுபோல் புத்தி தத்வ மிருக்கையிலும் வித்யாதத்வமும் வேண்டுமென்பதற்கு யாதொரு குற்றமுமில்லை. (௧௧)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௨

மேலும் ஒருகாரியவிஷயத்தி லிரண்டுவஸ் துபயோகப்படும்போது ஒன்று மிகையென்று சொல்லில்? அப்போது புருடனுக்கு போக்யார்த்தத்தைச் சாதிக்கும்விஷயத்தில் காது கண் கை கால் இவைமுதலானவை வெவ்வேறு அர்த்தத்தைச் சாதிக்கிறதாகவேண்டிவரும். சப்தாதிவிஷயம் வெவ்வேறுதானே யெனில்? அவைகளாற் புருஷனுக்கு வரும்போக மொன்றுதானாலென்றது. (௧௨)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௩

மேலு மவ்வா றிந்த வித்தை புத்தி தத்வங்கள் ஒ

ருவிஷயத்தி லுபயோகிக்கவில்லை. அதற்கு வெவ்வே றுபயோக மிருக்கும்போது அநேக சாதனங்களால் ஒருகாரியஞ் சாதிப்பதில் குற்றமில்லை. (௧௩)

அம்ஸே தெய்வமென்னில் ;—

வித்யா வ்யக்தகாரணா — விஷயஜ்ஞஸ்ய போதகா
ஸாக்ஷமோ வரா து । ஸம்ஸ்க்ருதா ப்ரவ்ருத்தா
யா ஸ்வஸ்ய காரணம் ப்ரவ்ருத்தி கர்த்ரீ தா ॥ ௧௪
இதி ப்ரோக்தா ௧௪வது

அணுவினது சிற்சத்தியை வியக்தமாக்குவதே வித்தையின்காரியம், பின்புபிரேரிக்கப்பட்ட இந்திரிய விஷயங்களோத் தனை தாங்கிக்கொண்டு புத்தியானது புருஷனோடுகூடிய காரணமாகிய வித்தையாற் கிரகிக்கப்படுகின்றது? ஆகையால் வித்தையைவிட புத்தி வேறேயாக வேண்டும். (௧௪—௧௪வது)

இதுவரையிற் புத்திக்கும் வித்தைக்கும் பேதத்தைச்சாதித்து, இனி அவைராக்யமென்னும் புத்திதருமத்திற்கும் ராகதத்வத்திற்கும் பேதஞ்சாதிக்கின்றார்.

ராகோ நாமாபிஷ்வங்க: । த்வ
ஶோ ராகாத்மகோ விஶேஷ ஸ்தோ
த்மந: ॥ ௧௫

அபிலாஷையை யுண்டாக்கும் ராகதத்வமானது புத்திதருமமான அவைராக்ய மாகமாட்டாது, தன்மைவேறுபட்டிருப்பதால். அதாவது புஷ்பசந்தன ஸ்திரீரூப

மான போக்யமாயிருக்கை அவைராக்யம். அதற்குபோஜகமா யபிலாஷையைக்கொடுப்பது ராகதத்வம். ஆகையால் அவைராக்யம் பாஹ்யவிஷயாகாரமா யிருக்கிறது, ராகதத்வம் ஆந்தரமா யாத்மாவி லிருக்கிறது. அதுவுமிதுவென்னில் விஷயமிருக்கும்போது ராக மவச்ய மிருக்கவேண்டும். அப்போது வீதராகனென்னும் ராகமில்லாத புருஷனே யில்லாமற்போகவேண்டிவரும்; ஆகையால் வேறே. (௧௫)

[illegible]
[illegible] ௧௫-௨

சிருக் சந்தனாதி விஷயங்களி லபிலாஷை ஹேதுவான ராகமென்பது புத்திதருமமான அவைராக்யமாகவும் பாஹ்யவிஷயமான சந்தனாதியாகவு மாகமாட்டாது. புத்திதருமமானால் போக்ய மாகும், விஷயாகாரமானால் பாஹ்யமாய் ராகமில்லாதவனேயில்லாமற் போகவேண்டிவரும்; ஆதலால். (௧௫-௨)

[illegible]
[illegible] ௧௬

ராகதத்வ மேற்பட்டிருக்கையிலும் கன்மமானது போகாதி விசேஷத்திற்காக ஒப்புக்கொள்ள வேண்டியதா யிருப்பதா லந்தக் கன்மமே அபிலாஷை ஹேதுவாகட்டுமே, ராக மேதிற்கென்னில்? (௧௬)

[illegible]
[illegible] ௧௬-௨

கன்மமானது தனித்தொரு காரியசாதக மாகமாட்டாதென்று நியதி தத்வஞ் சாதிக்கும்போதே சொல்லியாயிற்று. ஆகையாற் கன்மமானது தநு கரணாதிகளை வேறுவேறு விசித்ரமாக்க மாத்திரம் ஏதுவே யல்லது ராககாரியமான அபிலாஷையை யுண்டாக்க மாட்டாது. ஆகையா லபிலாஷை ஏதுவாக்க லானன்யமான ராக தத்வ மவச்ய மொப்புக்கொள்ளவேண்டும். (க௬௨)

ஆனால் ராகத்தைப்போல த்வேஷமும் வேறுதத்வ மாகட்டுமென்னில் அவ்வாறன்று. ராகத்தால் விரும்பப்பட்ட ஒருவஸ்து தடைபட்டால் த்வேஷமுதலானவை யுண்டாவதால் த்வேஷமென்பது ராகத்தால் வந்த பிரவர்த்தி விசேஷமே,வேறுதத்வ மல்ல; ராகமுந் த்வேஷமு மொன்றுக்கொன்று விரோதியாகையால் ஒரு புருடனிடத்திற் கூடியிருப்பது கூடாதென்னில்.

ஜொஷ ஸ்ஷா நவஸா நா நா ஸா
ஓ்ரா ஜெஷாமயொஃ। கஎ

ராகமுந் த்வேஷமு மொரோகாலத்தி லுண்டாகிறதில்லை யாதலால் ஓரிடத்தி லிருப்பது குற்றமில்லை.

ஸஸுஸ்ர ஸஸுஜா ஸஸுா ப்ரவு
த்தி ஸுவெபெஜிஜா। ப்ரவுத்தஸ்ர ஸு
வஷுஃவ ஜொஷாவா ப்ரஜாய
தெ॥ கஅ

ஏனெனில்? எல்லோருக்கு மெப்போது முண்டாகும் விஷயப் பிரவர்த்தியெல்லாம் சுகமென்கிற புத்தியாலேயே யுண்டாகிறது. பிரவர்த்தித்த பின்பு காலகன் மாறுகுணமாகச் சுகமாவது துக்கமாவது மோகமாவது உண்டாகிறது. (கஅ)

[illegible]
[illegible]
[illegible] ॥கசு

பிரவர்த்தித்த பின்பு த்வேஷ முண்டாகிறது. முன்னமே ராக முண்டாயிருக்கிறது. த்வேஷம் போனவுடனே மீட்டும் ராகமுண்டாகிறது. இவ்விரண்டிலெது வலியதோவது தோற்றுகிறது. ஆகையாலோரிடத்தி லிருப்பது குற்றமென்பது கூடாது. (கசு)

இதுவரையிற் பிரசங்க சங்கதியால் ராகதத்வத்திற் குடபத்தி கூறி, இனிப் பிரகிருதமான ஆங்கார தத்வத்தைக் கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible] ॥ உ0

புத்திதத்வத்தி லிருந்து சேதனனுக்கு முயற்சி யுண்டாகக் கருவியான ஆங்காரமென்னுந் தத்வ முண்டாகின்றது. அவ் வாங்கார தத்வத்தின் வியாபாரத்

தாற் சரீரத்தி லுண்டான பிராணாதி யைந்துவாயுக்களு மசைகின்றன. (௨௦)

அந்தப்பிராணாதி வாயுக்களாவன?—

ப்ராணாபாநா உதாநஶ்ச வ்யாநஶ்ச
தைஸ்ததை: | வ்ருத்தி: பேதாந் நிம
ஶ்ரோதா ஸம்ஜ்ஞா நிபோதயே || ௨௧

பிராணன் அபானன் வியானன் உதானன் சமான ன் என்று வியாபாரபேதங்களாலைந்துவித மாகின்றது. அந்த வியாபாரத்தைச் சிறிது சுருக்கமாகச் சொல்கி றேன்; கேளும் பாரத்வாஜ மஹாருஷியே! (௨௧)

வ்ருத்தி, ப்ராணஸ்ய ஸம்ஜ்ஞாயா ஸ
ஶ்ருதே | ப்ரத்யக்ஷம் ச யதி ப்ராணோ ஸ்ரு
ஶ்ருதே ஹ்ருத்யஶாம் ததா || ௨௨

த்விஷ்ட்யந்தோ ஹ்ருதே ப்ராண: ப்ரா
ணோ வா ப்ராணயோ மத: | நித்ரா
வா ப்ராணஸ்ய ப்ராணஸ்ய ஸாவஸ்ய || ௨௩

அவற்றுள் பிராணவாயுவின் வியாபாரமாவது, இருதயத்திலிருக்கும் வாயுவை வெளியில் த்வாதசாந்தம் வரையிற் கொண்டுபோகுதல் ஜீவித்தல் புருடன் ஆலோசிக்கும்போது குருடுபோல புத்தி தேடுதல் சரீர பலம் சைதன்யத்திலும் கலாதி க்ஷீத்யந்த தத்வசரீரத்திலும் பலரூப சத்தியிலும் சூரியகலை சந்திரகலைகளி

லும் வர்த்திப்பித்தல். இவை பிராணவாயுவின் வியாபாரம். (௨௨—௨௩)

तथान्नपानसंसेकं पीतविण्मूत्र-
रेतसाम् । अधोनयनमपानस्य
यत्तदाक्षेपचेष्टितम् ॥ ௨௪

புசித்ததினுடையவும் குடித்ததினுடையவும் விகாரமாகிய விஷ்டை மூத்திரம் சுக்லம் இவைகளைக் கீழேதள்ளுதல் அபானவாயுவின் வியாபாரம். (௨௪)

समन्तान्नयनं तस्य समानेन
समीरणात् । अधोवक्त्रं समानस्य
व्यानो व्यापी नमनं च यः ॥ ௨௫

அன்னபானங்களை நான்கு பக்கத்திலும் சரிப்படுத்தல் சமானவாயுவின் வியாபாரம். சரீரத்தைச் சந்திகளில் வணங்கும்படிச் செய்தல் வ்யானவாயுவின் வியாபாரம். (௨௫)

विवक्षा यत्नवेगेन कोष्ठ-
वेगात्समुद्गतः । वायुरूर्ध्वं स
मायेन कियते येन सोऽदानः ॥ ௨௬

सदानन्दस्तीर्थस्तु स्नानं यज्ञ
स्याध्यायिने । जपं होमं वाच्यं
षट् वक्त्रं स्वाध्यायेन चेष्टितम् ॥ ௨௭

ஹ்ருதயாகாசத்தி லுண்டாகிய வோசையை வசனிக்கவேண்டுமென்னு முயற்சியை முன்னிட்டு வாக்கு இந்திரியத்தோடு கூடி அக்ஷரரூபமாகச் செய்தல் உதானவாயுவின் வியாபாரம்.

இந்தப் பிராணாதி வாயுக்களின் ஸ்தானமும் தாரணைந்தில் இவைகளின் ஜயமும் பயனும் மற்றுஞ் சொல்லவேண்டிய விசேஷமும் வேறுபாகத்தில் யோகயாதத்திற் சிவனுலே சொல்லப்பட் டிருக்கிறது.

(உகூ—உஎ)

பதினோராவது, பிரத்தியயாதி ப்ரகணம்

முற்றிற்று.

அஷ்ஸ்லோகம் - உகஉ0.

சிவமயம்.

கஉ—வது இந்த்ரியாதி ப்ரகரணம்.

𑌅𑌥 𑌸𑍋𑌽𑌷𑍍𑌟𑌕𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌾𑌂 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾
𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌤 𑌵𑌾𑌸𑌵𑌃 । 𑌶𑍍𑌰𑍀𑌕𑌣𑍍𑌠𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌵𑌤𑍍
𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌽𑌹𑌂𑌕𑌾𑌰𑌤𑍋 𑌭𑍇𑌦𑌿𑌤𑌃 ॥ க

இனி இந்திரிய தன்மாத்திரை முதலானவற்றை யுண்டாக்கும்பொருட்டு மாயாகர்ப்பாதிகாரிகளான அனந்தாதி யீசர்களை யதிஷ்டித்த பதியானவர்; சத்வாதி முக்குணங்கள் மிகுந்த இவ் வாங்காரத்தின் முக்கூட்டங்களை யிதிலிருந்தே பிரித் தேற்படுத்தினர். (க)

அவை யாவையெனின்?—

𑌤𑍈𑌜𑌸𑍋 𑌵𑍈𑌕𑍃𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑍋
𑌽𑌨𑍍𑌯𑍋 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 । 𑌤𑍇
𑌭𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑍇𑌤𑌦𑍍
𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ உ

தைஜஸம் வைகாரிகம் பூதாதி என மூன்று கணங்கள். அவற்றிலிருந்து ஞானேந்திரிய கன்மேந்திரிய தன்மாத்திரைக ளுண்டாயின. தன்மாத்திரைகளி லிருந்து ஐந்துபூதங்களு முண்டாயின. (உ)

ஶ்ரோத்ரம் த்வக்சக்ஷுஷீ ஜிஹ்வா நா
ஸா ச மநஸா ஸஹ| ப்ரகாஶாத்மதயா ஸத்த்
வா தைஜஸஸ்து ஸாத்த்விக: || ௩

ஶ்ரோத்ரம் த்வக்கு நேத்ரம் ஜிஹ்வை நாசிகை இவ்வைந்து ஞானேந்திரியங்களும் மனதும் பிரகாசரூபமாகையாற் சாத்விகங்கள். இவற்றிற்குக் காரணமாகிய ஹங்காரமுஞ் சாத்விகமே! அதற்குத் தைஜஸமென்று பெயர். (௩)

வாணீபாணீ ஸஹ பாயவ: பாத
ஶ்சேதி ராஜஸா:| கர்மாத்மதயா ராஜோ
ஹங்காரோ வைகாரிகோ மத: || ௪

வாக்கு பாணி பாதம் பாயு உபஸ்தம் இவ்வைந்து கன்மேந்திரியங்களும் செய்கையுள்ளவைகளாகையால் ராஜஸங்கள். இவற்றிற்குக் காரணமாகிய ஹங்காரமும் ராஜஸமே! அதற்கு வைகாரிகமென்று பெயர். (௪)

ஶப்த ஸ்பர்ஶரூபரஸ கந்தா: ஸூக்ஷ்ம
பஞ்சம: | தந்மாத்ரா விஶிஷ்டாஸ்தந்மாத்ரா
ஸ்தந்மாத்ரா பஞ்சயோஜிதா: || ௫

ப்ரகாஶ கர்மத்வ ஶூந்யத்வ வைலக்ஷண்யா
த்தாமஸா: | ப்ரகாஶ்யத்வாத்தம: ப்ராதா
ரஹங்காரோ ஏஷாம் தாமஸ: || ௬

சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் இவ்வைந்தும் தத்தங் குணவிசேடங்களைக் காட்டாமற் சூக்குமங்களாய்ப் பூதப் பிரகிருதியாக மாத்திர மிருப்பதால் தன்மாத்திரையென்னும் பெயருடையன. இவை பிரகாசரூப ஞானேந்திரியங்களையும் செய்கையுள்ள கன்மேந்திரியங்களையும் விட வேறாய்ப் பிரகாசிக்கப்படுவதா யிருப்பதால் தாமசங்கள். இவற்றிற்குக் காரணமாகிய வாங்காரமுந் தாமசமே; அதற்குப் பூதாதியென்றுபெயர். (௫-௬)

> ஜைவ ப்ரவர்த்தகம் ஶீக்ரசாரிஸங்கல்ப
> யத்ச | உநப்ராவாதி விஷய க்ராஹகா
> ஶ்ரவணாதய: || ௭

ஸ்ரோத்ராதி யிந்திரியங்களை விஷயத்திற் பிரவர்த்திக்கச் செய்துகொண்டு சீக்ர சஞ்சாரியாய்ச் சங்கற்பமென்னும் நினைப்பைக் குணமாகக் கொண்டிருப்பது மனது. சுரோத்ர முதலான யிந்திரியங்கள் சப்தாதி விஷயங்களைக் கிரகிக்கும். (௭)

> வ்சநா தாநவிஹாரவிஸர்கா நந்த
> க்ரியா: | வாகாதீநாம் பதார்த்தாநாம் ப
> ஜைஸ்து வ்யக்தலக்ஷணா: || ௮

வசனித்தல் எடுத்தல் நடை மலவிசர்க்கம் ஆனந்தம் இவை வாக்குமுதலான கன்மேந்திரியங்களின் தொழில்கள். இந்த ஞானேந்திரிய கன்மேந்திரியங்களெல்லாம் தத்த மாதாரமான விடங்களைவிட வேறாக விருக்

கின்றன. ஏனெனில் அவ்விடங்க ளிருக்கையிலும் புருடர்கட் கவ்விந்திரிய சத்தி யில்லாதபோது அவ்வவ்விஷயப் பிரவர்த்தி யில்லாததினாலே. (அ)

ஆத்மேந்த்ரியார்த்தஸம்யோகே ஸ
த்யேவா ப்ரவ்ருத்தித: | ப்ரவ்ருத்திகார
ணம் ஸித்தம் யுக்திதோ ஹ்யவஸீயதே || ௯

ஆத்மாவிற்கு மிந்திரியார்த்தங்களுக்கு மெப்போதுஞ் சேர்க்கை யிருக்கையிலும் விஷயப் பிரவர்த்தி யெப்போது மில்லாமல் ஒவ்வோர்கால் வருகிறபடியால் அந்தப் பிரவர்த்திக்குச் சாதகமாய் மனதுண்டென்று யுக்தியாலும் நிச்சயிக்கப்படுகிறது. (௯)

தத்வாந்தரோக்த வ்ருத்திப்யோ வைல
க்ஷண்யாத் விலக்ஷண: | ஸங்கல்போ ஜாயதே
ஹேத்வந்தரஸ்ய பாரிசேஷ்யத: || ௧௦

கலைமுதலான மற்றத் தத்வங்களின் வியாபாரங்களி னிடச் சங்கற்பமென்னும் வியாபாரம் வேறுபட்டிருப்பதால் இதற்குக் காரண மொன்றுண்டென் றேற்படுகிறது. அது மற்றவற்றால் முடியாததினாலே பாரிசேஷாநுமானத்தால் மனதென்று நிச்சயிக்கப் படுகிறது. (௧௦)

ஜ்ஞாந ஸாக்ஷ்யோர்மாத்ரஸ்ய க்ரியாயாம்

ததாக்ரமோऽபி । ததா ப்ராஹாதி யத்நவத்
ஸ நால்பவேக ஜ்ஞானாத்ருதே ॥ ௧௧

அந்த மனதிற்கு மிந்திரியங்கட்கு முண்டாகிய சம்யோகத்தாலே சப்தாதி ஞானமுண்டாகிறது. அதுவும் கிரமமாய்ச் சேருகிறபடியாற் கிரமமாகவே யுண்டாகும். ஒருக்கா லுண்டாவதுபோலத் தோற்றுவது மனதின் சீக்கிர வேகத்தா லல்லது வேறில்லை. (௧௧)

இந்திரியங்கள் பூதங்களி லுண்டாகின்றன, ஆங்காரத்தி லல்லவென்று சொல்லும் வாதியை யநுசரித்து ஆக்ஷேபிக்கிறார்,

பௌதிகாந்யதவாக்ஷாணி நாநாயோ
நீநி வ்ருத்தித: । க்ராணாதி வ்யஞ்ஜகத்வாச்ச
ததாதாராத்மகாநி வா ॥ ௧௨

ஶ்ரோத்ராதி யிந்திரியங்கள் தனித்தனியே ஒவ்வோர் விஷயங்களைக் கிரகிப்பதால் வெவ்வேறு காரணங்களிலிருந் துண்டானவைகளாகச் சொல்லவேண்டுமென்றும், கந்தமுதலான குணங்களைத் தோற்றுவிக்கிறபடியால் அவைகட் காதாரமான பிருதிவியாதி பூதமயமாகுமென்றும் ஒருவாதி சொல்கின்றான். (௧௨)

இதற்குத்தரம்.

ததாவர்க்க யத்நாசேத்தே ஸமர்த்தம் கா
ரணாத்மகம் । ஸ்வவ்ருத்தி ப்ரயஸ்தக்காயஸ்
த்ராஹியக்த வாராத்தவத் ॥ ௧௩

தேஜோவாரி க்ஷிதீர்வ்யோம வ்யோமாத
தே ஸ்பர்சவத்த்வத: । தத்ஸ்பர்சேந்த்ரியஜா ஸா
க்ஷாத் ப்ரவேசோ நேஷ்யதே ததா ॥ கங

இந்திரியங்கள் தன்காரணமான பூதந்தவிர மற்றொரு பூதத்தைக் குணத்துடன் கிரகிக்காம லிருக்குமாயின் அது சரியாகும்; அவ்வாறில்லையே. ஏனென்னில் த்வக் கிந்திரியம் பரிசத்துடன் பிருதிவி முதலான நான்கு பூதங்களையுங் கிரகிக்கிறது. நேத்திரம் ரூபத்துடன் மூன்று பூதங்களையுங் கிரகிக்கிறது. அப்போது மூன்று திரவியத்திலிருந்து நேத்திர முண்டானதாகச் சொல்லவேண்டும். அவ்வா றந்தவாதியே ஒப்புக்கொள்ளவில்லை. (கந - கச)

யேநாபேக்ஷ்யதே யோயம் ஸத்
ஸ்யாயம் ஸ்வகாரணம் । நத்வாத்ர ஜதி
கர்மாதி யைஸ்ஸ நஸஙதி: ॥ கரு

பின்னும் எப் பூதத்திலிருந்து எவ் விந்திரிய முண்டாயிற்றோ அவ் விந்திரிய மப் பூதத்தைக் கிரகிக்குமென்னில்? அப்போது அப் பூதங்களின் கிரியை ஜாதி சமவாய சம்பந்த முதலானவற்றை இந்திரியங்கள் கிரகிக்காம லிருக்கவேண்டும்; ஆகையா லிவ்வாறு சொல்வதில் வீணான பிரயாச மிவ்வா றுண்டாகிறது.

காயாந்த விசிஷ்டம்வம் ஸ்வைவஞ்ஞாவ

ஹாஸகஞ்ச நாஸாஸ்ய விஶிஷ்டம் தத்கஸ்யவே ஏவ
த கேந நிவார்யதே ॥ ௧௬

தத்ரத்ராஷ்டாவ ஶப்தம்வா தத்ப்ரவ்ருத்தி
கிம்க்ருதம் । ப்ராப்தம் க்ராஹாதி நாஸாதௌ
ஶ்ரோத்ரம் கேந நாவிஶத்ப்ரதா ॥ ௧௭

பின்னும் சரீர த்வாரத்தி லாகாசம் சப்தத்தைக் கிரகிக்கு மென்னில்? ஸ்ரோத்திர த்வாரத்தைப்போல் நாசித்வாரமும் கிரகிப்பதற்கு என்னதடை. அப்போது நாசாதித் துவாரத்திற்குச் சப்தத்தைக் கிரகிக்கும்படியான அதிருஷ்ட மில்லையெனில்? அப்போது ஆங்காரத்தி லுண்டான இந்திரியங்களும் மற்றொரு பூதாதிகளைக் கிரகிப்பதற்கு அதிருஷ்ட மில்லாததால் கிரகிக்கவில்லை யென்பதற்கு என்ன விரோதம். இதற்காக அவ்வப் பூதத்திலிருந்து வந்ததென்று ஒரு நியமஞ் சொல்வானேன். அவ்வாறொப்புக்கொள்ளாவிடில் நாசாதி த்வாரமும் சப்தத்தைக் கிரகிக்கட்டுமென்று மாக்ஷேபத்திற்கு ஓ ருத்தரமுமில்லை. (௧௬—௧௭)

யுக்த்யாகமே ஹ்யவிஷயாத்ப்ரதீதி
ஶப்தவத்வா । ஶிதாஸ்யார்த ஶிதாஸ்ய
ஸம்ஜ்ஞாயஸ்ஸித்தி ஸம்ஶய: ॥ ௧௮

இவ்வாறு யுக்திசொல்லக் கூடாத விடங்களிலும் ஆப்தவாக்யமான ஆகமத்தா லறிவதற்கு யாதொரு

குற்றமுமில்லை. அற்பமான அர்த்தத்தைத் தெரிவிக்கு மநுமானுதிப் பிரமாணங்களைவிட சர்வஞ்ஞனை வீஸ்வரனுற் கூறப்பட்ட ஆகமமே மேலான பிரமாணமென்று பெரியோர் சொல்கின்ருர்கள். (க௮)

தன்மாத்திரைகளி லிருந்து ஐந்து பூதங்களு முண்டாயிற்றென்று சொல்லியதை விசேஷித்துச் சொல்கின்ருர்.

வ்யோம ப்ரபஞ்ஜநாக்நி ஸலில
மயோ ஶப்தாத்யேகோத்தரகுணா: | ஸ்தூலாந்யேகா
த்ரமேண அவகாஶாதி வ்ருத்திகா: ॥ க௯

ஶப்தஸ்பர்ஶரூபரஸகந்தா வேஷ
ரோகுணா: | ஸ்தூலா வாய்வாதிஷுவ்யா
க்த ஸவர்ணா ப்ரதிஸ்தூலகா: ॥ உ௦

ஆகாசம் வாயு தேஜசு ஜலம் ப்ருதிவி என பூதங்கள் ஐந்து. இவை சப்தமுதலாக ஒவ்வொரு குணமதிகமாகவுடையன. இடங்கொடுத்தல் முதலான வியாபாரமுள்ளன. ஒவ்வொரு குண மதிகமா யிருப்பதாவது? ஆகாசத்திற்குச் சப்தமாத்திரமும், வாயுவிற்குச் சப்தத்துடன் பரிசமும், தேஜசிற்கு அவற்றுடன் ரூபமும், ஜலத்திற்கு அவற்றுடன் ரசமும், ப்ருதிவிற்குச் சப்த பரிச ரூப ரச கந்தம் ஐந்து முண்டென் றறிக. ஆகாசத்திற் சப்தம் எதிரொலி யாகவும், வாயுவிற் சக

சகவென்று அசைவைக் காட்டுவதாயும், தேஜஸில் தமதமவென்று எரிதலைக் காட்டுவதாயும், ஜலத்திற் சலசலவென்று ஓட்டத்தைக் காட்டுவதாயும் பிருதிவியிற் கடகடவென்று கடினத்தைக் காட்டுவதாயு மிருக்குமென் றறிக. (கக—உ0)

வ்யூஹோ வகாஶதாநஞ்ச பக்திஸம்
க்ரஹ தாரணா: | வாயோர் வஹ்நேர் ஜல
பூதாநாம் ப்ராணிநாஞ்ச வ்ருத்தய: || உக

இடங்கொடுத்தல் கும்பலாகக் கூட்டுதல் சமைத்தல் உண்டையாகச் சேர்த்தல் தரித்தல் இவை ஆகாசாதி பஞ்சபூதங்களின் வியாபாரங்களெனவறிக. (உக)

சங்கை.

ஶப்த: ஸ்வாஶ்ரயமுத்ஸ்ருஜ்ய ஶ்ரோத்ர
ஸம்ஶ்ரித: | [illegible] ஸ்வதஸ்ஸித்
ஸர்வபூதகுண: கதம் || உஉ

சப்தமானது ஆச்ரயமான பேரிமுதலானதை விட்டு வெளியிடத்திற் றோற்றுகிறபடியால் ஆகாசத்தின் குணமேயென்று சிலர் சொல்கிறபடியால் எல்லாப் பூதங்களின் குணமென்று எப்படிச்சொல்லலாம். (உஉ)

உத்தரம்.

க்வாப்யத்ர ஶ்ரவணாகாஶே கர்ணேந்த்ர
த்ர தத்குண: | பரேஷாம் ஶ்ராவ்யதா
த்ர [illegible] ஸம்வாதநாத் || உஙு

வெளியிடத்தில் தோற்றுகிறதென்பது எவ்விடத்தில், சுரோத்ராகாசத்திலெனில்? ஆகாசத்தின் குணமங்கே யெவ்வாறு தோற்றலாம். அதுவு மாச்ரயமென்றே யொப்புக்கொண்டிருக்கிறபடியா லெனில்? அவ்விஷயத்தில் மனிதர்களுடைய அநுபவமே பிரமாணமாகும். அதாவது இம்மத்தளத்தில் இவ்வீணையில் இப்பேரியிற் சப்த முண்டாயிற்றென்று பிரத்யக்ஷமாகத் தோற்றுமேபடியால். (௨௩)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௨௪

ஆனால் ஒருவேளை சுரோத்ரத்திலும் தோற்றுகிறதே யென்னில்? அவ்விடத்திலும் இந்தச் சப்தம் பரிணமித்துத் தோற்றட்டுமே! என்னவிரோதம். (௨௪)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௨௫

மேலும் பிரத்யக்ஷத்தாலு மாகமத்தாலு மடிபட்டுப்போன ஏது துஷ்டமாகையாற் காரியசாதக மாகமாட்டாதென்று நியாயந்தெரிந்தவர்கள் சொல்கின்றார்கள். ஆகமத்தில் ஐந்துபூதங்களிலும் சப்தமுண்டென்ற படியாலும் பிரத்யக்ஷமாகவும் பரிசத்தைப்போல மற்ற

நான்கு பூதங்களிலும் தோற்றுகிற படியாலும் இதற்கு விரோதமான வேது துஷ்டமே. (உரு)

அல்லது ஆச்ரயத்தை விட்டு வேறிடத்தில் தோற்றுகிற படியால் சப்த மாகாசத்தின் குணமேயென்று பிடிவாதமாகச் சொல்வா யானால், அப்போது,

[illegible] உருஉ

தாழைபின்பூ சண்பக முதலானவற்றின் கந்தமானது ஆச்ரயத்தை விட்டு வெகுதூரத்தில் தோற்றுகிற படியாற் கந்தமு மாகாசத்தின் குணமாகட்டுமென்று வரும். அதற்கெவ்வாறு பிரத்ய க்ஷாகம விரோதமோ, அவ்வாறே யிங்குச் சப்தத்திற்கு மறிக. (உருந)

[illegible] உகூஉ

[illegible] உஎஉ

[illegible] உஅ

ஐந்து பூதங்களின் விசேஷ குணங்களாவன ? சப்

த மாகாசமுத லைந்திலும், பரிசம் வாயுமுதல் நான்கிலும், ரூபம் தேஜசுமுதல் மூன்றிலும், ரசம் ஜலமுத லிரண்டிலும், கந்தம் பிருதுவி யொன்றிலு முண்டென்றறிக. அவற்றுள் வாயுவிலும் பிருதிவியிலும் அநுஷ்ணசீத ஸ்பரிசம், ஜலத்திற் சீதஸ்பரிசம் அக்னியி லுஷ்ண ஸ்பரிசம். ஜலத்திற் சுக்கிலரூபம், அக்நியில் ஒளியுள்ள சுக்லரூபம், பிருதுவியிற் சுக்கிலமுத லெழுவித ரூபமும். ஜலத்தில் மதுரரசமும், பிருதிவியில் மதுரமுத லாறு ரசமும். பிருதிவியிற் சுரபி அசுரபி யிரண்டுவித கந்தமு முண்டென்று தெரிந்தவர் சம்மதம். (௨௬-௨௭-௨௮)

தேஹேஸ்தி மாம்ஸகேஶத்வங்நகதந்தாஶ்ச
பூமிஜா: । மூத்ரஶ்லேஷ்மாஸ்ருக்ஸ்வேத ஶு
க்ராண்யம்புபவானி து ॥ ௨௯

தேகத்தி லைந்துபூதங்களு மிருக்கும் விதமாவன? எலும்பு மாம்ஸம் மயிர் தோல் நகம் பல் இவை பூமியினம்சம். மூத்திரம் ரக்தம் கபம் வேர்வை சுக்லம் இவை ஜலத்தி னம்சம். (௨௯)

ஹ்ருதி பக்தரி த்ருஶோ: பித்தே தேஜ
ஸ்த்த ஜடராநல: । ப்ராணாத்ய: ஸ்திதிஹே
தோ ந ஸ்வஸ்தாநத்வவேத ॥ ௩௦

இருதயத்திலும் பாகஞ்செய்யும் ஜாடராக்நியிலும் நேத்ரங்களிலும் பித்தத்திலும், உஷ்ணம் சமைத்த

ல் பிரகாசம் எரிதல் இவ்வித அக்நியின் தன்மை தோற்றுகிறபடியால் அவை யக்நியி னம்சம். பிராணாதி வியாபார பேதத்தால் வெவ்வேறு பேர்கொண்டு தேகத்தில் வாயு இருப்பது முன்னமே சொல்லியாயிற்று.

[illegible]
[illegible] ௩௰

ஆகாசமானது ஆங்கார விருத்தியை யநுசரித்துச் சகல நாடிகளிலு மிருக்கும். (௩௦)

[illegible]
[illegible]
[illegible] ௩௧

கலைமுதற் பூமிவரையி லிந்தத் தத்வங்கள் புருடனுக்குப் போககாரிய சாதகங்களா யிருக்கின்றன. போகஞ் சாதாரண மாகாமல் வேறுபட் டிருப்பதால் இந்தத் தத்வங்களு மாத்மாக்கள்தோறுந் தனித்தனி யுண்டென்று நிச்சயிக்கப்படும். (௩௧)

ஆனாற் போகபேதத்திற்குக் கன்ம நிமித்தமாகுமென்னில்? சரியே. ஆனா லந்தக் கன்மம நேரிட நிமித்தமாகாது தத்வசரீரங்களைப் பேதப்படுத்தி அதன்வழியே போகங்களையும் வேறுபடுத்தும்.

[illegible]
[illegible]
[illegible] ௩௨

இந்தச் சூக்ஷுமமான தத்வமய சரீரமானது கன்ம பலபோகரூபமான தனது வியாபார மொருக்காலி லெங்குந் தோற்றாதபடியால் வியாபகமன்று. மகத்து ஆங்கார முதலான வநேக காரணத்திலிருந் துண்டான போதிலு மிந்தச் சரீரம் கன்மபோக ரூபமான ஓரே பலமுள்ளதென் றறிக. அஃதெவ்வாறென்னில்? அநேக விதமான வத்தி எண்ணெய் பாத்திர முதலானதி லுண்டான தீபமானது பிரகாசரூபமான ஓரேபல முள்ளது போல. (௫௨)

ஜு தந்த்ராதிவ்யாஹிருதிஸம் வஸ்வந்ஸ்வத்ர ஜ
ஞோபஸிஸ்வஸம்ஹதிரஹந ஸஹஸ்விவந்திஸ்ம
யாஸ் | நைநதாவதாமர்த்தி ஸாவநதகவ
வஜ்ஞத்தி ஞாயாநரேஹ விஷயாஸ்த்ரீயாய
வக்ஷ்ர || ௫௫

இவ்வா றிந்தச் சம்சாரியான வனுயிற்குக் கன்மங்களைப் புசித்துக் கழிப்பதாயும் சேதனனுடைய சேர்க்கையாற் சேதனரூபமாயும் மாயாசர்ப்ப விருத்தியாயு மிருக்கின்ற விந்தத் தத்வசரீரமானது சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இதுவே போதாதென நினைத்து ஆச்ரயம் தூலதேகம் விஷயங்கள் இவைகளினுற்பத்தியின்பொருட்டுப் புவன தத்வ பரம்பரையை யினிச் சொல்லுவாம். (௫௫)

பன்னிரண்டாவது, இந்த்ரியாதி ப்ரகரணம் முற்றிற்று.

ஆச்லோகம்—உசசு.

அ

சிவமயம்.

௧௩—வது, அத்வ ப்ரகரணம்.

ஶ்ரேயோர்தா²ய ப்ரவிஷ்டஸ்ய ஸம்ஸ்வ
நாதி² விதி⁴த்ஸதே । ஸாமாந்யேநாத்⁴வ
யோநிஸ்ஸ்ருஷ்டி: கார்யேணாத்⁴வ ஸம்பூ⁴த: ॥ ௧

அசுத்தர்களான வாத்மாக்களுக்கு மேலான சிரேயஸிற்குத் தடையான கன்ம பாச பந்த நீங்கும்பொருட்டு அவ்வப்போகங்கட்குச் சாதனங்களான தநுகரண புவனங்களைச் சிருஷ்டிக்க நினைத்தபின் அனந்தேஸ்வரர் ஆத்மாவிற்குச் சொல்லிப்போந்த விஷய போகரூப மான காரியம் நன்றாகச்சித்திக்கும் பொருட்டுச் சாதாரணங்களான கலைமுதலான காரணங்களிலிருந்து புவனங்களை யுண்டாக்கினார்.

இவ்விடத்தி லுண்டாக்குவது ஜகத்ரூபமான காரணத்திலிருந்து காரியம் வியக்தமாகச் செய்வதென வறிக. (௧)

தாநி காரணதாம் கார்யாணி ஜ
க்³மு: । ஸம்ஸார ஸித்³த⁴யே ஜ்ஞாநோத்பத்த்யா
ந ப்ரவக்ஷ்யதே । ௨

அந்தப் புவனங்கள் காலாக்னி புவனமுதல் கலாபுவன பரியந்தமென் றறிக. இதைத்தான் தத்வ மறிந்தவர்கள் போகஸ்தானமான சம்சார மண்டலமென்று சொல்கிறார்கள். (உ)

முன் சொல்லிய தத்வங்க ளியாவையும் கலைமுதலான காரணங்களில் தோற்றினவை; மாயையிலிருந் தல்ல. மாயை நிஷ்களமென்று ஸ்வாயம்புவாதி யாகமங்களிற் சொல்லியபடியால் மாயையி லுண்டாயிற் றென்னில்? மாயையும் புவனாதிகளைப்போல சந்நிவேச முள்ளதாய்ப் போக்யமாகும். அவ்வாறாகிற் கடாதிகளைப் போல் அநித்தியமாகும். மாயை போக்ய மாகாவிடில் மாயாகாரியமன்றிப் போக்யமே யில்லாமையாற் புருடனுக்குப் போக்யமில்லாமற் போக்த்ருத்துவ மில்லையாமென்னில்? சரியே. ஆனால் அதன் காரியமெல்லாம் வியக்திரூப மாகையால் அப்போது போக்யமாகும்; சக்திரூபமா யிருக்கும்போது அல்லவென்று சொல்லப் பட்டிருக்கிறது.

இவ்வாறாகில் மாயாகர்ப்பத்தில் புவனங்க ளிருக்கின்றன வென்கையாற் புவனங்களெல்லாம் சந்நிவேசமுள்ளதாய்ப் போக்யமா யிருப்பதால் மாயையு மவ்வாறாகுமென்னில்?—

மாயாயா ஸந்நிவேஶே ஸத்யபி

யோநிவா꞉ । தத்வப்ராணஸ்ய தீக்ஷாயாம்
ஶோத்யந்தே க்ருத்ஸ்நஶோதகே ॥ ௩

நித்யத்வ வ்யாபகத்வாதி ஶ்ரவணாதுப
வர்ணிதே । கார்யத்வம் போகாதி யஸ்மாந்மாத்ர்யம்
உக்தம் தத்ப்ரஜ்ஞேயமிஷ்யதே ॥ ௪

மாயையிலும் மண்டலேஸ்வரர் கஹநேஸ்வரர் முதலான ருத்ரர்கள் புவனபதிகளாய்ச் சொல்லப்படுகிறார்கள். கிரியாபாதத்தில் தீக்ஷையிலும் தத்வசுத்தி சொல்லியிருக்கிறது. ஆகிலுமிவைகளெல்லா மதன்காரியமான கலாமஸ்தகத்திலென் றறியவேண்டும். ஏனெனில்? மாயை நித்தியமென்றும் வியாபகமென்று மாகமங்களிற் சொல்லி யிருக்கிறபடியால், புவனமுதலானவை யுருப்பட்டுப் போக்யமாக விருப்பனவெல்லா மறியக் காண்கையால்; இஃது தத்வா றல்லவென்று நிச்சயிக்கப்படுகிறது. ஆகையாற் காரியமாகிய கலைமுதலானவையே புவனகாரண மென்னில்? ஒரு குற்றமு மில்லை. (௩-௪)

இந்நியாயம் மஹாமாயையென்னும் வித்யா தத்வத்திலு மறியவேண்டு மென்கிறார்.

ப்ரஜ்ஞாஸ்த்ரவிதோ யாஸ்யா꞉ பாஶஸ்த்ரா꞉
பதய꞉ க்ருதா꞉ । யேதஸ்த்ராஜவிபத்ரீ
ஜே தேவி தச்சக்ருத்ஸ்நஶோதகே ॥ ௫

சுத்தாத்வாவிலும் பரமான வித்தையென்னு மஹாமாயையின் காரியாதிகாரிகளாய் யாதொரு பதிகளிற்

சொல்லப்பட்டிருக்கிறார்களோ அவர்களு மதன் காரிய மஸ்தகத்திலென் றறியவேண்டியது. (௫)

இனி, கீழ் அத்வாவி லேகதேசத்தி லிருக்கும் பிரமாண்டத்தின் அகல வுயரங்களையும் அதற்குட்பட்ட புவனங்களின் அளவையும் சொல்லும்பொருட்டு யோஜனப் பிரமாணத்தைப் பரமாணு முதலாகச் சொல்கின்றார்.

ரஜோ விலோக்யதே யத்து ஜாலாவி
ஷ்டார்க்கரஶ்மிஷு । தத³ஷ்டாஷ்டகு³-
ணம் [illegible] த்ருதீயஸ்யாஷ்டகாத் கச: ॥ ௬
லிக்ஷா யூகா யவோ [illegible] அங்கு³-
லம் [illegible] । [illegible]
[illegible] ॥ ௭
[illegible] க்ரோஶ
[illegible] ॥
[illegible] யோஜநம் ॥ ௮

சாலகத்தின் வழியாகவருஞ் சூரியகிரணத்தில் தோற்றும் பரமாணுரூபமான சூக்ஷுமப் பொடியை மும்முறை யெட்டிற்பெருக்க ஒரு (கசாக்ரம்) மயிர்முனை என்னும் பிரமாணமாகும். அது எட்டு கொண்டது ஒரு லிக்ஷை. அது எட்டு கொண்டது ஒரு யூகை. அது எட்டு

கொண்டது ஒரு யவம். அது எட்டு கொண்டது ஒரு அங்குலம். அது இருபத்துநான்கு கொண்டது ஒரு முழம். அது நான்கு கொண்டது ஒரு வில்லு. அது இரண்டு கொண்டது ஒரு கோல். அது இரண்டாயிரம் கொண்டது ஒருகுரோசம். அது இரண்டு கொண்டது ஒரு கவ்யூதி. அது இரண்டு கொண்டது ஒரு யோஜனை யென்று தெரிந்தவர் சொல்கின்றார்கள். (௬—எ—அ)

கபாலம் ஶைவம் ஸௌவர்ணம் ப்ரஹ்ம
ணோண்டஸ்ய யோஜனை:। தஸ்யாந்த: கா
லாக்நிருத்ராக்ய: காலாக்நிர் வஹ்நிவஹ்நி ॥ ௯

அவ்வித யோஜனங் கோடிகொண்டது பிரமாண்ட கபாலத்தின் பருமன். அப் பிரமாண்டத்திற்குள் காலாக்கி ருத்ரருடைய ஸ்தானம் பொன்மயமா யிருக்கிறது. அதே கோடியோஜனப் பிரமாணங் கொண்டது. (௯)

யத்ராஸ்தே காலதீக்ஷ்ணாம்ஶுஸ்ஸோ கோடிம்ஸ
ஜா ஸ்தயாவிஸ்தரை:। ஸுரைர்ப்ராஸ்தை
வ்ருதாஸ்தாம்ஶவ: காலாக்நி ஸிக்திவ்ருந்தக: ॥ ௧௦

அவ்வாலயத்திற் பிரளயகாலத்தி லுண்டாகிய கோடிசூரியப் பிரகாசமுள்ள காலாக்கி யென்னும் பிரசித்தரான ருத்ரர் அவ்வித அநேக ருத்ரர்களாலே சூழப்பட் டிருக்கிறார். (௧௦)

ஸஹஸ்ரய்வ வக்ஷிதஸ்ரேதாநாம் யஷ்டி
ஸஹஸ்ரம் த்ருக்தேஜஸி। ஸஹஸ்ரக்ஷ்வேஷு தே

ஶக்த்யா ஸம்ஹர்த்ர்யா ப்ரேரிதோ ஜ்வலதே ப்ர
போ: ॥ ௧௧

அந்தக் காலாக்நி ருத்ரர் பரமேஸ்வரனுடைய ஸங்கார சக்தியினாலே பிரேரிக்கப்பட்டு ஜ்வலிக்கின்றதேஜசுள்ளவராகும்போது சகலாத்வாவிலு மிருக்கின்ற சர்வப் பிராணிகட்கும் பயமுண்டாகிறது. (௧௧)

தஸ்ய ஸ்வபாவதோ ஜ்வாலா: ப்ரவ்ரு
த்தா தஶகோடய: । யோஜநாநாம் ததூ
ர்த்வம் ச தூமஸ்ஸாத்வ ஸ்பஷ்டபஞ்சகோ ॥ ௧௨

அவருடைய ஜ்வாலையானது ஸ்வபாவமாகப் பத்துக்கோடி யுயரம் ஜ்வலிக்கின்றது. அதன் புகை திட்டமாய்ப் பயங்கரமா யைந்துகோடி யுயர மிருக்கின்றது.

தத: புடாஸ்த்ரயஸ்த்ரிம்ஶத்ரயோக்ஷா
ந கோடிகா: । தஶைகாநி சாத்ரிம்ஶல்ல
க்ஷாணி த்ரயாத்ரயா ॥ ௧௩
ஸ்தாநாநி யாதநாமேதா நிஷ்டிதா
நிஷ்ப்ரயோவா । ௧௩-௧

அதன்மேல் நரகங்களின் விஸ்தாரமாகிய (புடங்கள்) ஸ்தானங்கள் முப்பத்துமூன்று. தனித்தனியே தொண்ணூறு லக்ஷயோஜனையுள்ளன. அவைகளிலொன்றுக்கொன்றந்தரம் முப்பத்திரண்டு லக்ஷயோஜனை, அவை பாபி

கள் நரகபாதனை யநுபவிக்கும்பொருட்டு அத்வாவை யுண்டாக்கின வனந்தேச்வரராலே செய்யப்பட்ட ஸ்தானங்கள். (கந—கந௨)

தாநி தே நாமபிர்வக்ஷ்யே த்விஜோ
வ்ர நிபோதயே || கச

அந்த நரகங்களைப் பெயரிட்டுச் சொல்கின்றேன் கேளும் பரத்வாஜருஷியே! (கச)

ரௌரவத்வாந்த சீதோஷ்ண ஸந்தாபாப்ஜ
மஹாப்ஜகா: | காலஸூத்ராஷ்டமா ஹ்யே
தே நரகா இதி விஶ்ருதா: || கரு

ரௌரவம் த்வாந்தம் சீதம் உஷ்ணம் சந்தாபம் அம்புஜம் மகாம்புஜம் காலசூத்ரம் இவை எட்டும் நரகங்களென்று பிரசித்தங்களாயிருக்கின்றன. (கரு)

ஸூச்யாஸ்ய: காலபந்தச்ச க்ஷுரதாரா
அம்பரீஷகா: | தப்தாங்கார மஹாதா
ஹ ஸந்தாபபிச்சநௌ || கசா

அஷ்டைதே ஸ்யுர்மஹாந
ரகா: | கசா௭

சூசிமுகம் காலகட்கம் க்ஷுரதாரம் அம்பரீஷம் தப்தாங்காரம் மஹாதாஹம் சந்தாபம் பிபச்சம் இவை எட்டும் மகாநரகங்கள். (கசா—கசா௭)

லாக்ஷாப்ரலேப மாம்ஸாத நிருச்ச்வா
ஸக ஸோச்ச்வாஸாஃ । யுக்மாத்ரி ஶால்மலீ
லோஹ ப்ரதீப்தக்ஷேபக விபாஸகாஃ ॥ ௧௭
க்ருமிநிசய இத்யஷ்டௌ ராஜாநஃ பரி
கீர்த்திதாஃ । ௧௮

லாக்ஷாப்ரலேபம் மாம்ஸாதம் நிருச்வாஸம் ஸோச்வாசம் யுக்மாத்ரி சால்மலீ லோஹப்ரதீப்தக்ஷேபம் விபாஸம் க்ருமிநிசயம் இவை எட்டும் ராஜநரகங்கள். ௧௮

லோஹஸ்தம்போ விண்மூத்ர ஸம்பூர்ணா
வைதரணீ நதீ । தாமிஸ்ரஶ்சாந்த தாமி
ஸ்ரஃ கும்பீபாக மஹாரௌரவஃ ॥ ௧௯
அவீசிரித்யஷ்டௌ ராஜராஜே
ஶ்வராஃ ஸம்ஸ்ம்ருதாஃ । ௨௦

லோஹஸ்தம்பம் விண்மூத்ரம் வைதரணீநதி தாமிஸ்ரம் அந்ததாமிஸ்ரம் கும்பீபாகம் மகாரௌரவம் அவீசி இவை எட்டும் ராஜராஜேஶ்வரநரகங்கள். இவ்வாறு நான்கு வகையாய் முப்பத்திரண்டு நரகங்களென வறிக. (௧௯—௨௦)

ஏஷாம் பட்டாநாம் நரகே ஸ்வாஸ்தும்

[illegible] ॥ ௨௦

இந்த முப்பத்துமூன்று நரக புடங்களினளவு அந்தராளத்தோடு சேர்ந்து முப்பது கோடியும் இரண்டு லக்ஷமும் ஆகிறது. (௨௦)

[illegible] ॥ ௨௧

[illegible] ௨௧½

அந்த நரகபுடங்களின்மேல் முப்பதினாயிர யோஜனை வெளி. அதன்மேற் பூமி ஒன்பது லக்ஷயோஜனையுள்ளது. அதன்மேற்பாதி பொன்மயமாயிருக்கும், கீழ்ப் பாதியிற் பாதி இரும்புமயமாயும் பாதி மண்மயமாயுமிருக்கும். (௨௧—௨௧½)

[illegible] ॥ ௨௨½

அவ்விடத்திற் கூறிப்போந்த முப்பத்திரண்டு நரகங்கட்கு மதிபதியாகிய கூஷ்மாண்டரென்று பிரசித்த

ரான ஈச்வரர் பிரளயகால சூரியனைப்போலவு மக்நியைப்போலவுந் தேஜசுள்ளவரா யிருப்பர். (உஉ௭)

கராலவக்த்ர: க்ரூரோऽஸௌ வஹ்நிகோடி
ஸமோஜ்வல: | ஸுகவாணஸ்த்ரயா ஹும்
ப்ரேத ஹும்ப்ரேத ஹும்யோநி ஸம்வ்ரு
த: || உகூ௭

அந்தக் கூச்மாண்டர் பயங்கரமான முகமுள்ளவராயும் கோபிஷ்டராயும் உருட்சியான கண்விழி யுள்ளவராயும் பாசாயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டும் தன்னைப்போலொத்த அநேக பூதங்களாற் சூழப்பட்டிருப்பர். (உகூ௭)

அயோமயஸ்ய ஸௌவர்ணஸ்யோர்த்வம் ஸப்தமம்
ஸ்ம்ருதம் | ஸாஹஸ்ரம் ஷட்கம் ப்ரோக்தம்
ஷ்டகோடிகம் த்ரிகோடிகம் || உசஎ

இரும்பு மயமாயும் பொன்மயமாயு மிருக்கும் புடத்திற்கு மேல் நாமிருக்கும் பூமி எட்டாவதாகும். கீழ் ஆறுபூமிகள் ஆயிர ஆயிர யோஜனையுள்ளன. அதற்கு மே லிந்தப் பூமிக்குக் கீழ்ப்பட்ட ஏழாவதுபூமி மாத்திரம் இரண்டுகோடி எண்பத்தெட்டுலக்ஷ யோஜனை யுள்ளது. (உசஎ)

ஸப்தைதாநி ஸஹஸ்ராணி ப்ரமாணம்

ஸஹஸ்ராணி । ததா ஸாம்ஸ்வர்ணகம் ஹாடகேச்வரம்

வ்யாப்தம் பாதாளஸப்தகம்|| உருஉ

இந்த வெட்டுப் பூமிகட்கு நடுவிலுள்ள விடங்கள் ஒவ்வொன்று ஒன்பதினாயிர யோஜனை யுள்ளவை. எல்லாவற்றிற்கு மேலாயும் பொன்மயமாயும் மேற்சொல்லு மாடகேச்வரா திஷ்டிதமாயுமிருக்கு மிடமாத்திரம் பதினாயிரயோஜனை யுள்ளது. இவ்வேழுபூமிகளையு மேழுபாதாளமென்பர். (உருஉ)

தாஸாமாபாஸமித்யுக்தம் ப்ரதமம் நா

மதேயகம் । த்விதீயம் பாதாளாக்யம்

நிதலஞ்ச த்ருதீயகம் || உசா

கபஸ்திமந் மஹாக்யஞ்ச பாதாளஞ்ச ர

ஸாதலம் । உஎ

அந்தப் பாதாளங்களின் பெயர்களாவன? ஆபாசம் பாதாளாக்யம் நிதலம் கபஸ்திமத் மகாதலம் ரசாதலம் பாதாளம் எனவேழு. (உசா—உஎ)

ஸ்வஸ்வமேதேஷு தைத்யேந்த்ர ஸ

ர்பராக்ஷஸநாயகாஃ। ஸ்வம்ஸ்வம் ஸாம்ராஜ்ய

மாஸ்தாய நிவஸந்தி யதேப்ஸிதம்|| உஅ

இந்த வேழு பாதாளங்களிலும் அசுரர் நாகேச்வரர் இராக்கதர் இவர்கள் அதிபதிகளாக அவ்வேழுபெய

ரிருக்கிறார்கள்; அவர்களின் பெயர்களை மேற்சொல்லுவாம். (௨௮)

𑌦𑍈𑌤𑍍𑌯𑌶𑍍𑌶𑌙𑍍𑌖𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌃
𑌶𑌿𑌶𑍁𑌪𑌾𑌲𑌕𑌃 । 𑌕𑌰𑍍𑌕𑌨𑍍𑌧𑍁𑌹𑌿𑌰
𑌣𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑍋 𑌬𑍃𑌹𑌤𑍍𑌕𑌰𑍍𑌪𑌕𑍋 𑌬𑌲𑌿𑌶𑍍𑌚𑌾𑌸
𑌯𑌾 ॥ ௨௯

அசுரர்கள் பெயர், கீழ்ப்பாதாளத்திற் சங்குஸ்ருதி அதன்மேல் பிரஹ்லாதன் சிசுபாலன் கர்க்கந்துகன் இரண்யாக்ஷன் பிரகத்கர்ப்பன் பலி இவ்வா றேழுபெயர் வரிசையா யிருப்பார்கள். (௨௯)

𑌕𑍁𑌟𑌿𑌲𑍋 𑌵𑌾𑌸𑍁𑌕𑌿𑌃 𑌕𑌮𑍍𑌬𑌲𑌸𑍍𑌤𑌥𑌾 । 𑌕𑌾𑌰𑍍𑌕𑍋𑌟𑌕𑍋 𑌯 𑌕𑌾𑌳𑌾
𑌙𑍍𑌗𑍋 𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌸𑍍𑌤𑌕𑍍𑌷𑌕𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ ௩௦

நாகேஸ்வரர் பெயர், குடிலகன் வாசுகி கம்பலன் கார்க்கோடகன் காளாங்கன் துர்த்தர்சன் தக்ஷகன் என வரிசையா யேழுபெய ரிருப்பார்கள். (௩௦)

𑌵𑌿𑌕𑌟𑍋 𑌲𑍋𑌹𑌿𑌤𑌾𑌕𑍍𑌷𑌶𑍍𑌚 𑌯𑌮𑍋 𑌵𑌿𑌕𑌟𑌾𑌨𑌨𑌃 । 𑌕𑌰𑌾𑌳𑍋 𑌭𑍀𑌮𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌶𑍍𑌚
𑌪𑌿𑌙𑍍𑌗𑌳𑌾𑌕𑍍𑌷𑌶𑍍𑌚 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃 ॥ ௩௧

இராக்கதர்பெயர், விகடன் லோஹிதாக்ஷன் யமன் விகடாநநன் கராளன் பீமதிர்ஷ்ராதன் பிங்களன் என வரிசையா யேழுபெயரிருப்பார்கள். (௩௧)

𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌪𑌰𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌃 𑌪𑌾𑌤𑌾𑌲𑌾𑌧𑌿
𑌪𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 । 𑌹𑌾𑌟𑌕𑍇𑌶𑌃 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌮𑌯𑍇
𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌹𑌾𑌟𑌕𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ ௧௨

அவ் வேழுபாதாளங்கட்குமேல் அந்தந்தப் பாதாளாதிபதிகட் கெல்லா மீஸ்வரரான ஆடகேஸ்வரர் ஆயிரயோஜனையுள்ள பொன்மயமான வாலயத்தி லிருக்கின்றார். (௧௨)

𑌯𑌂 𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌾𑌲
𑌯𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑍈𑌃 । 𑌦𑍈𑌤𑍍𑌯𑌯𑌕𑍍𑌷
𑌸𑍁𑌰𑌾𑌹𑍀𑌶𑌕𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑌃 ॥ ௧௩

அவ் வாடகேஸ்வரரை அசுர யக்ஷ தேவ நாக கன்னிகைகள் தங்க ளிஷ்ட நிறைவேறும் பொருட்டு நியமத்துடன் தாள லயாதிகளா லழகாய்ப் பதங்களினால் துதிக்கின்றார்கள். (௧௩)

𑌤𑌤𑌃 𑌕𑍋𑌟𑌿𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀 𑌨𑌾𑌨𑌾𑌜𑌨
𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 । 𑌦𑍍𑌵𑍀𑌪𑌶𑍈𑌲𑌸𑌰𑌿𑌤𑍍𑌸𑌿𑌨𑍍𑌧𑍁
𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾 ॥ ௧௪

அதன்மேற் கோடியோசனை விசாலமுள்ளதாய்ப் பலவித ஜனங்கட் காதாரமாய் மேற்சொல்லும் த்வீபம் மலை ஆறு சமுத்ரம் இவைகளாற் சூழப்பட்டதாய் பூமி யிருக்கின்றது. (௧௪)

ஜம்பு ஶாக குஶ க்ரௌஞ்ச ஶால்மலீ கோ
மேத புஷ்கரா: | லக்ஷாதி த்விகுணா த்வீ
பா: க்ஷாராத்யப்திஸமாவ்ருதா: ‖ ௧௫

த்வீபங்களாவன? ஜம்பூ சாகம் குசம் கிரௌஞ்சம் சால்மலி கோமேதம் புஷ்கரம் என வேழு த்வீபங்கள் லக்ஷமுத லிரட்டிப்பான யோஜனப்பிரமாண முள்ளவைகளாய்த் தங்கட்குச் சரியான அளவுள்ள உப்புமுதலான வேழு சமுத்திரங்களாற் சூழப்பட் டிருக்கும்.

ததோ ஹிரண்மயீ பூமிர் லோகாலோ
கஸ்து பர்வத: | தத: பரஸ்தாத் தமஸோ
தம: கடாஹஸ் தஸ்ய ஸமந்தத: ‖ ௧௬

அதற்கப்பாற் பொன்மயமான பூமி. அப்பால் லோகாலோக பர்வதம். அப்பால் இருள். அப்பால் கர்ப்போதமென்னும் சமுத்ரம். அப்பால் அண்டகடாகம். இப்படி பூமண்டல மிருக்கிறது. (௧௬)

ப்ரச்னை.

விஸ்தரேணாஸ்மின் த்வீபே கா நேநாக
[illegible] ஸம்க்ருதா: | ப்ருத்வீம் ஸமவதீம் ப்ருச்ச
[illegible] விஸ்தராத் ‖ ௧௭

க்ஷிதிவ்ருத்தி [illegible] ஸம்ப்ரத்யக்ஷ
[illegible] | நிஷ்ணாஞ்ஸி ஸகாலா [illegible]
[illegible] யாவந்தி ஜேஜே: ‖ ௧௮

தேவேஸ்வரனாகிய தேவேந்திரனே! சகலமுந் தெரிந்த நீரோ வக்தாவாய்ச் சொல்லும். முழுதுமறிய வேண்டுமென்றென் மனங் கேட்க முயல்கின்றதாதலால் ஆச்சரியமான மலை ஆறு த்வீபம் காடு கடல் இவைகளா லலங்கரிக்கப்பட்ட சிறந்த பூமியினளவை விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன். (௧௭—௧௮)

உத்தரம்.

வத3 த்வயி மேத்ர த்3விஜஶ்ரேஷ்ட2 ஸம்க்ஷே
தோக்த ஸம்ஶ்ரவம் | த்3வீபாப்3தி4 வநாதீ3நாம்
ஶ்ருணு ஶ்ருண்வோ விஸ்தரஶோ நவ: || ௧௯

கூறிப்போந்த கிரமமாக த்வீபம் ஆறு காடு முதலானவற்றை விஸ்தாரமாகச் சொல்கின்றேன், ஜாக்ரதையாகக் கேளும் பரத்வாஜ மகாருஷியே! (௧௯)

ஜம்பூ3த்3வீபம் க்ஷிதேர்மத்4யே வ்ருத்
தம் லக்ஷயோஜநம் | க்ஷாராப்3தி4நா பரி
வ்ருதம் பரிவ்ருத்தேந தாவதா || ௨௦

ஜம்புத்வீப மென்பது பூமியின்நடு. அது வ்ருத்தமாய் லக்ஷயோசனை யளவுள்ளதாய் அவ்வள வளவுள்ள வ்ருத்தமான உப்புசமுத்திரத்தாற் சூழப்பட் டிருக்கும். (௨௦)

தஸ்ய மத்4யே ஸ்தி2த: ஶ்ரேஷ்டோ2 ராஜரா
ஜோ ஹிரண்மய: | த்ரிஸஹஸ்ர தாம்ஸாம்ஶோ
ஜ்யோதிர்ஜுஷ்ட ரத்நஸஹஸ்ர விபூ4ஷித: || ௨௧

அந்த ஜம்பூ த்வீபத்தி னடுவில் மலைகட் கெல்லா மதிபதியாயும் பொன்மயமாயும் சூரியனைவிட அதிக காந்தியுள்ளதாயும் தேவதைகட்கு வாசஸ்தானமாயு மிருக்கிற மேருவென்னு மலை யிருக்கின்றது. (௪௧)

[illegible] ௪௨

அந்த மேரு உயரம் லக்ஷயோஜனை. அதிற் பதினாறாயிரம் பூமிக்குள்ளிருக்கிறது, பூமிக்குமேல் எண்பத்துநாலாயிரம். அடியில் அகலம் பதினாறாயிரம், தலையில்முப்பத்திராயிரம். (௪௨)

[illegible] ௪௩

[illegible] ௪௩½

அந்த மலையில் இருபத்தையாயிர விருபத்தையாயிர யோஜனைக்குமேல் ஒவ்வொரு கணுவுள்ள மூன்று கணு மூவாயிர மூவாயிர யோஜனை யுயரமுள்ளவைகளா யிருக்கும். அவைகளில் முதற் கணுவில் பதினாயிர யோஜனை யகலமுள்ள ஒரு மேகலையும், இரண்டாவதிற் பதினாலாயிர யோஜனை யகலமுள்ளவொரு மேகலையும்,

மூன்றாவதிற் பதினெண்ணாயிர யோஜனை யகலமுள்ள வொருமேகலையும் தேஜோமயமாக வெளிப்புறப்பட் டிருக்கும். (௪௩—௪௩)

ரத்நாம்ஶுகோத்யோதிதாகாஶா
ஸர்வஸ்யா: சக்ரவாடேதி ஶாஸநே
வஸ்த்ரப்ரஹா விதீஶ்வ || ௪௪

தலையிலிருக்கு மேகலையானது சகல ரத்னகாந்தியுள்ளதாய்த் திக்குப்பாலர்கட் காச்ரயமா யிருக்கும். அதைச் சக்ரவாடையென்று ஆகம மறிந்தவர்கள் சொல்வார்கள். (௪௪)

ஸித்தகந்தர்வ ஸாத்யாக்யா யக்ஷ
ஸம்ருத்தி:| தஸ்யாஸ்த்வத ஸமந்தேஷு
பந்நகாஶ்சைவ ஸம்ஸ்திதா:|| ௪௫
ப்ராச்யாதிஷு ச ஶ்ருங்காணாம் ஜ்ஞாதக்ஷேத்ர
ஸ்திரோபயம்| ௪௬

அந்த மேகலைக்குக் கீழ்ப்பட்ட மேகலைகளிற் சித்தர் காந்தருவர் முதலானவ ரிருப்பர்கள். அந்த மேல் மேகலையில் எட்டுச் சிகரங்களுண்டு. அவைகளிற் கிழக்கு முதலாக இந்திராதி திக்குப் பாலகர்களுக்குப் பட்டணங்கள் எட்டிருக்கும். அவைகளின் பெயர்களைச் சொல்கின்றேன் கேளும், (௪௫—௪௬)

நாநாரத்நப்ரபா ஜாலஸஞ்சாரா மண்டிதா

ஸௌதை: | விவிதரத்நாட்யை: ஸமுஜ்ஜ்வலா ஸ்வர்க்க
ஸா ஹ்யமராவதீ | சஎ

பலவித மணிகளின் காந்திகளா லலங்கரிக்கப்பட்டுச் சித்தாதிகளா லடையப்பட்டுப் பொன்மய பூமியாயு மிருப்பது தேவேந்திரனுடைய அமராவதியென்னும் பட்டணம். (சஎ)

ஸ்வர்ணபீத மணிமய ஹேமப்ராகார
தோரணா | வஹ்நே: தேஜோவதீ வஹ்நி
துல்யபூத நிஷேவிதா || சஅ

சிவந்தும் பொன்னிறமாயு மிருக்கும் மணிகளா லிழைக்கப்பட்ட பொன்மயமான மதிள் கோட்டை வாசலுள்ளதாயும் அக்நிக்குச் சமானமான வநேக பூதங்களா லடையப்பட்டு மிருப்பது, அக்நியினுடைய தேஜோவதி யென்னும் பட்டணம். (சஅ)

யாம்யா ஸம்யமநீ துங்க லோஹ
ப்ராகார ஸம்வ்ருதா | காலபாச பித்ருவ்யாதி
ப்ரேதமாரீ நிஷேவிதா || சகூ

யமனது சம்யமனி யென்னும் பட்டணம் உயர்ந்த இரும்புமயமான மதிள்சூழ்ந்து காலபாசம் பித்ருக்கள் வியாதிகள் பிரேதகணங்கள் மாரியென்னும் லோகக்ஷயகரமான வுற்பாதரோகம் இவைகளாற் சூழப்பட்டிருக்கும். (சகூ)

க்ருஷ்ணா நைர்ருதஸ்ய பதம் யமஸ்யேவாஸிதா | நீலேந்த்ர
ப்ராஸாதவிதாநவத் ஸுரேக்ஷணா || ௫0

நிருதியினது கிருஷ்ணையென்னும் பட்டணம் யமனதுபோற் கறுத்தும் இந்திரநீலமணி காந்தியுள்ள மேற்கட்டுகளா லலங்கரிக்கப்பட்டும் அசுரர்களா லடையப்பட்டு மிருக்கும். (௫0)

ஶுத்தவத்யம்புநாதஸ்ய ஸ்படிகோ
பலநிர்மிதா | ப்ராண்யாதிஜலஜை
யாதோபிஸ்ஸேவிதா ஸாப்ரஹர்ம்யகை: || ௫௧

வருணனது சுத்தவதியென்னும் பட்டணம் படிகமணிகளா லிழைக்கப்பட்டும் மகரகூர்மாதி ஜலஜந்துக்களா லடையப்பட்டும் வெளுத்தமேகத்தையொத்த கிரகங்களினாற் பிரகாசமாயு மிருக்கும். (௫௧)

வாயோர் கந்தவதீ துங்கஶுப்ரபீத
த்வஜாகுலா | பலவத் பூதஸங்குலா
ஸர்வரத்ந விநிர்மிதா || ௫௨

வாயுவினது கந்தவதியென்னும் பட்டணம் உயர்ந்து வெண்மையாயும் பொன்னிறமாயு மிருக்குந் த்வஜங்களோடு கூடினதாயும் பலமுள்ள பூதங்களா லடையப்பட்டும் சகல மணிகளா லிழைக்கப்பட்டு மிருக்கும்.

[illegible] ௫௩

சோமனது மஹோதயையென்னும் பட்டணம் வெண்மையாய் முத்து சந்திரகாந்தமணிகளாற் செய்யப்பட்டுப் பிராம்மண கணங்களால் துதிக்கப்பட்டு இமயமலைக்குச் சமானமான காந்தியுள்ள கிரகங்களாற் பிரகாசித்திருக்கும். (௫௩)

[illegible] ௫௪

எரியாநின்ற நெற்றிக் கண்ணினால் மன்மதனையும் யமனையு மெரித்து அதனாற்கீர்த்திபெற்ற ஈசானருடைய யசோவதியென்னும் பட்டணம், சகல மணிகளாலு மிழைக்கப்பட்டு ருத்ரகணங்களாற் சேவிக்கப்பட்டு மிருக்கும். (௫௪)

[illegible] ௫௫

[illegible] ௫௬

இவ்வாறெப்போதும் சுகத்தையே கொடாநின்றும் காற்றினா லிறைக்கப்பட்ட கற்பகத்தின் பூப்பொடிகளாற் சிவந்து மிருக்கின்ற திக்குப்பாலகர் பட்டணமெட்டும் பிரமாவினாற் செய்யப்பட்டன. இவைதான் லோகபாலகர்கட்கும் அவரை யநுசரித்தவர்கட்கும் மேன்மையின்பொருட்டுச் சுவர்க்கமென்று கவிகளாற் சொல்லப்படுகின்றன. (ருரு—ருசு)

மத்⁴யே ஸஹஸ்ராணி யோஜநா-
நாம் ஸ்வயம்பு⁴வ: । ப்³ரஹ்ம ப்³ரஹ்மநாவதீ நா
ம பு⁴ரீ ஶோபா⁴ஸ்வதா ॥ ருஎ

யாவதாஶா ஶோணாநேகஜ்வலிப்தா-
மருணாஸ்ரியா । ஸாவித்ர்யா ஸ்பர்த்³தோ⁴
ஜிநேவ ஸ்வர்க்காஸாதி வர்த்திநீ ॥ ருஅ

இந்தப்பட்டணங்கட்கு நடுவில் பிரமாவினது மனோவதியென்னும் பட்டணம் பதினாலாயிர யோஜன விசாலமுள்ளதாய் லோகபாலர்களால் வணங்கப்பட்டு மிருந்த ரத்னகாந்திகளா லாகாசமார்க்கத்தையெல்லாஞ் சிவக்கச் செய்துகொண்டு ஸ்வர்க்கேச்சையை யதிசயித்துப் பிரமபதப்பிராப்தி யேதுவாகையாற் சாவித்ரியோடு போட்டிசெய்வதுபோ லிருக்கும். (ருஎ—ருஅ)

தஸ்யா ஊர்த்⁴வ மீஶாநதே³வாஸ்வநயஸ்ய

ஊர்த்⁴வரேதஸ꞉ । ஊர்த்⁴வயோகி³ ஸம்ஸித்³தை⁴
யமைர்நியமை꞉ [illegible] ஸமுபாஸ்யதே ॥ ௫௧

அந்த மனோவதிபட்டணத்தில் மிகுந்த தேஜோபலமுள்ள தேவர்களும் முனிவர்களும் யோகிகளால் த்யானிக்கத்தக்க பிரமாவைத் தங்களபீஷ்டசித்தியின் பொருட்டு இயமநியமாதிகளாலுபாசிக்கின்றார்கள்.

ததீ³ஶானே தஸ்யாக்³ரே ஶ்ருங்க³மூ
ர்த்⁴வம் ஸூர்யஸந்நிப⁴ம் । யஜ்ஜ்யோதிஷ்கமிதி க்²யாதம்
ஸர்வபர்வதஸத்தமம் ॥ ௫௨

அந்தப் பிரமபட்டணத்திற் கீசான பாகத்திலக்த மேருமலையின் கொடிமுடி யொன்று சூரியப் பிரகாசமாயிருக்கிறது. அதைப் பரமேஸ்வரனுக் கெப்போதுமிஷ்டமான ஜோதிஷ்கமென்னும் ஸ்தானமென்பர்.

தஸ்யாந்தஸ்ஸமதே³ஶேஷு
நாநாரத்னேஷு ஸம்ஸ்தி²தா꞉ । ஸ்கந்த³நந்தீ³ ம
ஹாகாலோ க³ணேஶாத்³யா க³ணாவரா꞉ ॥ ௫௩

அந்த ஜோதிஷ்கத்தின் பொன்மயமாயும் மணிகளாற் சித்ரங்களாயுமிருக்கின்ற சமபூமிகளிலே ஸ்கந்தர் நந்தி மகாகாளர் கணேசர் முதலாகிய சதாசிவ தத்வத்திற்குக் கீழ்ப்பட்ட கணங்களிருப்பர்கள். (௫௩)

ஸாதா³ஶிவ[illegible] ஸ்தா²நே

> பத்மவிஷ்டித: । ப்ரஹ்மாத்யாயதநைஸ்ஸர்வை
> ஜுஷ்டம் ருத்ரகணைர்வ்ருதம் ஸம்வர்த்த
> ஶைவை: ॥ ௬௨

பிரமேந்திராதி தேவர்கட் கெல்லாம் நியந்தாவாய்த் திரிபுர சங்காரியான பரமேஸ்வரனது ஸ்தானமானது அநேக ருத்ரகணங்களாலும் பிரமாதி தேவர்களாலுஞ் சூழப்பட்டிருக்கும். (௬௨)

> இதி ஸம்க்ஷேபதோ மேருர் வர்ணிதோ
> ஜம்பூத்வீபே தஸ்ய து நவ
> வர்ஷாணி ஸந்தி பர்வதைஸ்ஸஹ ॥ ௬௩

இவ்வாறு மேருபர்வதஞ் சொல்லப்பட்டது. இனி, இதற்குக்கீழிதற்குப் பிடிப்பாகச் சில மலைகளுண்டு. அந்தந்த மலைகள்வரையி லிருக்கும். இந்த ஜம்பூ த்வீபத்தில் ஒன்பது கண்டங்கள். அவை யாவுங் கேளும். (௬௩)

> நிஷதோ ஹேமகூடஶ்ச ஹிமவாம்ஶ்
> சாத்ர ஜ: । ஶ்வேதோ ஹ்யுத்தரதோ நீல
> ஶ்ச ஶ்ருங்கீ வாமத: ॥ ௬௪

> ஸமுத்ராயவிஷ்கம்பா ஸஹஸ்ரோச்ச்ராயா
> நவாநாம் । ப்ராமாயதா ஸஹஸ்ரை
> ர்த்விஸஹஸ்ரவிஸ்த கோடய: ॥ ௬௫

மேருவிற்குத் தென்புறத்தில் நிடதம் ஏமகூடம் இமயம் இம் மூன்றுமலைகளும், வடபுறத்தில் நீலம் ஶ்வேதம் ச்ருங்கவான் இம்மூன்றுமலைகளும், இரண்டாயிர யோஜனைப் பருமனும் பதினாயிர யோஜனை யுயரமும் ஒன்பதினாயிர யோஜனை யொன்றுக்கொன்று நடுவி லிடைவெளிகளு முள்ளவைகளாய்க் கிழக்குமேற்கு நீளமா யிரண்டுப்புச்சமுத்திர பரியந்தம் நீண் டழகான விடமுள்ளவைகளா யிருக்கும். (௬௪—௬௫)

ததோ மேருஸ்தாத் விஷ்கம்பௌ மால்யவத்க-
ந்தமாதனௌ । யாம்யோத்தரௌ ப்ராக்ப்ரதீ-
ச்யௌ நீலநிஷதாயதௌ ॥ ௬௬

மேருவிற்குக் கிழக்கும் மேற்கும் மால்யவான் கந்தமாதனம் என்னு மிரண்டு மலைகளும், தெற்குவடக்கு நிடத நீல பரியந்த நீண்டு அவைகட்குப் பாதியான ஆயிரயோஜனை பருமனுள்ளவைகளாய் அவ்வளவுயரமு மிடைவெளியு முள்ளவைகளா யிருக்கும். (௬௬)

பஶ்சாந்மால்யவதஃ ப்ராச்யாம் கந்தமாத-
ந பர்வதாத் । இலாவ்ருதம் நீலஸ்ய
யாம்யே து நிஷதாதுதக் ॥ ௬௭

மால்யவானுக்கு மேற்கு கந்தமாதனத்திற்குக் கிழக்கு நீலமலைக்குத் தெற்கு நிடதமலைக்கு வடக்கு இக

ன் மத்தியிலிருக்கும் கண்டத்திற் கிளாவிருதமென்று பெயர். (௫௭)

[illegible] ௫௮

மால்யவானுக்குக் கிழக்கே பத்ராஶ்வ மென்னுங் கண்டம் அழகாய் ஜனமுள்ளது. கந்தமாதனத்திற்கு மேற்குக் கேதுமாலமென்னுங் கண்டம் அழகாய் ஜனங்களுள்ளது. (௫௮)

[illegible] ௫௯

நிடதமலைக்குத் தெற்கு அரிவருஷம், ஏமகூடமலைக்குத் தெற்குக் கிம்புருஷவருஷம், இமய மலைக்குத் தெற்கு பாரதவருஷம். (௫௯)

[illegible] ௬0

நீலமலைக்கு வடக்கு ரம்யகவருஷம், ஶ்வேதமலைக்கு வடக்கு இரண்யகவருஷம், ச்ருங்கவான்மலைக்கு வடக்குக் குருவருஷம். (௬0)

[illegible]

[illegible] ௭௧

[illegible] ௭௨

[illegible] ௭௩

மேருமலைக்குக் கிழக்குமுதல் நான்குபக்கமும் வரிசையாக வெண்மையான மந்தரமலையும், பொன்னிறமான கந்தமாதனமலையும், கருத்தவிபுலமலையும், சிவந்தசுபார்சுவமலையும் ஐம்பதினாயிர யோஜனை யுயரமுள்ளவைகளாய் மேருவிற்குப் பிடிப்பாக பிரமாவினாலே சிருஷ்டிக்கப்பட் டிருக்கின்றன. அம்மலைகளின்மேற் கிழக்குமுதல் வரிசையாகக் கடம்ப நாவல் அரசு ஆல் இந்நான்கு கற்பக விருக்ஷங்களு மாயிரயோஜனை யுயரமுள்ளவைகளா யிருக்கின்றன. (௭௧—௭௨—௭௩)

[illegible] ௭௪

அந்த நாவல் மரத்தின் பலசாரமானது ஆறுக

மேருமலையைச்சுற்றி அந்தப் பூமியெல்லாம் பொன்னா
க்கி அந்த மேருவினடியிற் போகிறது. (எச)

தாம் வீக்ஷ்ய பக்ஷிஸர்பாகும்ருகப்லவ
கா ம்ருகாதய꞉ । ஸ்நாநபாநாத் காஞ்சநாய
ந்தே ஸர்வாஸ்ஸம்ஸ்ப்ருஷ்ட க்ருதாத்மநா꞉ ॥ எரு

அந்த நதிஜலத்தில் ஸ்நாநபானஞ் செய்யும் பக்ஷி
கள் சர்ப்பங்கள் எலி மிருகங்கள் குரங்குகள் முதலான
பிராணிக ளியாவும் பொன்மய மாகின்றன. (எரு)

த்வீபகேதுர் மஹாஜம்பூ꞉ கல்பவா
விஷ்வக் ஸத்வ꞉ । ப்ரபாவாதி மயாஸ்யா
தம் ஜம்பூத்வீப மித்யத꞉ ॥ எசு

மற்றக் கற்ப விருக்ஷங்க ளிருக்கையிலு மந்த நா
வல்மர மிந்த த்வீபத்திற்குத் த்வஜமானபடியா லதன்
மகிமையா லிந்த த்வீபத்திற்கு ஜம்பூத்வீபமென்று
பெயராயிற்று. (எசு)

ப்ராச்யாம் விஷ்கம்பஶைலஸ்ய மூ
லே சைத்ரரதம் வநம் । ஸரோ ரு
ணோதகாக்யஞ்ச ஹேமாப்ஜரஞ்ஜிதம் ॥ எஎ

மேருவிற்குக் கிழக்கே பிடிப்புமலையான மந்தரத்
தி னடியில் சைத்திரரதமென்னும் உத்யான வனமு
ம் பொற்றாமரையா லலங்கரிக்கப்பட்ட அருணோதக
மென்னும் தடாகமு மிருக்கின்றது. (எஎ)

[illegible] ௭௮

தென்புறத்திற் கந்தமாதனமலையி னடியிற் கந்தருவர் தேவர் சித்தர் அப்ஸரஸ் இவர்களாற் சூழப்பட்ட நந்தனமென்னும் வனமும் மனோகரமாகிய மானஸமென்னுந் தடாகமு மிருக்கிறது. (௭௮)

[illegible] ௭௯

மேற்கே விபுலமலையி னடியில் வைப்ராஜ மென்னும் வனமும், சூர்யனுக்குச் சமானகாந்தியுள்ள தாமரைகள் சூழ்ந்த சிதோதமென்னும் தடாகமும் தேவர்களா லடையப்பட்டிருக்கும். (௭௯)

[illegible] ௮௦

வடபுறத்திற் சுபார்ஸ்வமலையி னடியில் த்ருதிமத்தென்னும் வனமும் செங்கழுநீர் தாமரைசூழ்ந்த பத்ரகமென்னுந் தடாகமும் பித்ருக்களா லெப்போது மடையப்பட் டிருக்கும். (௮௦)

த்ரயோதஶ ஸஹஸ்ராயுர்ஜம்பூ
ரஸாஶிந:। ஶ்வேதா மேரோ: ப்ரபாயோகாத்
ஸுவர்ண ஜாம்பூநதப்ரபா:॥ அக

இளாவிருத கண்டத்தில் ஜனமானது பதின்மூவாயிர வயதுள்ளதாயும் நாவற்பழ ரசம் புசித்துக்கொண்டும் மேருவின்பிரகாசத்தாற் பதார்த்தங்களை யறிந்துகொண்டும் அழகான காந்தி யுள்ளதாயு மிருக்கும். (அக)

ஸைகாயுதாயுஷோ நீலோத்பலாபா:
பநஸாஶிந:। கேதுமாலே ஜ
நா திவ்யதேஹாஸ் ஸத்வஸம்பத:॥ அஉ

கேதுமால கண்டத்தில் ஜனமானது பதினோராயிர வயதுள்ளதாயும் கருநெய்தல் நிறமுள்ளதாயும் பலாப்பழரசம் புசித்துக்கொண்டும் திவ்யமான சரீரமும் சுகம் பலம் இவைகளுள்ளதாயு மிருக்கும். (அஉ)

சந்த்ரபிம்பேந்து நீலோத்பலாஶ
நா பத்ரவாஜிநி। தஶவர்ஷஸஹஸ்ரா
யுர்து:கஶோகபயோஜ்ஜிதா:॥ அங

பத்ராசுவ வருஷத்தில் ஜனமானது பதினாயிர வயதுள்ளதாயும் சந்திர நிறமுள்ளதாயும் கருநெய்தலைப் புசித்துக்கொண்டும் துக்கம் சோகம் பயம் இவைகளில்லாததாயு மிருக்கும். (அங)

த்ரிம்ஶத்³வர்ஷ ஸஹஸ்ராயு꞉ க்ஷீரவ்ருக்ஷ
ஸௌமநஸ꞉ । யதே²ஷ்ட ஸம்ப்⁴ருதி꞉ காமா
ஷ்டா ம்ருகா³பக்ஷ்ய த்ருப்திஜா꞉ ॥ ௮௪

குருவருஷத்தில் ஜனமானது முப்பதினாயிர வயதுள்ளதாயும் இச்சைப்படி விருக்ஷபலங்களைப் புசித்துக்கொண்டும் பிரயக்குவென்னும் கொடியினுடைய புஷ்ப நிறமுள்ளதாயும் (அதாவது வெண்மை) ஸ்திரீபுமானாக இரட்டையாகவே பிரசவித்துக்கொண்டிருக்கும். ௮௪

இந்தக் குருவருஷத்தைச் சார்ந்திருக்கு மிரண்டு த்வீபங்களைச் சொல்கின்றார்.

ஹ்ருதவேத³ ஸஹஸ்ராணி வேகஶ்ச
ஸ்தி தஸ்மிந் । ஸௌரவாய்வாஸமந ஸிஜ
ஜாமிசாரண ஸேவிதௌ ॥ ௮௫

உத்³த்⁴ருதா கரணத்³வீபௌ உத்தராத்⁴ய
க்ஷ ரூஜ்ஞௌ । ஸைஷாவ்ருதம் தயோராத்ர
யா꞉ ஸமௌஸஞ்ஜ ஸோஜநௌ ॥ ௮௬

சந்த்³ர꞉ கர்ணோஷ்ட்⁴யௌ யாந்த்ய
ஸ் க்ஷீகிஷ்டம் தத꞉ । ௮௬உ

குருவருஷத்திற்குச் சமீபத்தி லுப்புச்சமுத்திரத்தில் வரிசையாக ஐயாயிர நாலாயிர யோஜனைவரையில் வியாபித்துக்கொண்டு ஒரு திக்குமூலையால் தெரிந்து

கொண்டு வடபுறமாகவும் வாயுமூலையாகவும் சித்த யோக சாரணர்களாற் சூழப்பட்டுச் சந்திர த்வீபமென்றும் பத்திராகர த்வீபமென்று மிரண்டு த்வீபங்களிருக்கும். அவ்விரண்டு த்வீபங்களிலும் ஜனங்கள் கிரமமாகச் சந்திரநிறமும் செந்தாமரை நிறமு முள்ளவையாயும் இளாவிரத வருஷத்தைப்போல் வயதுள்ளவையாயும் பலமூலங்களைப் புசித்துக்கொண்டும் இருக்கும். இவையிரண்டும் குருவருஷ ஸமீபமாதலாற் சொல்லப்பட்டனவென் றறிக. (௮௫—௮௬—௮௬௨)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௮௭௨

இரண்யக வருஷத்தில் ஜனமானது பன்னீராயிரத்தைந்நூறு வயதுள்ளதாயும் சந்திரகாந்தி யுள்ளதாயும் எலுமிச்சம்பழம் புசித்துக்கொண்டிருக்கும்.

[illegible]
[illegible]
[illegible] ॥ ௮௮௨

ரம்யகவருஷத்தில் ஜநமானது பன்னீராயிர வயதுள்ளதாயும் கருநெய்தல் நிறமாயும் ஆலின் பழம் புசித்துக்கொண்டிருக்கும். (௮௮௨)

𑌰𑌜𑌤𑌾 𑌇𑌕𑍍𑌷𑍁𑌰𑌸𑌾𑌹𑌾𑌰𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌯𑍁-
𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌜𑌾𑌃 । 𑌰𑍁𑌕𑍍𑌮𑌾𑌃 𑌕𑌿𑌮𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 𑌵𑌰𑍍𑌷𑍇
𑌪𑍍𑌲𑌕𑍍𑌷𑌭𑍋𑌜𑌨𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥ ௯

அரிவருஷத்தில் ஜனமானது பன்னீராயிர வயதுள்ளதாயும் வெள்ளிநிறமாயும் கரும்பைப் புசித்துக் கொண்டுமிருக்கும். கிம்புருட வருஷத்தில் ஜனமானது பன்னீராயிர வயதுள்ளதாயும் பொன்னிறமாயும் பிலக்ஷமென்னுங்கல்லாலின் பழத்தைப் புசித்துக்கொண்டுமிருக்கும். (௯)

𑌇𑌤𑌿 𑌕𑌿𑌮𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑍀𑌨𑌿 𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑍍𑌯𑌷𑍍-
𑌟𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑌿 𑌤𑍇 । 𑌨 𑌤𑍇𑌷𑍁 𑌸𑌂𑌸𑌾𑌰𑌹𑍇𑌤𑍋-
𑌰𑌸𑍍𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌷𑍁 𑌕𑍃𑌤𑌾𑌦𑌿𑌷𑍁 ॥ ௧0

இவ்வாறு கூறிய கிம்புருஷை முதலான எட்டுவருஷைங்களிலும் ஜனங்களுக்கு மாறிமாறிவருங் கிருதாதியுகங்களில் அவஸ்தாபேதமில்லை. (௧0)

𑌯𑌥𑌾 𑌭𑌾𑌰𑌤𑌵𑌰𑍍𑌷𑍇 𑌤𑍁 𑌵𑍈 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌾𑌂 𑌸𑍇𑌵𑍇-
𑌤𑍈𑌵 𑌯𑍁𑌗𑍇𑌷𑍁 𑌜𑌃 । 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌹𑍇𑌤𑍋-
𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑌾𑌰𑌤𑍇 𑌜𑌨𑌾𑌃 ॥ ௧௧

ஆறிந்தப் பாரதவருஷத்தில் ஜனமானது யுகங்களுக்குத் தக்கபடி அறிவு ஆயுசு தேஜசு பலம் அர்த்தம் பிரஜை இவை மாறிக்கொண்டு உழுது முழாமலு மு

ண்டானதைப் புசித்துக்கொண்டு தாபத்திரயத்தால் வருத்த மடைந்திருக்கும். (௯௧ற)

[illegible] க்ஷேத்ரம்
கிஞ்சித் ஸாத்யமிதம் । ஸர்வாஸாம் போக
பூமீநாம் கர்மபூமி: காரணம் யத:॥ ௯௨

ஆனு லிந்தப் பாரதவருஷத்தில் ஒரு குணமுண்டு. அதாவது, இவ்விடத்தில் முயற்சிசெய்கிறவன் பயனி யாவும் பெறுவான்; பலபூமிகளுக்கெல்லாம் கன்மபூமி காரணமாதலால். (௯௨ற)

கர்மபூமிரியம் ப்ரஹ்மந் போகபூ
மிரித: பரா । இஹ யத் க்ரியதே கர்ம த
ஸ்தத்ரோபபுஜ்யதே ॥ ௯௩

இதுதான் கன்மபூமி, மற்றவையெல்லாம் பலபூமி. இவ்விடத்திற் செய்யுங் கன்மமானது மற்றவிடத்திற் பலங்கொடுக்க வுபயோகமாகிறது. (௯௩ற)

[illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ ௯௪

இந்த ஜம்பூத்வீபத்திற் சமுத்ரமான தொன்பது பிரிவாகிப் பாதிபூமியும் பாதிஜலமுமாகச் சூழ்ந்திருக்

யதால் ஒன்பது த்வீபங்களுண்டு. அவைகளின் பெயர்களைக் கூறுகின்றேன் கேளுங்கள். (கூசஉ)

ஐந்த்ரத்வீப: கஶேருமாம்ஸ் தாம்ரவ
ர்ணோ கபஸ்திமாந் | நாகத்வீபஸ் ஸௌம்ய
ஶ்சைவ காந்தர்வோ வாருணஸ்ததா || கூருஉ

குமாரிகாத்வீபோ நவமோ நாநாவ
ர்ண நதீயுதா: | நாநாஜாதி ஜநாகீர்ணா
ஸாகராந்தா வ்யவஸ்திதா: || கூசூஉ

இந்திரத்வீபம் கசேருத்வீபம் தாம்ரபர்ண த்வீபம் கபஸ்திமான் த்வீபம் நாகத்வீபம் சாந்திரமஸ் த்வீபம் காந்தருவத்வீபம் வாருணத்வீபம் குமரித்வீபம் என ஒன்பது த்வீபங்கள். இவையாவும் பலவிதமலை ஆறுகளாலும் பலஜாதிஜனங்களாலுஞ் சூழப்பட்டிருக்கும். (கூருஉ—கூசூஉ)

அக்நீத்ரோ நாம ந்ருபதிர் ஜம்பூத்வீபாதி
போ மநோ: குலே | தஜ்ஜாத ந்ருபவம்
ஶஜாஹி: கண்டிதே ஸாகராதய: || கூஎஉ

மனுவம்சத்தில் அக்நீத்திரனென்னு மொருராஜன் ஜம்பூத்வீபத்திற் கதிபதியாக விருந்தான். அவனுக்குப் பாரதன்முதலாகப் பிள்ளைகள் ஒன்பது. அவர்களின் பெயர்களாலே இந்தக் கண்டங்கள் பாரதமுதலான பெயருள்ளன வாயின. (கூஎஉ)

[illegible] ௯௮

இந்த ஜம்பு முதலாக வேறு த்வீபங்களும் வரிசையாக லக்ஷமுதல் இரட்டித்தயோஜனை விசாலமுள்ள உப்பு பால் தயிர் நெய் கருப்பஞ்சாறு கள் சுத்தஜலம் இவ் வேழுசமுத்திரங்களாலும் சூழப்பட் டிருக்கின்றனை. (௯௮)

[illegible] ௯௯

அப்பாற் சாகத்வீபத்திற் சாகமென்று மோர்மரமுயர்ந்து பிரசித்தமாக விருக்கிறபடியா லந்த த்வீபத்திற்குச் சாகமென்று பெயராயிற்று. அப்பாற் குசத்வீபத்தில் பிரமா யாகஞ் செய்யும் போது பொன்மயமாக ஓர் குசமென்னும் தர்ப்ப முண்டானபடியா லந்தத்வீபத்திற்குக் குசமென்று பெயராயிற்று. (௯௯)

[illegible] ௧௦௦

அப்பாற் க்ரௌஞ்ச த்வீபத்திற் பொன்மயமான குகையுள்ள கிரௌஞ்சமென்னு மலையிற் பலவித மாயையுள்ள க்ரௌஞ்சனென்னு மோ ரசுரன் மஹாமாயையுள்ள சுப்ரமணியரால் வெகுவாய்ச் சண்டைசெய்து அடிக்கப்பட்டான். (௧௦௦)

[illegible]
[illegible]
[illegible] ‖ ௧௦௧

அவரா லந்த வசுரனுடைய வாசமான க்ரௌஞ்ச மலை யோட்டையாகச் செய்யப்பட்டதென்று பிரசித்தமா யிருக்கிறது. அம்மலை யந்த த்வீபத்திற்கு அடையாளமா யிருந்தபடியா லதற்குக் கிரௌஞ்சமென்று பெயராயிற்று. (௧௦௧)

[illegible]
[illegible]
[illegible] ‖ ௧௦௨

அப்பாற் சால்மல த்வீபத்திற் பொன்மயமாயும் சூரியப் பிரகாசமாயும் தேவர்கட்குப் பிரியமாயும் ஆயிர யோஜனை யுயரமுள்ளதாயு மிருக்கிற ஓர் சால்மலமென்னு முள்ளிலவமர மந்த த்வீபத்திற் கடையாளமாக விருந்தபடியா லதற்குச் சால்மல த்வீபமென்று பெயராயிற்று. (௧௦௨)

கோமேதே கோபதிர்நாம ராஜா
ஹ்யபூத் கோஸவோத்யத: । யாஜ்யோ
ஹ்யுதத்யவம்ஶ்யாநாம் தீப்தாநாம் தேஜஸாம்
கல்பே ॥ ௧௦௩ம்

ஸபஶுஷு மஹாயஜ்ஞாய ப்ரவ்ருத்த
ஷு ஶக்ரயஜ்ஞம் கதேஷு । வவ்ரே ஸ பா
ர்கவாந் கோபாக்நிப்ரபவாந் ஸோமபாந் க்ரது
யஜ்ஞ ॥ ௧௦௪ம்

யஜ்ஞவாடஸ்தா காமதோ ஹ்யாஸோ
பாதிநா ஸம்ஸ்ருத: । தந்மேதஸா ஸர்வ
ஞா கோமேதஸ் ஸதவீபாஹ்வய: ॥ ௧௦௫ம்

அப்பாற் கோமேதக த்வீபத்தில் மஹாவம்சத்து ராஜனொருவன் கோபதியென்பவன் அக்நிபோல் தேஜசுள்ள உதத்ய வம்சத்து ருஷிகளுக்குச் சிஷ்யன், பசுமேத யாகஞ்செய்ய ஆரம்பித்தான். அப்போ தவன் குருக்கள் தேவேந்திரன் செய்யும் யாகத்திற்குப் போயிருந்தமையாற் பிருகு வம்சத்தாரைக் குருக்களாக வரித்துக்கொண்டான். பின்பு கௌதமர் கோபத்தா லவனைச் சபிக்க வவன் க்ஷயமடைந்தான். அவனியாகசாலையிற் பசுக்களெல்லா மவருடைய கோபாக்நியாற் கொளுத்தப்பட்டன. அப் பசுக்களின் மாம்சங்களாலே யத்தப் பூமியெல்லா மறைக்கப்பட்ட படியா லந்த த்வீபத்

திற்குக் கோமேதமென்று பெயராயிற்று. (௧௦௩௨—
௧௦௪௨—௧௦௫௨)

நதீ³ புஷ்கரிணீ நாம ஸௌவர்ணபுஷ்கர
ஸஞ்சிதா । தயாஸ்ய புஷ்கரத்³வீப: ப்ர
தி²த ஸ்ஸுரஸேவித: ॥ ௧௦௫௨

அப்பாற் புஷ்கர த்வீபத்திற் பொன்மயமான தாமரைகளா லலங்கரிக்கப்பட்ட புஷ்கரணீயென்னும் பெயருள்ள ஓர் நதி யுண்டு. அதனா லந்த த்வீபம் புஷ்கர மென்று பிரசித்தமாய்த் தேவர்களா லடையப்பட் டிருக்கும். (௧௦௬௨)

யதா² கிம்புருஷாத்³யேஷு க்ருதா
வஸ்த²ஸ்தி²தோ ஜந: । ஶாகத்³வீபாதி³ஷு ததா²
க்ஷீராத்³யப்³தி⁴ க்ருதபோ⁴ஜந: ॥ ௧௦௭௨

ஹிமேந்து³ ஹிமஜிந்நாப்³ஜ ஸஸ்ய ஸ்ப²டி
க காந்தி: । த்³வீபஷட்கஸமுத்³ராயாம் நி
ஷேது: ஸப்தவர்ணக: ॥ ௧௦௮௨

ஜம்பூ த்வீபத்திற் கிம்புருஷ முதலான வெட்டுக் கண்டங்களிலு மெவ்வாறு ஜனங்களுக்கு யுகங்கடோறும் நிலைமாறுகிற தில்லையோ, அவ்வாறே சாகமுதலான மற்ற ஆறு த்வீபங்களிலு மறிக. மேலும் அவ்விடங்களில் ஜனங்கள் கிரமமாக பால்முதலான சமுத்திர ஜலங்களை யாகாரமாகக் கொண்டு பனிச்சந்திரன் புனி கருநெய்தல் பயிர் படிகம் இவைகளின் காந்தி யு

ள்ளவைகளாய்ப் பதினாயிரவளவு துள்ளவைகளாய் துக்க வேச மில்லாம லிருக்கும். (க0எ உ—க0அ உ)

[illegible]
[illegible]
[illegible] க0கூ உ

மேருமலையி னடுவிலிருந்து ஏழாவது சமுத்ரம் வரையி லளவு இரண்டுகோடியே யைம்பத்துமூனறு லக்ஷத்து ஐம்பதினாயிர யோஜனையென் றறிக. (க0கூ உ)

[illegible]
[illegible]
[illegible] கக0 உ

அப்பாற் பலவித ரத்னங்களும் மரங்களும் மலைகளு நிறைந்த பொன்மயமான பூமி பத்துகோடி யோஜனை தேவர்கட்கு விநோத நிமித்தம் பிரமாவினாற் சிருஷ்டிக்கப்பட் டிருக்கிறது. (கக0 உ)

[illegible]
[illegible]
[illegible] ககக உ

அப்பால் வெளியில் அலோகமு முள்ளேலோகமு மாகிய லோகாலோகமென்னு மலை பதினாயிர யோஜனை யகலமுள்ளதாயு முயர்ந்த கொடுமுடிக ளுள்ளதாயு மிருக்கும். (ககக உ)

தஸ்ய ஶ்ருங்கேஷு தீக்ஷ்ணாம்ஶோ ஸஹஸ்ராம்ஶோ

ஸஹஸ்ராம்ஶோ ரதவோ பாஜா: | ந தாபயந்தி

வைக்ருஷ்டாஞ் ஜாநாந்யாஶாபதாநபி ||௧௧௨

அந்த லோகாலோக மலையின் கொடுமுடிகள் மிக வுமுயர்ந்திருக்கிற படியா லவ்விடத்திற் சூரிய கிரணங்கள் நிலாவைப்போலக் கொடுமையின்றிப் பிரகாசமுள்ளதாக மாத்திர மிருந்துகொண்டு திக்குப்பாலகருடைய வினோதஸ்தானங்களைத் தபிக்காமலிருக்கும். (௧௧௨)

தத: பரஸ்தாத் விஸ்தீர்ணம் லக்ஷாணாம் கோ

நவிம்ஶதி: | சத்வாரிம்ஶத் ஸஹஸ்ராணி ப

ஞ்சத்ரிம்ஶச்ச கோடய: || ௧௧௩

அப்பா லந்தகார பூமி முப்பத்தையாயிர கோடியே பத்தொன்பது லக்ஷத்து நாற்பதினாயிர யோஜனையுள்ளது. (௧௧௩)

ஷட்விம்ஶதிர் லக்ஷாணி கோடிரேகா

ஸமுத்ராத் | ஹைமாண்டகடாஹம் கோ

டிமாத்ரம் ஸஞ்ஜித: || ௧௧௪

அப்பாற் கர்ப்போத மென்னும் பெருங்கடல் ஒரு கோடியே இருபத்தேழுலக்ஷ யோஜனை யுள்ளது. அப்பாற் பொன்மயமான வண்டகடாக மொருகோடி யோஜனை யுள்ளது. இவ்வாறே மேருவி னடியிலிருந்து நா

ன்கு பக்கமு மறிக. ஆகக்கூடிய பூலோகத்தி னகலம் நூறுகோடி யோஜனையென் றறிக. (ககசஉ)

இதுவரையிற் பூலோகப் பிரமாணஞ் சொல்லியது. இனி; புவர்லோக முதல் மே லுலகங்களினளவு சொல்கின்றார்.

த்ரிம்ஶல்லக்ஷா ஸமுச்ச்ராயோ ப்ருவ
வ்ராமீஶோ ஜஹீதலாஸ் । தத்ரஞ்சகோடிஃ
ஸம்மிதாஸ்ஸ்வர் ஸமுச்ச்ராயஃ ॥ககருஉ

பூதலத்தி லிருந்து துருவமண்டல பரியந்தம் புவர்லோகத்தினுயரம் பதினைந்து லக்ஷம். அப்பால் தேவதைகளுக் கிடமான சுவர்லோகம் எண்பத்தைந்து லக்ஷ யோஜனை யுயரமுள்ளது. (ககருஉ)

உமோ த்விகோடியுச்ச்ராயோ ஊர்த்வ
தி உத்திவஜஃ । ஜனோ ஷட்கோடி ஸமுன்னஃ
பித்ரு ஜஹ்னு ஜனாச்ராயஃ ॥ கக௬உ

அப்பால் மரீசிமுதலான முனிகளுக் கிடமான மகர்லோகம் இரண்டுகோடி யுயரம். அப்பாற் பிதுருக்களும் ஜன்ஹு முதலான ருஷிஜனங்களும் வாசஞ்செய்யும் ஜனலோகம் எட்டு கோடி யுயரமுள்ளது. (கக௬உ)

தபோ லக்ஷகோடி யுச்ச்ராயோ உமா
யோமஸந்நஃ । ஸனத்ஸனந்தனாத்யா
ஸனகாத்யா உமாதவாஃ ॥ ககஎஉ

அப்பால் மிகுந்த தவமுள்ள சனந்தன ருபு சனத்குமார சனகயோகிகள் வாசஞ்செய்யுந் தபோலோகம் பன்னிரண்டு கோடி யுயரமுள்ளது. (ககஎஅ)

தத்ஸ்தத்ரயமுஸாநம் ஸத்யலோகஃ

ஸ்வயம்பவஃ । கோஶாதிரஸ்யஸம்பூர்ணஃ கோ

டியோ நவஸப்தச ॥ ககஅ

ஸாவித்ரீசரஸ்வதீசத்ராஹேஸ யத்ரவே

தாஸ்ச ஸாங்காஃ। ககசு

அப்பாற் சத்ய ஞானமுள்ள பிரமாவினுடைய ஸ்தானமாகிய சகலைஸ்வரிய சம்பத்தும் நிறைந்த சத்தியலோகம் பதினாறு கோடி யுயரமுள்ளது. அவ்விடத்தில் சரஸ்வதியும் வேதோபவேதங்களும் மூர்த்தியுடனிருப்பார்கள். (ககஅ—ககசு)

தத்ஸ்தஸ்யஷட்கோடிகி ஊர்த்வே

ரவிஸிவிஷ்ணோஃ । ஸ்தாநே ஜ்யோதிஷ்மதீ வி

த்ரா கோடிரண்டகடாஹகஃ ॥ கஉ0

அப்பாற் காந்தியுள்ள விஷ்ணுவினுடைய ஸ்தானம் நான்கு கோடி. அப்பால் விசித்ரமான சிவனுடைய ஸ்தானம் ஆறு கோடி யுள்ளது. அப்பால் அண்டகடாகம் ஒருகோடி கனமுள்ளது. (கஉ0)

ஶதகோடிப்ரவிஸ்தீர்ணம் ஜகத்ப்ரஹ்மா
ண்டமீத்ருஶம் । ஸம்யஸ்தாத்ரே வனவா
யம் ஸ்வர்கஸ்ரஷ்டாநந்த: ॥ ௧௨௧

இவ்வாறு பிரமாண்ட கோளத்தி னுயரம் நூறு கோடி யோஜனை. இவ்வளவு கீழும் மேலும் நான்கு பக்கமும் சரியாக நூறு கோடி அண்டகோளமென் றறிக. (௧௨௧)

தஸ்ய ப்ராசீம் திஶம் ஶக்ர: பாத்ய
க்நிர் தக்ஷிணாம் । தக்ஷிணாம் யம
ஸ்தஸ்மாந்நைர்ருதோ தக்ஷிணாபராம் ॥ ௧௨௨

அண்டத்தின் கிழக்கை தேவேந்திரனும், தென்கிழக்கை அக்கினியும், தெற்கை யமனும், தென்மேற்கை நிருதியும் ரக்ஷிக்கின்றனர். (௧௨௨)

பஶ்சிமாம் வருணோ தேவோ வாயவ்யாம்
து பஶ்சிமோத்தராம் । உதீசீம் ஸோமய
க்ஷேஶா வீஶ: ப்ராகுத்தராம் திஶம் ॥ ௧௨௩

அதன் மேற்கே வருணனும், வடமேற்கே வாயுவும், வடக்கே சோமனும். குபேரனும், வடகிழக்கே ஈசானனும் ரக்ஷிக்கின்றார்கள். (௧௨௩)

ஊர்த்வம் ப்ரஹ்மா ஹரிஸ்த்வதஸ் ஸர்வாந்தா
வஹிஸ்தாஸ்ஸ்த்ரா । ௧௨௩ ௪

அதன்மேல் பிரமாவும், கீழே விஷ்ணுவும் இவ்வாறெல்லாரும் சாவதானமாக வெப்போது மதைர க்ஷிக்கின்றார்கள். (௧௨௩ற)

[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௨௪ற

இந்தப் பதின்மருக்கும் நியாமகராய்ப் பத்துத்திக்கிலும் பத்து ருத்திர ரிருக்கிறார்கள். இவர்களெல்லாம் ஐச்வரியவான்களாயிருந்தபோது அவ்வருத்திரர்களின் பயத்தினாலே தத்தம் ஸ்தானத்தை விட்டு அசையாம லிருக்கிறார்கள் (௧௨௪ற)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௨௫௭

அந்த வருத்ரர் பதின்மரும் பலவித ரூபமுள்ளவர்களாயும் மிருந்த சக்தியுள்ளவர்களாயும் சூரியகாந்தியுள்ளவர்களாயும் பலவித ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு மிருக்கிற அநேக பரிவாரங்களினாலே சூழப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் பெயர் சொல்லக்கேளும்.

[illegible]

ஸ: ப்ரபுத்த: । விபூதிரவ்யயஸ்ஸாஸ்தா
பிநாகீ த்ரிதஶாதிப: ॥ ௧௨௬

புத்தர் அஜர் வஜ்ரதேகர் கபாலீசர் பிரமர்த்தனர் விபூதி அவ்யயர் சாஸ்தர் பினாகி திரிதசாதிபர் இப்பதின்மரு மிந்திர நாயகர்கள். (௧௨௬)

பஸ்மக்ஷயாந்தகஹர ஜ்வலநாக்நி ஹுதா
ஶநா: । பிங்கல: காதகோ பப்ருர்த
ஹநஸ்த்வக்நிநாயகா: ॥ ௧௨௭

பஸ்மாந்தகர் க்ஷயாந்தகர் ஹரர் ஜ்வலனர் அக்னி உதாசனர் பிங்கலர் காதகர் பப்ரு தகனர் இப்பதின்மரு மக்னிநாயகர்கள். (௧௨௭)

விதாதா தாத்ருகர்த்தாரௌ யாம்யோ ம்ருத்யுர்
வியோஜகா: । தர்மாதர்மஶ்ச ஸம்
யோக்த்ருஹராஶ்ச யமநாயகா: ॥ ௧௨௮

விதாதா தாதா கர்த்தா யாம்யர் மிருத்யு வியோக்தா தருமபதி அதருமபதி சம்யோக்தா ஹரர் இப்பதின்மரும் யமநாயகர்கள். (௧௨௮)

நிர்ருதிர் மாரணோ ஹந்தா க்ரூர
த்ருஷ்டிர் பயாநக: । ஊர்த்வகேஶோ
விரூபாக்ஷோ தூம்ரலோஹிததம்ஷ்ட்ரவாந் ॥ ௧௨௯

நிருதி மாரணர் ஹந்தா க்ரூராக்ஷர் தூம்ரர் லோஹிதர் ஊர்த்வலிங்கர் விரூபாக்ஷர் தம்ஷ்ட்ரீ பீமர் இப்பதின்மரும் நிருதிநாயகர்கள். (௧௨௯ ௨)

𑌬𑌲𑌾𑌤𑌿 𑌬𑌲𑌪𑌾𑌶𑌾𑌂𑌶 𑌶𑍍𑌵𑍇𑌤𑌭𑌦𑍍𑌰
𑌜𑌲𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 । 𑌮𑌹𑌾𑌬𑌲 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁 𑌸𑍁-
𑌨𑌾𑌦𑌾𑌢𑍍𑌯 𑌵𑌾𑌰𑍁𑌣𑌾𑌃 𑌕𑌵𑌾𑌃 ॥ ௧௩௦ ௨

பலர் அதிபலர் பாசஹஸ்தர் ஸ்வேதர் பத்ரர் ஜலாந்தகர் மகாபலா மகாபாகு சுநாதர் மேகநாதர் இப்பதின்மரும் வருணநாயகர்கள். (௧௩௦,௨)

𑌲𑌘𑍁𑌶𑍀𑌘𑍍𑌰 𑌵𑌾𑌯𑍁𑌵𑍇𑌗 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣
𑌕𑍍𑌷𑌯𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 । 𑌕𑌪𑌰𑍍𑌦𑍀 𑌮𑍇𑌘𑌵𑌾𑌹 𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑍍𑌤
𑌪𑌞𑍍𑌚𑌶𑌿𑌖𑌾𑌶𑍍𑌚 𑌵𑌾𑌯𑌵𑌾𑌃 ॥ ௧௩௧ ௨

லகு சீக்ரர் வாயுவேகர் சூக்ஷ்மர் தீக்ஷணர் க்ஷயாந்தகர் கபர்த்தி மேகவாகனர் பஞ்சாந்தகர் பஞ்சசிகர் இப்பதின்மரும் வாயுநாயகர்கள். (௧௩௧௨)

𑌨𑌿𑌧𑍀𑌶 𑌰𑍂𑌪𑌵𑌾𑌨𑍍𑌧𑌨𑍍𑌯 𑌸𑍌𑌮𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀
𑌧𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 । 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌾 𑌯𑌾𑌨 𑌪𑍍𑌰𑌵𑌾-
𑌹𑌾𑌰𑍍𑌣𑍍𑌵𑌾 𑌯𑌕𑍍𑌷𑌵𑌾𑌃 ॥ ௧௩௨ ௨

நிதிசர் ரூபவான் தன்யர் ஸௌம்யர் லக்ஷ்மீதரர்

ஜடாதரர் பிரம்மதர் ஸ்ரீதரர் ரத்னதரர் பிரசாதர் இப்ப தின்மரும் சோமகுபேரநாயகர்கள். (கங.உஉ)

ஸர்வவித்யாதிப: ஸர்வஜ்ஞோ ஜ்ஞாநீ ஜ்யேஷ்டோ
வேதபாரக:। பலிப்ரிய: ஸுரேஶஶ்ச
பூதேஶோ நவ ஈஶாநநாயகா:॥ கங.ஙஉ

சர்வவித்யாதிபர் ஸர்வஜ்ஞர் ஞானி ஜ்யேஷ்டர் ஈசர் வேதபாரகர் பலிப்பிரியர் சுரேசர் பூதேசர் இப்ப தின்மரும் ஈசானநாயகர்கள். (கங.ஙஉ)

ஸம்புர்விபுர்கணாத்யக்ஷஸ் த்ர்யக்ஷஸ்
த்ரிதஶேஶ்வர:। த்ரிலோசநோ நபோ
விஷ்ணு: ஸம்வாஹஶ்ச விவாஹக:॥ கங.சஉ

சம்பு விபு கணாத்யக்ஷர் திரியக்ஷர் த்ரிதசேச்வரர் திரிலோசனர் நபஸ் விஷ்ணு சம்வாகர் விவாகர் இப்ப தின்மரும் ஊர்த்வபாகத்தில் பிரமநாயகர்கள். (கங.சஉ)

க்ரோதநோ மருதாஶீ ச ப்ரஸநஸ்ததா
பணீந்த்ரோ க்ரஸநஸ்ததா। உதும்பரேஶோ வ்ருக்ஷோ
வ்ருக்ஷதரோऽநந்தோ வஜ்ரதம்ஷ்ட்ரீ ச விஷ்ணவ:॥ கங.ருஉ

குரோதனர் மாருதாசனர் பணீந்திரர் க்ரசனர் உதும்பரேச்வரர் விருக்ஷர் விருக்ஷதரர் அனந்தர் வஜ்ரர் தம்ஷ்ட்ரீ இப் பதின்மரும் கீழே விஷ்ணுநாயகர்கள்.

ததோऽம்ப: ப்ரப்ருத்யாதௌ ஸம்ஸ்ருத்ய
ஸ்தானேஷு ஸம்ஸ்திதா:। பஞ்சாஷ்டகாபிதேயா
ஸ்துணாம் க்ஷேத்ராவாஸ்து ஸமஸ்ரய:॥ ௧௫௬ உ

அப்பால் பிரமாண்டத்திற்கு மேல் ஜலமுதலான போகபூமிகள். அவ்விடங்களில் அவ்வவ் ஸ்தானங்களிற் கிடைக்கும் பலங்களை நியமிக்கிற ருத்ரர்கள் எட்டெட்டுப்பெயராக ஐந்துகணங்க ளிருப்பார்கள். (௧௫௬ ற)

பாரபூத்யாஷாடி டிண்டி லகுலீஶ
அமரேஶ்வரா:। ப்ரபாஸ நைமிஶ
ஶ்சேதி ஜலாஷ்டக மீரிதம்॥ ௧௫௭ உ

பாரபூதி ஆஷாடர் டிண்டி லகுளீசர் அமரேசர் புஷ்கரர் பிரபாசர் நைமிசர் இவ்வெட்டுப்பெயரும் ஜலதத்வத்திற் குஹ்யாஷ்டக மென்று பெயருள்ளவர்கள்.

ஸ்ரீஶைல ஜல்ப கேதார பைரவா
ஆம்ராதகேஶ்வரா:। ஹரிஶ்சந்த்ர மஹாகாலௌ
மத்யமாஸ்தி தேஜஸாஷ்டகம்॥ ௧௫௮ உ

ஸ்ரீசைலர் ஜல்பர் கேதாரர் பைரவர் ஆம்ராதகேஶ்வரர் அரிச்சந்திரர் மஹாகாளர் மத்யமர் இவ்வெட்டுப்பெயர்களும் தேஜஸ் தத்வத்தில் அதி குஹ்யாஷ்டக மென்னப்படுவர்கள். (௧௫௮ ற)

ஸ்தைர்ய ஸ்தூல ஸ்வ க்ஷேத்ர

கயா நகலா: । ஸநாகஶ்ச ததாட்ட-
ஹாஸா ஸநகலா: மருதி ॥ ௧௩௯

மஹேந்திரர் பீமர் விமலர் குருக்ஷேத்ரர் கயர் நாகலர் அட்டகாசர் நகலர் இவ் வெட்டுப்பெயரும் வாயு தத்வத்தி லிருப்பார்கள். (௧௩௯)

ஸ்தாணு ஸ்வர்ணாக்ஷ கோகர்ண ப⁴த்³ர-
கர்ண மஹாலயா: । வஸ்த்ராபதா³ விமுக்தா-
க்²ய ருத்³ரகோட்ய: ஸவிஷ்ணவே ॥ ௧௪௦

பவித்ராஷ்டகமித்யாஹு: ஶர்வஶா-
ஸ்த்ரார்த²யோகின: । ஸ்தாண்வஷ்டகம் ச
ஜிஹ்வேஷு நாமத: கத்²யதே ॥ ௧௪௧

ஸ்தாணு ஸ்வர்ணாக்ஷர் கோகர்ணர் பத்ரகர்ணர் மஹாலயர் வஸ்திரபாதர் அவிமுக்தர் ருத்ரகோடி இவ் வெட்டுப்பெயர்களு மாகாச தத்வத்திற் பவித்திராஷ்டகரென்னப்படுவர்கள். இனி அகங்கார தன்மாத்திரேந்திரிய தத்வங்களில் ஸ்தாணு வஷ்டகரென்பார்கள். அவர்களின்பெயர் சொல்கின்றேன். (௧௪௦—௧௪௧)

மாகோட மண்ட³லேஶாந த்³விரண்ட³ச்ச²க³-
லண்ட³கா: । ஸ்தூ²லஸ்தூ²லேஶ்வரௌ ஶங்குகர்ண-
காலஞ்ஜராவபி ॥ ௧௪௨

மாகோடர் மண்டலேச்வரர் தவிரண்டர் சகலண்டர் ஸ்தலேச்வரர் ஸ்தூலேச்வரர் சங்குகர்ணர் காலாக்நிசனர் இவ்வெட்டுப்பெயரும் ஆங்கார தத்வத்திலும் தன்மாத்திரையிலும் இந்திரிய தத்வத்திலும் ஸ்தாணு வஷ்டகரென்னப்படுவர்கள். (௧௪௨)

सूक्ष्माणि पुराण्यष्टौ बु-
द्धौ पैशाचादिकाः । राक्षसं याक्ष-
[illegible] ॥ १४३
सौम्यं प्राजेशं ब्राह्मं [illegible]
[illegible] । १४४

பைசாசம் ராக்ஷஸம் யாக்ஷம் காந்தர்வம் மாஹேந்திரம் சௌம்யம் பிராஜேசம் பிராம்ஹம் இவ்வெட்டும் புத்தி தத்வத்திற் சூக்ஷ்மபுவனாஷ்டக மென்னப்படும்.

[illegible] अकृतं
कृतं [illegible] । ब्राह्मं वैष्णवं
[illegible] ॥ १४५

குணதத்வத்தில் யோகீசர்களுடைய ஸ்தானங்கள் அக்ருதம் க்ருதம் பைரவம் பிராம்ஹம் வைஷ்ணவம் கௌமாரம் ஔமம் ஸ்ரீகண்டம் என எட்டுப் புவனங்கள். (௧௪௫)

ரஸாந்தம் । ஸஹஸ்ராயோஜனாஸ்ய ஸ
வஸ்ஸார்த்தயிசுச்ரிய: ॥ ௧௬௬

அப்பால் தமது ஸ்தானத்திற்குக் கீழ்ப்பட்ட அதிகாரத்தி லிருக்கும் சகல ருத்திரரைவிட மேலான ஐச்வரியமுள்ள வீரபத்திரருடைய காந்தியுள்ள ஸ்தானம் யோகீசர்களால் துதிக்கப்பட் டிருக்கின்றது. (௧௬௬)

வாமதேவ பவாநந்த பீமோமாபதிரஜே
ச்வரா: । ஸர்வேசானேச்வரைகவீ
ரைகசிவ ஸஞ்ஜ்ஞிதா: ॥ ௧௬௭

உக்ர: ப்ரசண்டத்ருஷ்டீசௌ மண்டனா
நாம் த்ருதிஸம்ஸ்திதா: । ௧௬௭௨

வாமதேவர் பவர் அனந்தர் பீமர் உமாபதி அஜேச்வரர் ஸர்வேசானர் ஈச்வரர் ஏகவீரர் ஏகசிவர் உக்ரர் பிரசண்டர் திருஷ்டீசர் இவர்கள் இந்த குணதத்வ மூர்த்தாவிலே யிருக்கிறார்கள். (௧௬௭—௧௬௭௨)

தத்ர மண்டலாந்தர்வா ஸாஷ்டோ
த்தராதீனமண்டலாந்தர்மதா: । ஸாதிகா
ர விபுலதீக்ஷா ரக்ஷாஸம்ஹாரயா ஸ்ரு
ஷ்டிக்ரியா: ॥ ௧௬௮

இவர்கள் மிருந்த தவத்திறைல் மேலிருக்கும் குரோதேசாதிகளை யுபாசித்து அநுக்கிரக கர்த்தாக்களா

ய்த் தங்களதிகாரத்திற் சமர்த்தாளாய்ச் சர்வவிஷய ஞானக் கிரியை யுள்ளவர்களா யிருப்பார்கள். (கசஅ௮)

तथैव ज्ञानसम्पन्नाः श्रीकण्ठप्रिया
नायिपतीनां । क्रोधेशच
ण्डसंवर्त ज्योतिः पिङ्गलसूर
काः ॥ கசகூ௯

पञ्चान्तकैकवीरश्च शिखेदश्च
तथेश्वराः । க௫௦

குரோதேசர் சண்டர் சம்வர்த்தர் ஜோதி பிங்கலர் சூரகர் பஞ்சாந்தகர் ஏகவீரர் சிகேதர் இவர்கள் முன்சொன்ன வாம தேவாதிகளுக்குப் பத்துப்பங் கதிகமான ஐச்வர்ய முள்ள பிரதானேச்வரர்கள். (கசகூ௯—க௫௦)

समस्तेन्द्रिय संवर्तनात् संवर्त
कः कारणात्मकः । पुरुषे नियति
तत्त्वे च काले शक्तिधृत् । க௫க

புருஷ தத்வத்திற் சகல இந்திரியங்களையுந் தநுக்களையுந் தனதாகக் கொண்டு சர்வாந்தர்யாமியான ஈச்வரர் அதிஷ்டாதா, நியதி தத்வத்தில் நியமிக்கின்றவர் அதிஷ்டாதா, காலத்தில் எண்ணுஞ் சத்தியுள்ளவர் அதிஷ்டாதா. (க௫க)

सर्वदेव ज्ञानेव वामेव स

வோத்பவ: | ஏகலிங்க ஏகேக்ஷண:
நாம மஹாத்ராஸ் ஸஹஸ்ராம்சு ஸமப்ரபா: || கருஉ

மிருந்த காந்தியுள்ள புவனேசர் மகாதேவர் வாமதேவர் பவோத்பவர் ஏகபிங்கர் ஏகேக்ஷணர் ஈசானர் அங்குஷ்டமாத்ரர். (கருஉ)

பரமைச்வர்ய ஸம்யுக்தா ராகவித்யா ஸமாச்ரிதா:
கலாயாம் | தத்ர திஷ்டந்தி சதுஷ்ஷஷ்டி புராணி
தே ஷாமதிபாஸ்த்விமே || கருந

இவ்வெட்டுப் பெயரும் பரமேஸ்வர சமான சக்தியுள்ளவர்கள். ராக தத்வம் வித்தியா தத்வமிவ்விரண்டையு முள்ளே கொண்ட கலாதத்வத்தில் மதங்காதி யாகமங்களிற் கூறியபடி யெட்டெட்டாக விருக்கும் அறுபத்து நான்குபுர மண்டலங்களுக்கு மதிபதிகள்.

அனந்தஸ் த்ரிகலச் சைவ கோப்தா க்ஷேமேச
ஏவ ச | ப்ரமதிர் த்ருவஸ் தேஜோதிப
ஸ்தத்ர கஹனேசஸ் ததாபர: || கருச

அனந்தர் த்ரிகலர் கோப்தர் க்ஷேமேசர் பிரமதி த்ருவர் தேஜோதிபர் கஹனேசர். (கருச)

மாயாயாம் காரணாதீசா ஜ்ஞாயி
ஸந்தி ச | ஸம்ஹார சக்ரகாராச்ச
ஸர்வத்ர விதித்மகா: || கருரு

இவ்வெட்டுப் பெயரும் மாயையில் அதிகாரிகள், முன்சொன்ன மண்டலேசர்களுக் கதிபதிகள், சம்சார மாகிய சக்ரத்திற் சுழலும் பிராணிகளைத் திருப்புகிற வர்கள். (கருரு)

[illegible]
[illegible]
[illegible] ॥ கருசு

ஞானமில்லாதவர்கள், சேற்றிற் காலிட்ட பசுக்களைப்போல அகப்பட்டுக் கொண்டு அசக்தர்களாய்த் துக்கப்படுகின்ற பயங்கரமான சர்வப்பிராணிகளுமுண்டாகும்பூமி யிவ்வளவே. (கருசு)

[illegible]
[illegible]
[illegible] ॥ கருஎ
[illegible]
[illegible] ॥ கருஅ

அப்பால் சுத்தவித்தையிற் பிருகுணீ பிரமவேதாளீ ஸ்தாணுமதி அம்பிகை ரூபிணீ நந்தினீ ஜ்வாலை இவ்வேழு வித்யேஸ்வரிகளும் கீழ்ச்சொன்ன மண்டலேஸ்வரர்களாலே துதிக்கப்பட்டிருப்பார்கள்; இவர்கள் சப்தகோடி மந்திரங்களுக்கு மீஸ்வரிகள். (கருஎ—கருஅ)

[illegible]

ஜ்யாயிஷ்டஷிதா: | ஊர்த்வே ச ஸ்ய விஜ்ஞாவிஷ்ட
ரவ்ருத்தவ்யக்த வ்ருஷாஷ்டகா நாமத: || க௫அ௨

அப்பால் ஈஸ்வர தத்வத்தில் இவ் வித்யேஸ்வரி
களுக்கு மேற் பிரகாசமான காந்தியுள்ள வித்யேஸ்வர
ர் அனந்தாதிகளைப் பிரேரிக்கு மீஸ்வரராலே யபிவ்ய
க்தமான ஞானக்கிரியை யுள்ள ருத்ரகணங்க ளெல்லெ
ட்டுப் பெயராற் சூழப்பட்டிருப்பார்கள். (க௫அ௨)

உச்சுஷ்மாம்பரசண்டாக்ய மஹாவீர்ய

ப்ரவ்ருத்தமா: | ரவ்ருத்தா மணா ஸ்ரீகண்டா

ஸாஸ்த்ராணி பதய: ஸ்ம்ருதா: || க௫௯௨

அங்குள்ள ருத்ரகணங்களாவன ? உச்சுஷ்மர் அம்
பார் சண்டர் மகாவீரியர் முதலானவர்கள். அவ்விடத்
தில் திக்குப்பாலகர்கள் தேவீஸ்கந்தர்சண்டேசர் விரு
ஷபேஸ்வரர் முதலானவர்கள். சாஸ்திரங்கள் நிஸ்வாச
காரிகை முதலானவை. பதிகள் அனந்தாதிகள். (க௫௯௨)

தேவ்யாநந்த ஸ்கந்த்யா மதிதாவ

வநாதத: | ஸ்வஸ்வரூபாஷ்டிதக்வ்

பௌருஷ ஸ்வரூபா நாமத: || க௬௦௨

அந்த அனந்தாதிகளின் பெயர்களும் ஸ்வரூபங்க
ளும் முன்னமே பிரஸ்னை செய்யும்போது சொல்லியாயி
ற்று. (க௬௦,௨)

ஸதாஶிவே பஞ்சப்ரஹ்ம ஷடங்காதி ப
ரிவ்ருத:। தேவ ஸதாஶிவோ ஜ்வாலின்யாதி நி
ஷ்டருத்ராதிகலேஶ்வரா:॥ ககூகஎ

அப்பாற் சதாசிவ புவனத்திற் பஞ்சப்ரம்ஹ ஷடங்கங்களையும் சதாசிவர் ஜ்வாலினிமுதலான சகள நிஷ்களரான வெட் டுருத்திரர்களையும் பரிவாரமாகக் கொண்ட சதாசிவதேவ ரிருக்கின்றார். (ககூகஅ)

அப்பால் பிந்துவில் நிவ்ருத்தி முதலான கலாதிபதிகள் நால்வரு மிருக்கின்றார்கள்.

நாதே ஸ்வதந்த்ரஸ்தகள ஸதாஶக்தி ஶ
க்தாம்ஶகா:। ஶக்தௌ ஸகலஶக்தீனாம்
பதய: பரமேஶ்வர:॥ ககூஉ0

நாதபுவனத்தில் ஸ்வதந்திராகமத்திற் கூறியபடி கோடிசந்திரப் பிரகாசராயும் பத்துக்கை மூன்று நேத்திர முள்ளவராயும் வெண்டாமரை யாசனத்தி லிராநின்றும் சந்திர சூடராயும் ஐந்துமுக முள்ளவராயு மிருக்கின்ற நாதேச்வரரிருக்கின்றார்.

சத்தியிற் சகலமான சத்தியுள்ளவர்களுக்குந் தலைவரான பரமேச்வர ரிருக்கிறார். அங்கேயே நாதபிந்துவாதிக் கிரமமாகச் சகல ஜகதுற்பத்தி யேதுவான குண்டலினீ சத்தியும் புவனபதிகளான வாகீசர்களு மிருக்கின்றார்கள்.

அப்பாற் சகல காரணங்களையுங் கடந்து நிஷ்கள மாய்ப் பரமானசிவஸ்வரூப மிருக்குமென்றறிக. (ககஉ௰)

பிரச்னை.

ஸதாசிவ ஸிவாந்தஸ்த்வ ஸ்ரீத்வ தாணவ
வத்வமிதி | ஸவத்வாதி ஸமயவிஸ்ராஜ ஸ்த
ஷ்டவ்யம் வதயஸ்வ || ககநஉ

சதாசிவ தத்வத்திற்கு மேற் சிவதத்வம் வரையிலிருக்கு மத்வாவில் நிவிர்த்தியாதி கலேஸ்வரர்களுக்கும் நாதேஸ்வரர் முதலானவர்களுக்கும் திவ்ய தேக யோகஞ் சொல்லியது, அந்தச் சதாசிவ தத்வத்தில் தானே சர்வாதிசயங்களுக்கு முடிவு. அதற் கப்பால் நிஷ்கள சிவந் தவிர வேறொரு அதிசய தாரதம்ய மில்லையே! அவ்வாறிருக்க அப்பாற் பதிபேதங்க ளெப்படிச் சொல்லலாம். (ககந௰)

உத்தரம்.

ஸம்ஸாராதீத ஸாந்தோதம் தத்வ ஸா
தாஸிவம் ஸூத்ரம் | ஹம்ஸநாதாந்தவி நாதா
தி கலாநாந்த வதிஸ்ரீயாஸ் || ககசஉ

அனந்தேசாதி வித்யேஸ்வரரோடு கூடிய ஈஸ்வர தத்வத்தைக் கடந்து நிஷ்கள தத்வம் வரையிற் சதாசிவ தத்வமென் றறிக. இவ்விடத்திற் புவனங்களும் நாதபிந்துவாதி கலைகளே; சிவனன்றி வேறொரு பதியுமில்லை. (ககச௰)

யஃ பதிபே4தோ3(அ)ஸ்மிந் ஸமா
ஸே ஶக்திபே4த3வத் | க்ரியா ஸ்தா2நபே4தே3ந
சோபசாரேண கீர்த்திதஃ ||க௲ரு௨

ஆறு இவ்விடத்திற் பதிபேதஞ் சொல்லியது இந்தச் சாஸ்திரத்திற் சக்திபேதஞ் சொல்லியதுபோற் செய்கையின் பேதத்தாலும் ஸ்தான பேதத்தாலும் உபசாரமாகச் சொன்னது. (க௲ரு௨)

அந்தச் செய்கைபேதத்தைத் தெரிவிக்கும்பொருட்டு பிந்துபுவனத்தி லிருக்கும் நிவ்ருத்தியாதி கலேஶ்வரர் நால்வருக்கும் பொதுவான வுருவஞ் சொல்கின்றார்.

ஶக்தயோ யாபி4ர் நாம
தேயாஃ | தாஸ்தத்வ்யாப்தாஸ்
ஸந்தி தத்3ருபாஃ || க௲௬௨

எந்தச் சத்திகளாலே புருஷசத்திகளைப் பிரகாசிக்கச்செய்கிறாரோ அவைகள் நிவ்ருத்திமுதலான பெயருள்ளவைகள். அந்தச்சத்தியுள்ளவர்கள் அந்தப் புவனேஶ்வரர்கள். (க௲௬௨)

இனி தனித்தனி ரூபஞ்சொல்கிறார்.

நிவ்ருத்யாதி ஸஹிதா யயா ஸாஸ்

நிவர்த்திகா । நிவ்ருத்திரிதி தத்ஸ்தாநம் தத்

ஸ்தோபி நிவ்ருத்திராட் ॥ க௱எ௰

எந்தச் சக்தியினாலே பதினான்குவித பூதசர்க்கத்தையும் ஜனனமார்க்கத்திலாசையையும்விட்டுக் கைவல்யாபிமுகமாகச் செய்கிறாரோ அவ்வாறு திருப்புகிற சக்திக்கு நிவ்ருத்தியென்று பெயர். அந்தப் புவனமும் நிவ்ருத்திபுவனம். அங்கிருக்கு மீச்வரனுக்கும் நிவ்ருத்திநாதனென்று பெயர். (க௱எ௰)

இவ்வாறு ஸ்தானபேதத்தாலும் கிருத்ய பேதத்தாலும் பதிபேதமென்றறிக.

நிவ்ருத்த ஸ்தூலஸம்ஸாரா யயா ப்ரா

ப்த்யவலக்ஷணா । ப்ரதிஷ்டா ஸா ப்ரதிஷ்டா

ஸ்தாநம் தத்ரஸ்தஸ் ததாஹ்வய: ॥ க௱அ௰

இவ்வித கைவல்யாபிமுகனைத் திரும்பினவனுக்கு மீட்டுந் தாழ்ந்த சம்சார மார்க்கத்திற் கதியில்லாமல் தடுத்து நிறுத்துகிற படியால் அந்தச் சத்திக்குப் பிரதிஷ்டையென்று பெயர். அந்த ஸ்தானமும் பிரதிஷ்டையே! அதற்கதிபதியும் பிரதிஷ்டாவானென்னப்படுவார். (க௱அ௰)

த்ருஷ்ணாபக்ஷவிஷயம் யயாஜ்ஞானம் ததா

த்ருணோதி । ஸாவித்யாஸ்தாநமேதஸ்ய

வித்யேசாஸ் தத்பதயா: ॥ க௱௯௰

எந்தச் சத்தியால் அணுவிற்குச் சப்தாநுமானங்களை விட்டு நேரிட ஸ்வரூப சாக்ஷாத்காரத்தைக் கொடுக்கிறரோ அந்தச் சத்திக்கு வித்தையென்று பெயர். அந்த ஸ்தானமும் வித்தையே! அதிபதியும் வித்யேசர்.

ஸர்வது:க்கப்ரஶமநம் யயா ஸ்யாத் க்ஷ
ரூபேண ஸா ஶாந்திர: । ஸா ஶாந்தி: ஸ்தாநமப்யுக்தி
த்ஸ்யாத்கர்த்தா ஸோ(அ)பி ஶாந்திமாந் ॥ ௧௭௦

எந்தச் சத்தியினால் அணுவிற்குச் சகல துக்கங்களையுஞ் சாந்தி செய்கிறரோ அதற்குச் சாந்தியென்று பெயர். அந்த ஸ்தானமும் சாந்தியே! அதைச் செய்பவரும் சாந்திமான். (௧௭௦)

இவ்வாறு விந்துகலைகள் நாலையுஞ் சொல்லி யினி நாதகலைகளைச் சொல்கின்றார்.

உர்த்வாதோ விஷயாதோ ஶுத்தா
ந்ருஸ்ய ஶுத்திர: । ஶுத்த்யர்த்தம் ப்ரயதேத வி
தோயாஸ்மிந் ஶுத்தத்த்வத: ॥ ௧௭௧

தா ஜ்ருபிகாஸ்ய ஸ்த்ருஷ்யா நம் த்ருதா நீஸ
ஸ்திஸ்ருஷ்வ । ௧௭௨

முமுக்ஷுவான ஆன்மாவிற்கு மேலுங் கீழுமெய்ந்துண்டாகும் பிரகாசமானது எந்தச் சத்திகளாலே பெரிதாகவும் மிகப்பெரிதாகவும் மிகமிகப்பெரிதாகவும் செய்யப்படுகிறதோ அந்தச் சத்திகள் மூன்றிற்கும் வ

ரிசையாக இந்திகை தீபிகை ரோசிகையென்று பெயர். அந்த ஸ்தானங்களுக்கு மதேபெயர். அந்தச் சத்தியுள்ளவருக்கும் இந்திகாவான் தீபிகாவான் ரோசிகாவான் என்றுபெயர். (களகற—களஉ)

மேல் மோசிகை ஊர்த்வகை என்னுஞ் சத்திகளின் வியாபாரஞ் சொல்கின்றார்.

ஸர்வஜ்ஞத்வாதியோகேऽபி நியோஜ்யஸ்ய
ஜ்ஞாநஸ்ய தத: । ப்ராதிக்ருதஸ்யாஸாஸ்த
ரோதிகா தத்வதஸ்து ॥ களங

மோசகஸ்ய க்ரியாஜ்ஞேயா யயோர்த்வம்
க்ஷேபிகா ஹி ஸா । ஸாத்வாந்தா தத்வதோ ஜ்ஞேயா
தத்ஸம்ஸ்த்வாத்மகா ஹி ஸா ॥ களச

வித்யேசர் முதலான வதிகாரிகளுக்குச் சர்வஞ்ஞத்வாதி குண மிருந்தபோதிலும் மலாம்சஞ் சிறிதிருப்பதா லுண்டான பிரேரிக்கப்படுந் தன்மை யாதொருசத்தியாலே விடுவிக்கிறதோ அதற்கு மோசிகையென்றுபெயர். அந்தஸ்தானமும் மோசகமென்னப்படும். அதைச் செய்பவரும் மோசகராவர். எந்தச்சத்தியாலே அவ்வா றநுக்கிரகிக்கப்பட்ட வாத்மாவை ஊர்வரணைச் செய்கிறதோ அந்த சத்திக்கு ஊர்த்வகையென்று பெயர். அந்தஸ்தானமு மூர்த்வக மென்னப்படும். அதற் கதிபதியும் ஊர்த்வகேச ரென்னப்படுவர். (களங—களச)

யேபி தத்வவிதானேன ஶைவஸாயுஜ்ய
யோகத: । தேஷாம் ஸ்திதாவ் ஸம்பூர்ணம்
ப்ராப்யாஸ்தி பரமம் பதம் ॥　　　　கஎரு

நவஸம்ப்ராப்த ஸாயுஜ்யா ஸாக்ஷாத்
ஸாதாஶிவாத: ।　　　　கஎருஉ

யாதொரு பெயர்கள் மேற்சொல்லும் பலவித புவனங்களிற் கூட்டிவைக்கும் பலவித வுபதேசரூபமான சைவதீக்ஷா ஞானயோகத்தால் எந்தப் பதத்தையடைந்திருக்கிறார்களோ அவர்களந்தப்பதத்திலிருக்கும்வரையில் ஒப்பற்ற ஆனந்தமயமான போகத்தை யடைந்து பின்பு பரமான சிவசமான சாயுஜ்யபதத்தை யடைகிறார்கள். ஆனாலவர்கள் நிரதிசய நிர்வாணானந்த நிஷ்டர்களாகையாற் சிருஷ்டியாதி கிருத்யங்களொன்றுஞ் செய்கிறதில்லை.　　　　கஎரு—கஎருஉ)

இதி ஸாதாஶிவம் தத்வம் வ்யாக்யாதம்
ஸமாஸத: ।　　　　கஎசா

இவ்வாறீஸ்வர தத்வத்திற்கு மேல் நிஷ்கள சிவதத்வம் வரையிற் சதாசிவ தத்வஸ்வரூபஞ் சுருக்கமாக வுமக்குச் சொல்லப்பட்டது.　　　　(கஎசா)

அவரது சத்திதத்வமு மதற்கு ளடங்கின தென்கிறார்,

ஸக்திரேவ வ்ருத்திதேஹஸ்தா கர்த்ருயோகத: | கர்த்ருத்வேச்சாதி விஷயம்
நிஷ்கேஷாந்ருத்ய வர்த்ததே || கஎஎ

சத்தியு மிவ்வாறே வியாபகையா யிருக்குமென் றறிக. இவ்வாறு சொல்லிய முறையே யிந்தச் சதாசிவநாதர் ஸ்திதியாதி வியாபார வசத்தினாற் பஞ்சப்ரம்ம சம்பந்தங்களான தாரை ஸுதாரை தரணீமுதலான முப்பத்தெட்டு கலைகளுடன் கூடியிருப்பர். அந்த பஞ்சகிருத்யமு மவருடைய இச்சையினாலே முதலி லேற்பட்டது. கிருத்ய மில்லாதவேளையி லெப்போது மவர் நிஷ்களரே. (கஎஎ)

ஹலிதி: ப்ராயாமிகோ ப்ருதி விஷ்ட்ரா
ஸிம்ஹ கலாஷய: | ஸ்தாணகா ராக்ஷஸாக்ஷ்யா
ஸ்ருஷ்ட்யா நாக்ஷகோடி ரயோஷணே || கஎஅ

ப்ருத்வி பிரகிருதி மாயை சுத்தவித்தை விந்து நாத கலைக ளொன்பது இவை பந்த ஸ்தானங்களாகும். இதிற் பார்த்திவ பிராகிருத மாயாதத்வங்கள் மூன்றும் பாசபந்தமா யிருக்கும். நாதகலைகளில் நடுவிலிருக்கும் ரோசிகையென்னுங் கலைக்குக் கீழ்ப்பட்ட இந்திகை தீபிகை கலை யிரண்டும் பிந்து கலை நான்கும் சுத்தவித்தைமாயை பிரகிருதி பிருத்வீ ஆகப்பத்தும் மூக்கியமான பந்தஸ்தானமென்று சிலர்சொல்வார்கள். விந்து நாத கலையொன்பதும் சுத்தவித்தையும் இந்தப் பத்து

ம் முக்கிய பந்தஸ்தானமென்பர் சிலர். நாதகலை முடிவு வரையிற் கீழ்ப்பட்ட ஸ்தானங்களெல்லாம் நிரதிசய சர்வஞ்ஞத்வாதி பாரமேஸ்வர ஸ்தானத்திற்குப் பிரதிபந்தக மாகையாற் பாசங்களே பந்தஸ்தானங்க ளாகுமென் றறிக. (கஎஅ)

இனி முன்சொன்ன ககனேசர் முதலானவர்களின் ஸ்தான மிவ்வளவு அளவுள்ள தென்பதைக் கூறுகின்றார்.

ஊர்த்வம் மாயாவித்யயோர் யத்து ககனேசாதயோ
முக்தாஸ்தேஷாம் புரா விதிதாஸ்தத்ர வக்ஷ்யதி
ப்ரமாணம் மாயாதத்வஸ்ய லக்ஷணா ‖ கஎகூ

வித்தையென்ப திவ்விடத்தில் மாயையென் றறிக. மாயைக்குக் கீழே கலைக்குமேலே ககனேசர்முதலான ருத்ரர்களின் ஸ்தானங்களென்று சாஸ்திரங்களிற் சொல்லப்படுகிறது. அந்த மாயைக்குங் கலைக்கு நடுவினளவு இவ்வளவென்று புத்தியாற் குறிப்பா யறியவேண்டியது; மாயாதத்வ மனந்தமென்று சொல்லுகிறபடியால். (கஎகூ)

ஏதயோர் மத்யே ஹ்யேவம் க்ரமேண
ஸஹ யோநிநா | விஷயம் ப்ராக்ருதே
ஜ்ஞேய ஸம்க்ஷிப்த ஸ்யாஸ்ய யோ ‖ கஅ௦

இவ்வாறு சொல்லிய முறையே வுற்பத்தியுள்ள சுத்தாசுத்த மார்க்க மிரண்டிற்கு முற்பத்திக்குப் பிரதி

லோமமாகச் சுத்தாத்வாவிற்குப் பராசக்திவரையிலும் அசுத்தாத்வாவிற்கு மாயைவரையிலும் ஒடுக்க மறியவேண்டியது. (கஎ0)

சுருக்கமாகச் சொன்ன சங்காரக்கிரம விசேஷத்தை யறிய இச்சைகொண்டு முனிவர் பிரச்னை செய்கிறார்.

வ்ருத்தஸ்யாஸ்ய ஸமஸ்தஸ்ய விஷய ஸ்ஸ
காலம் கியாந் | தத்ஸமஸ்தஸ்ய ஸம்பவது
ஸம்ஹர்துர் ஸர்வதர்ஸிந: || கஎக

பகவானே! தேவரீர் சர்வாகமார்த்தமுந் தெரிந்தவராகையால் வியஸ்தமான பிரகிருதிமுதலான அசுத்தமார்க்கத்திற்கும் சமஸ்தமான சத்தி தத்வம்வரையிலிருக்கும் சுத்தமார்க்கத்திற்கும், சங்காரமானது எவ்விதமாய் எத்தனைகால முண்டாயிருக்கும்; அதைத் தெரியச் சொல்லவேண்டும். (கஎக)

இதற் குத்தரம்.

ஜகாஸாதே ஸமஸ்தஸ்ய வ்ருத்தஸ்யா
வாஸநா யத: | ஸமஸ்தாதே வ்ருத்தம் ஹி
தேஷ காஸ: க்ஷீராதேநாவ யாயதோ || கஎஉ

எப்போது மநேக புருஷர்களுக்குப் போகசாதனமான தனுகரண புவனாதிகளை யுண்டாக்குவதாற் குறைந்த சத்தியுள்ள மாயா தத்வத்திற்கு மீட்டும் காரியங்க

ளை யுண்டாக்கும்படியான விசித்ரசத்தி கூர்மையாகும் பொருட்டும், சம்சார மார்க்கத்தி லிளைப்படைந்த சம்சாரிக ளிளைப்பாறும் பொருட்டும், வியஸ்தமான பிரகிருதி முதலானவற்றிற்கு நடுவி லவாந்தரப் பிரளய முண்டாகின்றது. தன்னிச்சையால் பரிக்ரகிக்கப்பட்ட சதாசிவாதி சகள ரூபங்களி னுபசங்கார காலமான மகாப் பிரளயத்திற் சமஸ்தமான சத்தியந்தமான சுத்தாத்வாவிற்குப் பிரளய முண்டாகிறது. சிருஷ்டியுமிப்படியே வியஸ்த சமஸ்தக் கிரமமாக வுண்டாக்கும் பராபரர்களான வித்யேஸ்வரர் முதலான அநேக அதிகாரிகளாலே செய்யப்பட்ட படியால் வியஸ்தமென்றும் பரமேஸ்வரர் இச்சையாற் பிரேரிக்கப்பட்ட அனந்தாதிரூபமாக விருந்து சிருஷ்டிக்கிறபடியால் சமஸ்தமென்றும் சொல்லப்பட்டது. இந்தப் பிரளயத்தின் காலமெவ்வள வென்னில்? இதற்கு ஸ்திதி பூர்வமாதலால் ஸ்திதிகாலத்தி னளவை முன்னஞ் சொல்கின்றேன் கேளும். (௧௮௨)

𑌚𑌤𑍁𑌰𑍍𑌯𑍁𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋
𑌦𑌿𑌨𑌂 𑌜𑌗𑍁𑌃 । 𑌨𑌿𑌶𑌾 𑌤𑌾𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾
𑌤𑍍𑌰 𑌜𑌾𑌗𑍇𑌨𑌾𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾𑌜𑌯𑍇 ॥ ௧௮௩
𑌵𑌿𑌧𑍇𑌯𑌾𑌵𑌤𑍍𑌸𑍍𑌯 𑌶𑍇𑌷𑍇𑌣𑌷 𑌵𑍍𑌰
𑌶𑍍𑌰𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑌿𑌵𑌾𑌯𑌤𑍇 । ௧௮௪

கிருதயுகமுதலான நான்குயுகமு மாயிரமுறை தி

ரும்பின் பிரமாவிற் கோர் பகலாகும். அவ்வளவே இரவும். ஆகக் கூடிய தினங்கள் மூன்னூற் றறுபதானால் ஓர்வருஷம். அவ்வருஷம் ஒன்று பத்து நூறு இது முதலாக வருங் கணக்கில் பரார்த்தமென்னுங் கணக்கு வரையி லானால் இந்த வியஸ்தமான அசுத்தாத்வாவிற்குப் பிரளயமாகும். இந்தப் பிரகிருதிமுதலான உபாதானகாரணங்கள் சிருஷ்டிக்கு விபரீதமாய்த் தலைகீழாகச் சம்ஹரிக்கப்படும். (க௮|௩ — க௮|௨)

அப்போதும் அதிகாரிக ளெவ்வித மிருப்பவ ரெனில்?

ததா ருத்ரா: ஶதம் வீரஶ்ரீகண்டாத்ய
ப்ரயாநவா: | ஶக்த்யாக்ருஷ்ட ஜகத்ஸர்வ
ஸ்தாம் ஸம்ருத்தேஷ்வாம்ஶுவிதாநக: || க௮|௪
ப்ரக்ருதி ஸம்ஶயா து காலேன அஸ்ய
போகே ஸமர்த்தே || க௮|௫

அப்போது சதருத்ரர்களும் வீரபத்ர ஸ்ரீகண்டதேவரும் குரோதேசர் சண்டர் சம்வர்த்தர் முதலான பிரதானாதிகாரிகளும் தங்களா லதிஷ்டிக்கத் தக்கதாயும் அப்போது சத்திருபமாதலாற் சூக்ஷ்மமாயு மிருக்கின்ற ஜகத்தையும் பிரகிருதியி லிராநின்ற கர்மவாசனை யுள்ளவர்களாயும் க்ஷிதிமுதல் கலையளவாயி லிருக்குந் தத்வங்களா லுண்டாக்கப்பட்ட சூக்ஷ்மதேக முள்ளவர்களாயு மிருக்கின்ற அணுக்களையும் தமது சக்தியா லதி

...டித்துக்கொண்டு அந்தப் பிரளயகால முடிவுவரையி லிருப்பார்கள். (௧௮௪—௧௮௫)

ஸ்ருஷ்டௌ ஸம்ஹ்ருதாநாம் அநந்தாத்யா வித்யே-
ஶ்வரா: | கார்யேஷ்வதிக்ருதாஸ்ஸர்வே ஸ்வா-
திகாரம் ப்ரகுர்வதே || ௧௮௬

பின்பு அவாந்தர சிருஷ்டி யாரம்பகாலத்திற் பரமேஸ்வர னிச்சையாலேவப்பட்ட அனந்தாதி வித்யேஸ்வரர்களாற் பிரேரிக்கப்பட்ட மண்டலேசரொன்று மதிகாரி, ருத்ரர்களாலே பிரவர்த்திக்கப்பட்டவர்களாய்க் கொண்டவர்கள். அந்தக் காலத்தில் ஜகத்தை யுண்டாக்கித் தங்கள் தங்களதிகாரத்தைச் செய்வார்கள்.

இவ்விடத்திற் பிரகிருதியிற் கர்மவாசனை யிருக்குமென்று சொன்னதிற் சந்தேகித்து ருஷி வினவுகிறார்.

கர்ம யத்தர்மாத்யாத்ம குணத்வேந தத
ஸ்திதம் | குணிநோ ந குணோபைதி
ப்ரக்ருதௌ வாஸநா கதம் || ௧௮௭

தருமாதரும ரூபமான கன்மங் குணமாதலாற் புத்தியிலிருக்குங் குணியைவிட்டுக் குண நீங்காதாகையாற் பிரகிருதியி லிருக்குமென்று எவ்வாறு சொல்லலாம். (௧௮௭)

இதற் குத்தரம்.

வைக்ருதஸ்யாபி கர்மண: கார்யதா

[illegible] ॥ கஅஅ

கன்மம் புத்திகுண மென்பதும், குணியைவிட்டுக் குணம் நீங்காதென்பது முண்மை. ஆனாலும் சரீரேந்திரிய விஷய போக பூமிகளெல்லா மவ்விடத்தி லிருப்பதா லுபசாரமாகச் சொல்லியது. (கஅஅ)

இவ்வா றுபசாரமாகச் சொல்லுவதற்குத் திருஷ்டாந்தம்.

ஆதாரே காரணே கார்யே ஸஹீதே வா விகாரகே । [illegible]
[illegible] லக்ஷணாம் ஸம்ப்ரதாயஜா: ॥ கஅகூ

முக்யார்த்தஞ் சொல்லக்கூடாத விடத்திற் கௌணவிருத்தியாகச் சொல்லு மர்த்தத்தை லக்ஷணையென்று தெரிந்தவர் சொல்கின்றார்கள். அஃதெங்ஙனமென்னில்? கட்டில் கூப்பிடுகிற தென்றவிடத்தில் கூப்பிடும் பிள்ளைக்குக் கட்டி லாதாரமாகையா லாதாரத்தி லக்ஷணை. நெல்லைப் பெய்தானென் றவிடத்தில் அதற்குக் காரணமான மழையில் லக்ஷணை. பஞ்சு வஸ்திரமென் றவிடத்துப் பஞ்சின் காரியமானதில் லக்ஷணை. கங்கையி லிடைச்சேரியென் றவிடத்துக் கங்கையின் சமீபமான கரையில் லக்ஷணை. பிக்ஷை யிருக்கச் சொல்லுகிறதென் றவிடத்துப் பிக்ஷை யிருந்த அன்னவியஞ்ச

ஞதிதிருப்தியேதுவாதலால் உபகாரலக்ஷணை. சிங்கம்
பிள்ளை யென்றவிடத்துச் சிங்கத்தின் தருமமான சௌ
ரியாதிகுணமிருப்பதால் தருமாநுகார லக்ஷணை. சுமக்
கிறவன் மாடென்று மிடத்து மாடுபோல் முதுகில் சும
ப்பதால் ஆகாராநுகாரலக்ஷணை. இவ்வாறு முக்கியார்த்
தஞ் சொல்லக்கூடாத விடங்களிலெல்லாம் உபசாரமா
க லக்ஷணை சொல்கின்றார்கள். (௧௮௯)

ஏவம் குணாதிஸ்ருஷ்டாநாம் பரா
ர்த்தே குணகாரணே । கலா லயேத் க
லா மாயா ஸ்வாதிகாரபரக்ஷயே ॥ ௧௧௦

தந்நிவ்ருத்தௌ நிவ்ருத்தாஸ் தே மாயாதி
காரிணஃ । ஸம்ஹ்ருதிஸ்ருஷ்டிகார்யஸ்ய
மாயிகாரஸ்ரயாத்மநஃ ॥ ௧௧௧

இப்படிக் குணமுதலான சிருஷ்டிகட்குப் பரார்
த்தமென்னும் காலமுடிவில் லயமுண்டாகிற தெப்படி
யென்னில்? இந்தக் குணங்கட்குக் காரணமான அவ்ய
க்த மானது கலையி லொடுங்குகிறது. அந்தக் கலை தன்
னதிகாரத்தை விட் டொழிந்த மாயையி லடங்குகிறது.
மாயாதிகார மொழிந்தவுடனே அந்த மாயாதிகாரிகளி
ன் சிருஷ்டியாதி யதிகாரம் மாயையை யாச்ரயித்த தா
கையா லவர்களு மொழிந்திருக்கிறார்கள். (௧௧௦—௧௧௧)

இப்படி யசுத்தாத்வாவின் சங்காரஞ் சொல்லியா
யிற்று. இனி, சுத்தாத்வாவின் சங்காரஞ் சொல்கின்
றார்.

ஏவம் மந்த்ரேச முக்யேஷு விமுக்தேஷ்வ
திகாரத:। வித்யாதத்வம் ஸதாதத்வம் தத்ஸ்
திதே வைந்தவம் த்வநௌ॥ ௧௮௧

நாதஸ்து பராசக்தௌ சக்திஸ்து ஸ்வபரே
ச்வர: ॥ ௧௮௨

இவ்வாறு மந்திரேசர் முதலான அனந்தாதி மந்திர மகேஸ்வரர் தஙக ளதிகார மொழிந்தபடியாற் பரகைவல்யத்தை யடைந்தபோது சுத்த வித்யாதத்வ மானது சதாசிவதத்வத்தி லொடுங்குகிறது. அந்தச் சதாசிவதத்வம் விந்துவிலும், விந்து நாதத்திலும், நாதம் பராசக்தியிலு மொடுங்குகிறது. கலையின் வ்யாபாரத்தை யெல்லா மொடுக்கிக்கொண்ட அந்தச் சக்தியை சாக்ஷாத் பரமேஸ்வரர் தமக்குள்ளே உபசங்காரஞ் செய்து கொள்ளுகிறார். (௧௮௧—௧௮௨)

ஸம்ஹார: விச்ராமமேவம் சாயாயாஸ்து
பரஸ்பர:। ஜ்ஞாநசக்த்யா ஸ்வசக்த்யா ஸ்வா
பா ஸ்ருஷ்டிம் ப்ரவர்த்தயேத்॥ ௧௮௩

இந்தப் பிரகாரம் பரமேஸ்வரர் சம்சாரிகளுக்கும் மாயைக்கும் இளைப்பாற்றுதற் பொருட்டுத் தமது ஞானசத்தியாலே பிரளயத்தை யுண்டாக்கி மறுபடியும் முன்போலவே சிருஷ்டியிலே பிரவர்த்திக்கிறார். (௧௮௩)

ஏவம் தத்த்வாநி பாவாஶ்ச புவநாநி
வபூம்ஷி ச। ஶுத்தாஶுத்தாத்வநோர்லீநா
ப்ராக்ப்ராக்தாநி ஸமாஸத:॥ க௱௪௨

இந்தப்படி சுத்தாசுத்தாத்வாக்களிலே தத்வங்களும் பாவங்களும் புவனங்களும் சரீரங்களும் தத்தங் காரணங்களி லிலயிக்குமென்று சுருக்கமாகச் சொன்னேன்.

பிரச்னை.

வித்யா ஸதாஶிவஶ்சைவ பிந்து-
நாதௌ பராக்ய காரணே। பஞ்சஸ்கந்தே
பராமர்ஶ: பாவா: ப்ரத்யயா: ஸ்தி-
தா:॥ க௱௫௩

சுத்தாத்வாவில் பாவங்களுக்கு லயஞ்சொல்லியது, அவ்விடத்து வித்தை சதாசிவம் விந்து நாதம் பராசக்தி என்று ஐந்து ஸ்கந்தரூபமான சுத்தாத்வாவிலே பாவங்களும் பிரத்யயங்களு மெங்கே யிருக்கும். (க௱௫௩)

இதற் குத்தரம்.

நாதஸ்தே ஸ்வக்ஷு: ககாராதி பாமயந்தே
ஸம்பந்நாத்மநே:। ஸ்து ஶக்தௌ பஞ்சகே
நாத: பஞ்சதத்த்வ ப்ரயோக்தே॥ க௱௬௨

ப்ரயாதாதீ ...

ந்ரு ஸூத்ரஸூக்ஷ்மகஃ। ஶைவே ஜ்ஞாநஜைவா
ஜைவா பௌஸ்ஸா ஸாவாந்யயஃ ஸ்மிதாஃ॥ ௧௧-௭
பஞ்சஜந்த்ர தநந்ஜைவஃ ஸ்மித ஸ்தஜநா
த்ர பஞ்சிகே। ஸங்க்ஷ்ஸங்கிதைஜ்ஜா ஜ
ஞ்ஜுஸா ஜஞ்ஜாஃ ஸ்ஸ ஙெஷ ஸம்ஸ்மி
தாஃ॥ ௧௧-௮

சுத்தாத்வா பஞ்ச ஸ்கந்தமானபோதிலும் அதில் விந்து தத்வ மடங்கி யிருக்கிறபடியால் பாவப் பிரத்தியயங்களு மிருப்பதற்கு விரோதமில்லை. அஃதெவ்வாறென்னில்? சூக்குமமாகிய பராநாதமே கலை காலம் ராகம் வித்தை புருடன் என்னும் ஐந்து தத்வங்களுக் காச்ரயமாய்ப் பஞ்சகலையென்று பெயர்கொண்டு ஸ்தூலநாத மாகிறது. விந்துவானது அவ்வியக்தம் குணதத்வம் புத்திதத்வம் ஆங்காரம் என்னும் நான்குபாசக் கிரந்திக் காதாரமாய்ச் சதுஷ்கலையென்னப்படுகிறது. அதில் ஆங்காரத்தில் மனமுதலான இந்திரியங்களும், புத்தியில் முன்சொன்னபடி பாவப் பிரத்யயங்களு மிருக்கும். பஞ்சமந்திர மூர்த்தியான சதாசிவ தேவர் பஞ்ச தன்மாத்திரைகளை யதிஷ்டித்துக்கொண் டிருப்பர். சூக்கும தேகத்தை யுண்டாக்கு

ம் பூதங்களில் மந்திரேசர்கள் வியாபித் திருப்பர். பிருதிவியாதி ஸ்தூலபூதங்களிலே மந்திரங்கள் வியாபித்திருக்கும். இவ்வாறு சுத்தாத்வாவு மிவற்றையெல்லா முள்ளடக்கிக்கொண் டிருக்குமென்பது கருத்து. (ககூகூ௦—ககூஎ௨—ககூஅ௦)

உரைத்த வித்யாபாதத்தை முடிக்கவும், மேலுரைக்கவேண்டிய கிரியாபாதத்தைச் சூசிப்பிக்கவும் ஸ்லோகஞ் சொல்கின்றார்.

> இதியத்ரவிரோதி யாதேவீஜாத
> த்ருஷ்டம் பஶுஶாஸ்த்ர தத்வத்ருஷ்டி: பாஶ
> ஜாலம் ஸமஹரத் தத்பஶ்ச நிசிதம் ச
> க்ஷ்மஜாநா க்ரியாதோரா வதவிதத ஸ
> த்ரிபாஶவீர்ய ஜக ஸம்பத்|| ககூகூ௨

இவ்வாறு சொல்லப்பட்டதாயும் பசுசாஸ்திரங்களிற் பதிந்த ஞானமுள்ளவர்களா லறியப்படாததாயுமிருக்கின்ற மலம் கன்மம் மாயை முதலான மிகுந்த பாசங்களாகிய வலையை நீக்குவதற் கேது வேதென்னில்? மேற்சொல்லுந் தீக்ஷாக் கிரமத்தினாலே பிரகாசமான தடையற்ற வல்லமையுள்ள சிவமந்திர சம்பத்தாகும் தீக்ஷாக் கிரியாநுஷ்டானத்தினாற் கூர்மையான தனது சத்தியுள்ள சிவமந்திர சம்பத்தானது மலமுதலான பா

சங்கஐப்போக்கி மேலான சிரேயஸிற்கு நிமித்தமா குமென்பது கருத்து. (கஙகூ-உ)

பதின்மூன்றாவது, அத்வ ப்ரகரணம் முற்றிற்று.

ம்ருகேந்த்ர வித்யாபாதமுடிந்தது.

ம்ருகேந்த்ராகம வித்தியாபாதம்
படலம்—கங—கூடிய
ஶ்லோகம்—சசநிஉ.

சமஸ்கிருத உரையாசிரியர் வாக்யம்.

[illegible] || க

இந்த மிருகேந்திராகம வியாக்யானத்தில் ஏதாவ தொருசொல் உபயோகமில்லாததாயும் பிரகிருதமா காமலு மிருந்தபோதிலும் அது சமயத்திற்குத் தக்க

படி உசிதமான பிரகிருத வஸ்துவை விசேஷித்து விசாரிக்கும் பொருட்டாதலாற் பிரகிருதத்தில் நிஷ்பிரயோசன மாகாது. ஆதலா விதனிடத்தில் இந்தச் சாஸ்திரார்த்தந் தெரிந்தவர்களுக்கு மிகவு மன்புண்டாகக் கடவது. (க)

ஶாங்கரகண்டி: ஶ்ரீவித்யாகண்டாதுபா-
த்தஸம்போத: | நாராயணகண்ட ஏதாம்
வ்யதாந்ம்ருகேந்த்ரவ்ருத்திமிமாம் || ௨

சங்கரகண்டருடைய குமாராராகிய பட்டவித்தியா கண்டரிடத்தி லநுக்கிரகம்பெற்ற அவர் குமாரானே பட்டநாராயணகண்டரென்பவ ரிந்த மிருகேந்திராகமத்திற் குரைசெய்தார். (உ)

இவ்வாறு பட்டவித்யாகண்டருடைய குமாரர் பட்டநாராயணகண்டர் செய்த மிருகேந்திர விருத்தி முற்றிற்று.